உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்த்

# திரிபந்தாதி

## மூலபாடம்

(8174)

இஃது

இராமானுஜபுரம்

தாண்டவராயவுபாத்தியாயரவர்கள்

குமாரர்

சிவலிங்கவுபாத்தியாயனென்கின்ற

**சிவப்பிரகாசவுபாத்தியாயரவர்க**

ளாலியற்றியது.

கும்பகோணம்

**ஆ-கும்பநாதசெட்டியாரவர்கள்**

நக்கன்பாடி

**வெ. ச. மாணிக்கம்பிள்ளை**

யவர்க

ளிவர்களால்

கும்பகோணம்

"லார்ட் ரிப்பன் அச்சாபீசில்"

பதிப்பிக்கப்பட்டது.

சர்வசித்து௵

கடகரவி.

இதன் விலை அணா 2.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.

உ

## சிறப்புப்பாயிரம்

திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவான்

### மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்களியற்றிய

**கட்டளைக்கலித்துறை.**

தேடுமரியயர்க்கெட்டாதிருந்துஞ் சிற்றம்பலத்தே
யாடுமழகர் தென்னூர்ப்பரமரடிக்கணன்பும்
பீடும்படைத்த சிவப்பிரகாசப்பெயர்க்கவிஞ
னூடுமந்தாதிகலித்துறை நூறு நவின்றனனே.

—o—

கும்பகோணம் புரோவின்சியால் கல்லீஜ்
தமிழ்ப்புலவர்

### திரிசிரபுரம் தியாகராஜசெட்டியாரவர்களியற்றிய

**கட்டளைக்கலித்துறை**

மாவூர்மழைமுகின் மேவூர்பொன்மாடக்கவின்மலியு
மாவூரமர்தரு சேவூர்பரமரடியிணையி
னாவூரனிய செம்பாவூரந்தாதிநவின்றணிந்தான்
மாவூர்சிவப்பிரகாசனெனும் பெயர்வாய்ந்தவனே.

—o—

கும்பகோணம் புரோவின்சியால் கல்லீஜ்
தமிழ்ப்புலவர்

### உத்தமதானபுரம். வெ. சாமிநாதையரவர்களியற்றிய

**அறுசீரடியாசிரியவிருத்தம்.**

குருத்தவளமாடமலிகுடபுரத்து மணிகூடக்கோமானன்பர்
வருத்தவளற்றழுந்தலற வெடுத்தருளும் பசுபதியின் மலர்த்தாண்மீது
மருத்தவளக்கலித்துறைநூற்றந்தாதியெனுமலங்கலணிந்தான்பாரிற்
றிருத்தவளக்கரிற்புலமைச்சிவப்பிரகாசப்பெயர்கொள் சீரியோனே.

பூமானுறையுங்குடபுர மேவிய புண்ணியனந்
தாமானுறையுமிடத்தான் பசுபதித்தாளிணைக்கி
ராமானுஜபுரத்தாண்டவராய னினிதளித்த
கோமான்சிவப்பிரகாசனந்தாதிகுயிற்றினனே

### கும்பகோணம் வைசியகுலதிலகராகிய ஆறுமுகசெட்டியாரவர்கள் குமாரர்

## கும்பநாதசெட்டியாரவர்களா

**லியற்றியது.**

---

அம்புலி கண்ணிக்கொன்றை யாடரவழலணிந்து
வெம்புலி தொழுமன்றாடு வித்தகன்விமலமோனன்
கம்புலி விளங்குமுக்கட் காரணன்கரணங்கண்டோ
னம்புலி ரிகவேறேங்க வழனடியாவூரத்தன்

அன்னவனருளையல்ல தல்லலைசென்றுட்கொண்டோன்
பன்னகவேந்தென்றன்ன மதியினைப்படைத்தவல்லோன்
றன்னகத்தரனைப்போற்றுந் தாண்டவராயபண்டி
தன்னகங்களிக்கவந்தோன் றனிச்சிவலிங்கப்பேரோன்.

ஆயவனூர்மேய வண்ணலைத்துதிப்பானெண்ணி
பாய்புலிகரிமான்வேங்கை பரவுறுநாகநாகந்
தோய்சினகரத்தின்வாழுஞ் சோதியைத்திகழந்தாதி
வாய்மையாய்மணமறாத மாலையாய்த்தொடுத்தான்மன்னோ.

ஆதியாய்நின்றிலங்கு மாவூர்ப்பசுபதியந்
தாதியையச்சேற்றியலங்கரித்தான் மேதினியின்
மாணிக்ககன்பணைசூழ் மாநக்கன்பாடியின்வாழ்
மாணிக்கவள்ளன்மகிழ்ந்து

மக-ா-ா-ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்
மாணாக்கருளொருவராகிய
காரைக்கால்

## அ. சவேரிநாதம்பிள்ளையவர்களியற்றிய

### கட்டளைக்கலித்துறை

சீராகடுக்கை முடியான்பசுபதிச்செம்மலுக்கே
காராதுடைவையிராமானுஜபுரக்காவலன்பூந்
தாரார்புயன்புகழ்த்தாண்டவராயன்றவமணியா
நாரார் சிவப்பிரகாசனந்தாதிநவின்றனனே.

பூவூர்புயத்தன் சிவப்பிரகாசப்புலவனின்னு
லாவூர் வனமணியாவூருமண்ணலுக்காற்றிய தாற்
பாவூர் புவியுளர்க்கெய்தரிதாகிய பண்ணவர்செந்
நாவூர் புகழெய்தப்பெற்றனவில்வதினியெவனே.

—()—

இந்நூல்செய்தவா மாணாக்கருளொருவரும்
வேங்கடாசலபிள்ளை குமாரருமாகிய
நக்கன்பாடி

## மாணிக்கம்பிள்ளையவர்களியற்றியது

சீர்மலிகடற்றுகில் சேரமருங்குடுத்த
பார்மகண்முகமெனப் பகர்சோணாட்டிற்
பலவளச்சிறப்பும் பரவும் பான்மையாற்
றிலகம்போலு மாந்திருவாவூர்ப்
பசுபதீச்சரப்பொற் பருப்பதாலயத்துட்
சுசிதருகங்கையுந் துலங்குதிங்களுஞ்
சங்கவெண்குழையுஞ் சருப்பாபரணமுந்
துங்கமாக்கோடுங் கொல்புலித்தோலும்
வைமழுமானு மலைதருமானு
மெய்யிற்றாங்கி மேதினியிடத்த

பல்லுயிரோம்பும் பசுபதி நாதன்
வல்லுளியனமெனு மாலயன்காணாப்
பாததாமரையிற் பகரரு திரிபந்
தாதியெனும்பா வணிந்து புனைந்தனன்
திருக்கிளருலகஞ் செப்பு பன்னூலின்
பொருட்பெருக்கதனிற் புகரற மூழ்கிக்
கற்றறிவுடைமையைக் கடைப்பிடித்ததனுட்
டுற்றபஃறேவனை யொப்பநாடிச்
சிவபிரானேமுதற் றேவெனத்தெளிந்தே
யவனடிக்கென்று மன்புகூரகத்தோன்
தரளத்தொகுதி தரங்கப் புடைப்பாற்
புரளப்பொலியும் பொன்னிமாநதியின்
வடாதுபாங்கரின் வானோர் விரும்பும்
விடாயைத்தீர வீங்கிள நீர்தருந்
தெங்கிளஞ்சோலையுஞ் செறிதருமுட்டாட்
பங்கேருகத்தடப் பழனமுஞ் சுலாவு
மிராமானுஜபுர மென்னுநகரிற்
பராவருந்தத்துவப் பண்பொருங்குணர்ந்தோன்
கல்வியிற்கடலன் கருணையுறையுளன்
செல்வப்பெருக்கன் சிவானந்தவெள்ளத்
தீண்டயாவரையு மீடேற்றம் புரியுந்
தாண்டவராயன் றவத்தவதரித்தோ
னெளியேன்றனக்கு மென்போலியர்க்குந்
தெளிவுறச்செந்தமிழ் தெருட்டுநங்குரவன்
சிவனடியருச்சனைச் சிறப்பாதிகளைப்
பவமறத்தெரிக்கும் பண்பனும்பணிசிவப்
பிரகாசனென்னு முதற்பெயரோய்ந்து
வருசிவ லிங்கப் புலவநன்மணியே.

—o—

இந்நூல்செய்தவர் மாணாக்கருளொருவரும்
குருசாமிதேசிகர் குமாரருமாகிய
நக்கன்பாடி.

## சுப்பையதேசிகரவர்களியற்றிய

### அறுசீரடியாசிரியவிருத்தம்.

பூமேவுமலர்த்தடஞ்சூழ் குடபுரத்துக்கண்ணுதலின் பொற்றாண்மீது
நாமேவு கலித்துறையந்தாதியறிவோர்மகிழ நவின்றிட்டானாற்
தூமேவு தாண்டவராயப்பனிதனற்றவத்திற் றுலங்கத்தோன்றிப்
பாமேவு நலம்படைத்த சிவப்பிரகாசப்பெயர்கொள் பாவலோனே.

## திருவாலூர்ப்பசுபதீச்சரம்.

# திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

### திருவாய்மலர்ந்தருளிய

## தேவாரப்பதிகம்

திருச்சிற்றம்பலம்.

புண்ணியர்பூதியர்பூதநாதர்புடைபடுவார்தம்மனத்தார்திங்கட்
கண்ணியரென்றென்றுகாதலாளர்கைதொழுதேத்தவிருந்தவூராம்
விண்ணுயர்மாளிகைமாடவீதிவிரைகமழ்சோலைசுலாவியெங்கும்
பண்ணியல்பாடலறாதவாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே க.

முத்தியர்மூப்பிலராப்பினுள்ளார் முக்கணர்தக்கன்றன்வேள்விசாடு
மத்தியரென்றென்றடியரேத்துமையனணங்கோடிருந்தவூராந்
தொத்தியலும்பொழின்மாடுவண்டு துதைந்தெங்குந்தூமதுப்பாயக்கோயிற்
பத்திமைப்பாடலறாதவாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. உ.

பொங்கிவரும்புனல் சென்னிவைத்தார்போம்வழிவந்திழிவேற்றமானே
றிங்குயர்ஞானத்தர்வானோரேத்துமிறையவரென்றுமிருந்தவூராந்
தெங்குயர்சோலைசேராலைசாலிதிளைக்கும்விளைவயல்சேரும்பொய்கை
பங்கயமங்கைவிரும்புமாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. ந.

தேவியோர்கூறினரேறதேறுஞ் செலவினர்நல்குரவென்னைநீக்கு
மாவியரந்தணரல்லதீர்க்கு மப்பனாரங்கேயமர்ந்தவூராம்
பூவியலும்பொழில்வாசம்வீசப்புரிகுழலார்சுவடொற்றிமுற்றப்
பாவியல்பாடலறாதவாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. ச.

இந்தணையுஞ்சடையார்விடையாரிப்பிறப்பென்னையறுக்கவல்லார்
வந்தணைந்தின்னிசைபாடுவார்பான்மன்னினர்மன்னியிருந்தவூராங்
கொந்தணையுங்குழலார்விழவிற் கூட்டமிடையிடைசேரும்வீதிப்
பந்தணையும்விரலார்தமாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. ரு.

குற்றமறுத்தார்குணத்தினுள்ளார் கும்பிடுவார்தமக்கன்புசெய்வா
ரொற்றைவிடையினர் நெற்றிக்கண்ணாருறைபதியாகுஞ்செறிகொண்மாடஞ்
சுற்றியவாசலின்மாதர்விழாச்சொற்கவிபாடநிதானநல்கப்
பற்றியகையினர்வாழுமாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. சு.

நீறுடையார்நெடுமால்வணங்கு நிமிர்சடையார்நினைவார்தமுள்ளங்
கூறுடையாருடைக்கோவணத்தார்குவலயமேத்தவிருந்தவூராந்
தாறுடைவாழையிற்கூழைமந்திதருகனியுண்டுமிண்டிட்டினத்தைப்
பாறிடப்பாய்ந்துபயிலுமாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. எ.

வெண்டலைமாலைவிரவிப்பூண்ட மெய்யுடையார்விறலாரரக்கன்
வண்டமர்பூமுடிசெற்றுகந்தமைந்தரிடம்வளமோங்கியெங்குங்
கண்டவர்சிந்தைக்கருத்தின்மிக்கார்கதியருளென்றுகையாரக்கூப்பிப்
பண்டலர்கொண்டுபயிலுமாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. அ.

மாலுமயனும்வணங்கிநேடமற்றவருக்கெரியாகிநீண்ட
சீலமறிவரிதாகிநின்றசெம்மையினாரவர்சேருமூராங்
கோலவிழாவினரங்கதேறிக்கொடியிடைமாதர்கண்மைந்தரோடும்
பாலெனவேமொழிந்தேத்துமாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. ௯

பின்னியதாழ்சடையார்பிதற்றும்பேதையராஞ்சமண்சாக்கியர்க
டன்னியலும்முறைகொள்ளகில்லாச்சைவரிடந்தளவேறுசோலைத்
துன்னியமாதருமைந்தர்தாமுஞ்சுனையிடைமூழ்கித்தொடர்ந்தசிந்தைப்
பன்னியபாடல்பயிலுமாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. ௰

எண்டிசையாரும்வணங்கியேத்துமெய்பெருமானையெழில்கொளாவூர்ப்
பண்டுரியார்சிலர்தொண்டர்போற்றும்பசுபதியீச்சரத்தாதிதன்மேற்
கண்டல்கண்மிண்டியகானற்காழிக்கவுணியன்ஞானசம்பந்தன்சொன்ன
கொண்டினிதாவிசைபாடியாடிக்கூடுமவருடையார்கள்வானே. ௰௧

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவாவூர்த்திரிபந்தாதி

## காப்பு

மாவாகனத்தன் வெண்டாமரையாண் மன்னுவாக்கயன்பூ
காவாகனத்தங் குவித்து நின்றேத்துங் கடவுளுய
சேவாகனத்தன் றனாவூரந்தாதியைச் செப்புதற்கு
தாவாகனத்தவரந் தந்திமாமுகத்தற் பரனே.

## நூல்

திருத்தங்கநாமகள்சேரவெம்மாயஞ்சிதறமல
வருத்தங்கநாவெனப்புல்வினைமாயநம்வாய்த்துதிக்குங்
கருத்தங்கநாடவலம்வருங்கோநகர்க்காவலனைக்
குருத்தங்கநாகச்சிலையோர்கையேந்துங்குழகனையே. ௧

கனகந்தராதனமங்கைபங்காமைந்தர்கார்மயில்வா
கனகந்தராதனம்வெற்பென்பணியம்புமால்கைவிலங்
கனகந்தராதலந்தேரிடங்கோநகரொன்னுமென்ன
கனகந்தராதருள்வாய்கதியாயதிருவருளே. ௨

திருமாலையணிந்திரன்றொழுந்தேனுபுரத்திடைய
விருமாலையணிமவான்மங்கைபங்கன்மிளிரிதழி
மருமாலையணிந்துசூடும்பிரானடியார்க்குவரந்
தருமாலையனிருதாளென்றலைக்கணிதார்முடியே. ௩

முடிக்கம்பரவைமுடிப்பாணைத்தொண்டருண்முண்டகந்தோ
யடிக்கம்பரவைப்பன்கண்புனைவாணையச்சுந்தரர்சொற்
படிக்கம்பரவைமினைக்கேகுமாவூர்ப்பரணையணைக்
கொடிக்கம்பரவையணைத்தீங்கறவெம்முட்கொள்ளுவமே. ௪

கொள்ளஞ்சிவந்தவரவிந்தமார்வயற்கோபுரனங்
கள்ளஞ்சிவந்தவரன்மழுமானத்தன்காலனைக்கண்
டுள்ளஞ்சிவந்தவனைப்புரந்தானையொருபொழுதுந்
தள்ளஞ்சிவந்தவமானார்தந்தாளென்றுங்கூடவமே. ௫

கூடுங்கனகசத்தோலுரியாகொஞ்சுபாதமெடுத்
தாடுங்கனகசபையாயவயன்முடியொன்றரிந்த
வாடுங்கனகசயகோபுரமன்வந்தெனைவா
தாடுங்கனகசபநெஞ்சப்போதுனத்தாவரமே. ௬

வராங்கசங்கைமனையார்வணங்குமலைமகள்சுந்
தராங்கசங்கையனைக்கார்க்குங்கோபுரச்சங்கரமுப்
புராங்கசங்கைப்புனையாடியில்புரியாளிவளெம்
மராங்கசங்கைகொடுவாழச்சேரவரல்கடனே. ௭

சடமாதங்கத்தையாரூர்ப்பிரான்கற்பகாலஞ்சுரர்
கடமாதங்கத்தனைப்பூஞானன்றிரிபுரக்கள்ளர்வலி
கடமாதங்கத்தவரோந்தத்தனைந்தக்கரத்தைதனக்
கடமாதங்கத்தகுங்கல்விநன்மாதுறக்கண்ணுமினே. ௮

கண்ணப்பனேமத்தகங்கொண்டுமொன்றசைகண்டங்களித்
தண்ணப்பனேமத்தனேபசுவூரவொருமருங்கிற்
பெண்ணப்பனேமத்தமாரகலாவெனப்பெட்புற்றநெஞ்
சண்ணப்பனேமத்தனேநினதாட்டொழுமபாவதென்றே. ௯

ஆவமளிக்கனல்வின்மாரனைங்கணைக்கங்கநொந்து
பூவமளிக்கனலென்பாள்பொற்றேனுபுரத்தவிதெம்
பாவமளிக்கணைந்தங்கடலேகினபதத்தடிமை
வாவமளிக்கனகக்கொன்றையீதல்வருந்திருவே. ௰

திருப்பதத்தானையவியமனைச்செற்றதேவைவெள்ளிப்
பருப்பதத்தானைத்தென்னாரூரனைமுற்பகிர்ந்துகவர்
சருப்பதத்தானைமைநாகமென்றேதத்தகுபெயர்பூண்
பொருப்பதத்தானைத்தொழுவாரடைவொப்போகமுமே. ௧௧

போதியையோதிமிரமனமேமடவார்புடைபூந்
தாதியையோதிமஞ்சேகடமன்னதனத்துமைதன்
பாதியையோதிமஞ்சூழ்பொய்கையாரூர்ப்பசுபதியந்
தாதியையோதிமடம்போக்கிலாதென்றனையிழுத்தே. ௧௨

என்றனையந்தகன்வந்தடும்போதுபுன்னேழைமன
முன்றனையந்தகழ்சொற்போனையாதுனவோரருட்கு
கன்றனையந்தகனேசனையீன்றகங்காளகந்தர்ப்
பன்றனையந்தபநோக்கும்பொற்கோபுரப்பண்ணவனே. ௧௩

பண்ணார்வணங்கலிவெண்பாவிருத்தம்படித்துமனத்
தெண்ணார்வணங்கறியாருளிலாப்பசுவேசனெண்ணில்
கண்ணார்வணங்கரியாரயன்றேடுங்கமலவடிக்
கண்ணார்வணங்கம்புளகிக்கவேண்டுநின்காதலினெஞ்சே. ௰௪

காதமரும்புநறவண்டுபாண்செயக்காரளிபோ
காதமரும்புனலாரூரநம்மங்கையர்க்கனார்நீங்
காதமரும்புனகையாடுமுன்வரல்கட்டுரைத்தார்
காதமரும்புனமுங்கடந்தெய்தலெக்காலத்திலே. ௰௫

காலாதரித்தகைச்சூலத்தினோடுங்கடுகலென்முன்
மேலாதரித்தபொற்கோபுரக்கோபுரவித்தகற்கு
மாலாதரித்தவினையோடுதொண்டுசெய்வாமயங்கும்
பாலாதரித்தகையோராருற்றாலழற்பஞ்சனையே. ௰௬

பஞ்சவனாகத்துறுகூனொழித்தவன்பாதகர்செய்
வஞ்சவனாகத்துரிப்போர்வையான்மறைவாழ்த்தற்கெட்டா
விஞ்சவனாகத்துமேலாம்பசுபதிவேதனுண்ட
நஞ்சவனாகத்துதிப்போர்க்கருளுவனற்றவமே. ௰௭

தவனந்தினம்படிவார்பொய்கையாரூர்த்தலைவநின்பொற்
பவனந்தினம்பரவாவெதிர்நின்றுமைபங்ககடற்
புவனந்தினம்பங்கனமபாவாமுப்புரமெரித்த
சிவனந்தினம்பவெனப்புகல்வார்க்கொருதீதிலையே. ௰௮

திலையங்கடத்தினடமாடுவதெண்கயத்துச்செங்கு
வலையங்கடத்திப்பணைபாயுமாரூர்வரதவென்மே
லலையங்கடத்திபமுந்தங்கசன்வந்தலருமம்பெய்
தலையங்கடத்திநஞ்சுண்டகண்டாகொன்றைத்தார்ப்பரனே. ௰௯

பரவப்பணியவருள்செய்துநின்பொற்பதத்துவந்து
விரவப்பணியக்கர்சூழ்திருக்கோபுரவித்தகனே
யரவப்பணியப்படுமுடியாவென்படங்கலுமா
தரவப்பணியெனப்பூண்பாயிஃதியான்செயுந்தாழுரையே. ௨௰

உளையளையானனத்தும்பவென்றேத்தவுகந்தருள்செய்
நளையளையாதவன்றேய்மதிலாரூர்நகர்ப்புனிதர்
வளையளையாளுமனன்றுதரத்தின்வளர்ந்தசிறு
பளையளையாகரடியேனையாள்வர்பரமவர்க்கே. ௨௧

கேதனத்தானைவளைந்தானைவெள்ளிக்கிரியெனச்சொ
லாதனத்தானையடிமுடிதேடென்றனாணறிய
போதனத்தானைவிட்டானைத்தென்கோபுரப்புண்ணியனை
யேதனத்தானையச்செய்மாதர்த்தீர்ந்தடைந்தாமினிதே. ௨௨

அடைமாதிரங்கரத்தேதவராக்கொளுவானரவூர்
புடைமாதிரங்கற்பமும்போற்றுமாவூர்ப்புராதனன்பண்
ணுடைமாதிரங்கண்டிங்கண்முகமாலமுதரமன
நடைமாதிரங்கலையாளேறியுமினாகண்ணிலனே. ௨௩

நண்ணுமினக்கயற்கண்ணுண்மதிவதனத்தவளென்
றெண்ணுமினக்கயஞ்சுல்லாசையைப்புரத்தெண்ணலர்க்கு
நுண்ணுமினக்கவிலாதெரித்தாவூர்நுதற்கணன்சீர்
கண்ணுமினக்களைக்காணுமின்வான்கதியோர்பவரோ. ௨௪

ஓவாவிண்டாரகைகோண்மாறிநிற்பினௌனேங்குநம
ஞாவிண்டாரசனிபோற்கனன்றுதைநம்பர்நெடும்
பாவிண்டாரயனங்கத்தைவேய்ந்தபசுபதியா
ராவிண்டாரடியாரடியார்க்குத்தொண்டானபினே. ௨௫

பின்னலங்காரச்சடையாபிதிர்வனத்தாடும்பித்தா
பொன்னலங்காரமுலைபாகவென்னைப்புரந்தருள்வாய்
மன்னலங்காரநினையேனெனினும்வயலெழுசெங்
கன்னலங்காரகற்றேய்பசுவூரிற்கறைக்கண்டனே. ௨௬

கண்டஞ்சமந்தரஞ்சொன்னடைநுண்ணிடைக்கன்னிமயற்
கண்டஞ்சமந்தரங்கம்போலலைமனமோநற்கதிக்
கண்டஞ்சமந்தரக்காவளர்கோபதிக்கர்த்தனடிக்
கண்டஞ்சமந்தரவில்லாவெனவுட்கருதுவையே, ௨௭

துவையந்தவமகவாங்கடனஞ்சனஞ்சுக்கையத்தி
குவையந்தவர்மக்தரம்பூணுரகங்கொடுஞ்சரந்தீ
யிவையந்தவர்மகவான்பணியாவூரிடமிடத்துச்
சிவையந்தவர்னமைமாலாம்பசுபதித்தேசிகர்க்கே. ௨௮

சிகவளவையனிபமுகத்தானத்தவென்னும்பரூர்ப்
புகவளவையம்புகழ்பொழிற்றேனுபுரத்தவெம்பா
தகவளவையனலிமுன்றிமிரமெனத்தபுமா
சுகவளவையம்பருக்குனைமாதின்றுயரகற்றே. ௨௯

கற்றூகமம்பரவேநின்னடியர்கணைத்திற்கல
வுற்றூகமம்பரவேனுவென்னேம்பவமோங்குமின்பம்
பற்றூகமம்பரவோர்ச்சியிலாதெங்ஙன்பற்றுதல்யாம்
வற்றூகமம்பரவோர்சடையாவூர்வரன்பதமே. ௩௰

பதங்கவிகலம்பகங்கற்றுகொய்யலைப்பாடிநிதம்
பதங்கவிகலனெனப்பறந்துளைப்படும்புலவீர்
பதங்கவிகலக்கிபக்காமனூர்ப்பரமனம்பொற்
பதங்கவிகலந்துபாடிமின்வான்பதம்பற்றுதற்கே. ௩௧

பற்பலவாகமஞ்சூழ்கோபுரன்றவப்பன்னியர்க்குக்
கற்பலவாகமயலாக்கினன்கொடுங்காலன்றனை
முற்பலவாகமங்கச்செற்றதாண்முன்னியுற்பவத்தை
யுற்பலவாகமர்கண்டாமொழியென்றிறைஞ்சுளமே ௩௨

இறையிலங்கன்னத்தொகைமன்னும்வான்றடத்திண்டையென்று
நறையிலங்கன்னமிடுமெளிக்கோபுரனைநமரோ
கறையிலங்கன்னலைக்கற்களிக்கீயையெனக்கரகப்
பறையிலங்கன்னமிரந்தயின்றானும்பணிமின்களோ ௩௩

மின்னக்கரவப்பணியாநந்தாதமெய்யன்பரொன்று
முன்னக்கரவப்பணியக்கர்சூழ்பசுவூரவென்று
நன்னக்கரவப்பணியிற்புகாநம்பரொன்றிடுகைகண்
பன்னக்கரவப்பணியாண்டருள்செய்பரம்பரனே. ௩௪

பரமானந்தாதிருக்கில்லேனெனச்சொல்பஞ்சாயுதனைத்
திரமானநதாதிருப்பாயூழியென்றருட்டேவமலர்க்
கரமானந்தாதிருக்குக்களமாதர்கருத்திணங்கா
வரமானந்தாதிருவாவூர்மலையொளிர்மாமணியே ௩௫

மணிகாவலரிளஞ்சேய்கொளக்கூடன்மருங்கணைந்த
வணிகாவலரவப்பூணுருடப்புரமன்னவயா
மணிகாவலரனலேயென்பளாகத்தடைந்தவெப்பர்
தணிகாவலருளாயாகுமுனேகொன்றைத்தாரவனே. ௩௬

தாரம்பொனுளாயன்கண்டலைதாள்கைத்தலத்தணிவான்
சீரம்பொனுளாயன்றீருஞ்செவேடந்தைதேமிதழி
யாரம்பொனுளாயன்வந்தான்மதாவலரம்பென்செயுந்
தீரம்பொனுளாயனந்தங்குமாவூர்ச்சிலம்பிடத்தே. ௩௭

இடப்பாயலைமலமென்னுங்கிழங்கையிராப்பகலு
நடப்பாயலையநெறியின்பநண்ணுவைநாடுநெஞ்சே
படப்பாயலையுவந்தான்றொழுமாவூர்ப்பரமனைநாம்
விடப்பாயலைமுடித்தானையெப்போதினுமெய்மறந்தே. ௩௮

மறப்பைத்தவிருந்திவண்பாலென்றேதிவைத்தாய்வருப்
பிறப்பைத்தவிரும்பர்சூழ்திருவாவூர்ப்பெருந்தகையே
யுறப்பைத்தவிரும்படப்பணியாவெங்களுத்தமனே
யறப்பைதவிரும்புனன்மண்ணணுதவென்பாந்தனனே. ௩௯

தனமாடகமலையன்னவராடமதங்கர்கள்யா
ழினமாடகந்திருத்திப்பாடவீற்றிருந்திந்தநற்பு
வனமாடகமையினின்றேமற்றுங்கைவலமெய்துவ
ரனமாடகல்பொய்கைக்கோபதியாயென்றறைகுவரே, ௪௰

MAHAMAHOPADHYAYA
DR. U. V. SWAMINATHA IYER LIBRARY

குவலையம்பன்னகவார்த்தைசொலாதெனைக்கோதளவங்
குவலையம்பன்னகமாமுலையார்க்குருகாதருள்வா
குவலையம்பன்னகமாக்கொண்டகோபதிக்குன்றமையா
குவலையம்பன்னகண்மங்கைபங்காவார்க்கொழும்பன்னனே. ௪௧

பன்னலமபாடலப்பங்கயன்பொய்கைபடியிலம்பே
ருன்னலம்பாடலமாவூரொன்றேத்திலமோதியல்சொற்
கன்னலம்பாடலங்கண்ணன்பங்காவென்கிலேங்கடிதா
மின்னலம்பாடலங்கென்செய்குவாமினியேழைநெஞ்சே. ௪௨

நெஞ்சேயருந்தினைப்போதாயினுநினையாதவர்க்குத்
தஞ்சேயருந்திவளமல்குவாவியிற்றையலரோ
டஞ்சேயருந்திளைத்தாடுங்குடபுராஞ்சலென
நஞ்சேயருந்தினவொன்றுநாச்சொலநாடுவையே. ௪௩

சொலச்சந்தனமப்பிறங்கலென்சேய்க்குநின்றேணைசைதேங்
கலச்சந்தனமப்பியும்பூவணைப்பெய்துங்காயனலென்
றிலச்சந்தனமப்பிறைத்தீயுமாவூரிறைவவினை
யிலச்சந்தனமப்பிரியாமுனங்கொன்றையீசிடுமே ௪௪

வீசாதவளாநகைபுடைத்தாய்விண்ணின்மேலுமளாந்
தேசாதவளைவளைத்தாரட்டாய்வண்டிஞ்சென்றடைநது
மூசாதவளாரணித்தேனவாவுமுடய்பொரநிற்
பேசாதவளைவிட்டாரூரவாவும்பெறுவதறகே. ௪௫

கேளைக்கிளைத்தனம்பூமனைநீத்துக்கிரிசுரமபோய்க
கோளைக்கிளைத்தளமரேயென்மின்குருகாகரத்தி
நாளைக்கிளைத்தன மூண்டமாகோபதிநண்ணியெமை
யாளைக்கிளைதனகாகதிதாருமென்றுட்படுமே. ௪௬

படந்தெரிகுஞ்சிறமோற்குப்பற்றுதிடைப்பாகவுண்ட
விடந்தெரிக்குஞ்சித்திரகண்டகோபுரவேந்தவென்மே
னடந்தெரிக்குஞ்சிநமன்சேர்முன்வாநந்தனையட்டுமோல்
கடந்தெரிக்குஞ்சிறுத்தொண்டர்க்கருளியகண்ணுதலே. ௪௭

கண்ணலங்காரமடவாயன்றியானைகடிந்துநின்ற
மண்ணலங்காரப்புயத்தாருக்கன்றிமணமுரச
நண்ணலங்காரவருகாரணமென்கொலுன்மறையோ
டெண்ணலங்காரம்பயில்கோபுரத்தெம்மிறைதடத்தே. ௪௮

தடப்பாலம்பாலமுண்டான்பசுவேசன்சரமலரோன்
சடப்பாலம்பாலக்கணைவிழித்தான்முகுந்தன்வலிமை
கெடப்பாலம்பாலநன்னீற்றுக்கையேந்திக்கிளர்மலர்த்தா
ளடப்பாலம்பாலரவான்மனமேநமக்கச்சமின்றே. ௪௯

அஞ்சாதவத்தின்கட்புக்கோர்க்கரியவமலவுண்ட
நஞ்சாதவத்திரமுள்ளார்தஞ்சேதிரிநாட்டம்விளங்
குஞ்சாதவத்திரமைந்தாநிலாமணிகூடநிற்குத்
துஞ்சாதவத்திரம்பஞ்சாயுதனெனச்சொல்வதென்னே. ௩௰

என்பரவாமையினோடணிதிண்புயத்தேந்துவலை
மன்பரவாமையியைபொழிலாரூர்வரதநற்றா
யன்பரவாமையிலோன்றந்தையெந்தையெனவறைந்து
நின்பரவாமையினேற்கருளெங்ஙனநேர்ந்திடுமே. ௩௧

நேரானைமாலைத்துடையானைத்தம்மைநினைக்கிலர்பாற்
சாரானைமாலையன்காணானையாரூர்ச்சைலனைக்கண்
ணாரானைமாலையணிவானைநேர்கண்டறைந்துமினம்
வாரானைமாலைப்பதமுன்னிவாடலென்மாவல்லியே. ௩௨

வல்லியங்கானகத்துண்டன்பனேதங்கிவைகறைசெ
லெல்லியங்கானகஞ்சென்றானினித்தனியேகலவம்
பல்லியங்கானமலகாரூர்ப்பசுபதிபானின்படர்
சொல்லியங்கானகருணைபெற்றார்புகிற்றாறிலையே. ௩௩

இலைக்கமலததடஞ்சூழ்கோபுரவெகினங்கண்டிடாத
தலைக்கமலத்தகழுமலந்தார்க்கத்தாபதர்சேர்
திலைக்கமலத்தவடியேன்பொய்மாயச்சிறுமிகண்க
ளலைக்கமலத்தகப்பட்டுழலாதருளானந்தமே. ௩௪

ஆனகங்கைத்தலையம்பொழிநதியவதிர்பசுவூ
ரானகங்கைத்தலைநீக்காதுகொண்டவனந்தலைமே
லானகங்கைத்தலைவன்றிருத்தாள்பரவாதபுன்மை
யானகங்கைத்தலையாதருள்வான்பரமானந்தமே. ௩௫

மேதையரும்பதஞ்சேரப்பொல்லாங்குவிளைத்தவனை
வாதையரும்பதத்தாழச்செய்கோபுரவாணவிரும்
பாதையரும்பதமேதுணைத்தாலும்பரிவுறுமிம்
மாதையரும்பதமாந்தாதுசெய்யில்வரும்வசையே. ௩௬

வருவானகங்குழையன்பர்க்கிலங்கைமன்மார்பிறக்காற்
பெருவானகங்குறித்தான்றினன்வேட்டுபெருகுவரந்
தருவானகங்குனித்தூரெரித்தான்செய்த்தளிர்க்கழைக
டருவானகங்குலவுந்தேனுமாபதித்தற்பரனே. ௩௭

பரகங்கரகங்கதைகொண்டுபோர்வலங்கண்டுமெனக்
கிரகங்கரகமெனக்கணாந்தாலுங்கிட்டார்முனிரு
வரகங்கரகங்குடிகொண்டகோபுரவானவநஞ்
சுரகங்கரகங்கணவென்றுணுதவொண்கதியே. ௩௮

ஆதவனத்தையலைத்தான்றருங்கமலற்கருள்கி
ராதவனத்தையலைப்புணர்சேய்தந்தையாரமர்செம்
பாதவனத்தையலைதாங்குபொய்கைப்பசுபுரங்கண்
டேதவனத்தையறுப்பைநெஞ்சேநல்லழகிதென்றே. ௫௯

தென்னாகரியமுழங்கூர்செற்றேனுபுரத்திற்சென்று
மன்னாகரியகுழன்மலைவல்லிமருவகலா
வின்னாகரியயன்காணாவரவெனவேண்டுநெஞ்சே
வின்னாகரியம்பரியதிருவருண்மேவுதற்கே. ௬௰

மேவுந்திருப்பதிகோபுரமாலைவிசேடங்கொண்டு
பாவுந்திருப்பதிகம்பசுவேசன்பதத்திற்றினம்
பூவுந்திருப்பதிர்நீர்தாகம்போக்குங்கொல்புண்டரிக
மாவுந்திருப்பதியன்மார்பமாலைவந்திதவென்னே. ௬௧

தித்திக்குங்கண்டனசொல்லிபங்காதெவிட்டாதுசெயும்
பத்திக்குங்கண்டணவாதருளாயெனிற்பாழ்மனஞ்சொ
லத்திக்குங்கண்டனம்வேல்வரையுஞ்சரியார்வயம்பத்
துத்திக்குங்கண்டனன்மேனியகோபுரச்சுந்தரனே. ௬௨

தரங்கஞ்சரிக்குங்கடற்பம்பைவெண்மதித்தண்சவிகைச்
சரங்கஞ்சரிக்குவிற்கோட்டார்மடந்தைக்குச்சற்றுமன
திரங்கஞ்சரிக்குலமாதர்தம்பாலையமேற்றவன்றெவ்
வரங்கஞ்சரிக்குந்தெனுவூர்ப்பரன்வந்திருந்தவன்றே. ௬௩

வன்னாகமாகற்பவெண்ணாகமாரவழங்குங்குழைப்
புன்னாகமாகமளாவுங்கூடபுரப்புண்ணியன்பைப்
பன்னாகமாகத்தணிபணியான்பவனமொளிசேர்
பொன்னாகமாகக்கொண்டான்பூவடிமுன்னிப்போற்றுநெஞ்சே. ௬௪

நெஞ்சங்களங்கமற்றன்புற்றுன்மேற்கவிநேர்ந்துரைப்ப
வஞ்சங்களங்கமனையாகவென்கண்வதியுமைய
நஞ்சங்களங்கறுப்பாகவைத்தோயவைநந்தச்செய்து
கஞ்சங்களங்கவிழ்க்குங்கோபுரத்தகருத்தருளே. ௬௫

கருவம்புலம்பொழிலாரூருறநற்கவின்மலிசெந்
திருவம்புலமிகத்தெவ்வறப்பாவஞ்சிதையமல
ரிருவம்புலவுங்குயத்தாருமன்னுவரோரிணையா
வுருவம்புலவர்வசந்தனென்றேத்தவுறுமுண்மையே. ௬௬

மைக்கந்தரத்தர்மலைவல்லியத்தர்மருவயில்வேற்
கைக்கந்தரத்தர்கவின்கோபுரத்தர்கரியவன்பூ
வைக்கந்தரத்தரருளாலவத்தரளிக்கின்முத்தங்
கைக்கந்தரத்தரக்கொள்வளன்பாகவக்கன்னியுமே. ௬௭

கன்னிகரும்புவனஞ்சூழுங்கோபுரகச்சுதனக்
கன்னிகரும்புயலோதிகண்டேகுநகனத்தகருங்
கன்னிகரும்புன்மனைதநின்பாற்பிணிகாண்டிபச்சாரங்
கன்னிகரும்புயனேயெங்குமானதிகம்பரனே. ௯௮

அம்பரவம்பரவுஞ்சடையாளவடுபுலிதரோ
லம்பரவம்பரசங்கைகொண்டாய்பசுவூரமர்மா
வம்பரவம்பரகஞ்சேர்ந்துழல்வநின்னமபொற்சர
ணம்பரவம்பரமாகினக்கேதொழும்பாக்குதற்கே. ௯௯

ஆக்கைவளைகளங் கன்குளிரான் மதன பொளிக்கா
ளுக்கைவளைகளங் கார்நீலமாங்கொடி நுண்ணிடையாள்
பூக்கைவளைகளங் கேருதுவாடும் பொற்பூண்பணிக்குச்
சேக்கைவளைகளங் கம்மாக்குங்கோபுரச் சிற்பரனே. ௱

சிறுகாலரும்ப வருமதிகாயச்சிந் தேங்கதென்றிக்
குறுகாலரும்பழி கொள்ளாதெனுவி யுயங்குசலே
யறுகாலரும்பன் முகன்கந்சன்றந்தைய ராயவிசை
யறுகாலரும்பமர் கோபுரவாணர்க் கறைமின்களே. ௱௧

களத்திரவாதனே யானினையேன்கறைக் கண்டசெல்வா
களத்திரவாதனே போல்வந்துகா புரங்காய் நுதற்றீ
வளத்திரவாதனே நல்குமென்பார்க்கருண் மன்னவங்கை
வளத்திரவாதனே யாமுன்றுடபுர வாணவின்றே. ௱௨

வாணனடிக்கும் பறைமுன்றிலானிரு மாதவர்கண்
காணனடிக்கும் பதாம்புயன்பார் மசாலயநஞ்
சூணனடிக்கும் பருப்போற்றுங் கோபுரனேங்கலினாற்
பூணனடிக்கும் பனை தான்சுரத்தைப் பொறுக்கவட்கே. ௱௩

வடவிருக்கந்தண் ணிழலமர்ந்தாய் பொன்மனைச்சரணம்
படவிருக்கந்தமுங் காணுப்பசுபதிப் பண்ணவமான்
மடவிருககந்த வளைபகர்ந்தாய் மதிவந்திவளைச்
சுடவிருககந்தருவாய் திசைகண்டநின்றேளணியே ௱௪

அணிவானராவிரு வங்கடனஞ்சுக் கலறிவந்து
பணிவானராவி தந்தானவர்மாதர் பலர்தென்கனி
மணிவானராவி தரணியென்றேற்கும்ன் கோபுரன்றீத்
துணிவானராவி யொளிர்மழுவானெந் துணையென்றுமே ௱௫

என்றுமதிக்குவனந்தீ விண்காலிய மானவடி
வென்று மதிக்குவடுத்தீர்ந் தெனுந்தவத் தோர்களையா
நன்றுமதிக்குவம் பின்னென்றருள்புரி நம்பனளி
துன்றுமதிக்குவனமார் குடபுரத் தொல்லையே. ௱௬

MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LIBRARY
...ANMIYUR .. MADRAS

ஐயம்புகம்பல வாய்த்துயின்றார்க்கத்த ஞாலமுண்டோ
னையம்புகம்பசு வேசன்றந்தான் மதனையினியா
மையம்புகம்பழிக் கஞ்சாதுநினைகை யலங்குமல
ணையம்புகம்பக ழுந்தாமிமாலை யகல்குவையே. ௭௭

கல்லாமலகங் கரைந்துருகாம லென்கண்ணெதிரி
னில்லாமலகங் கண்டாய் சிறுசூர்பணி நேர்ந்தனைகைப்
புல்லாமலகங்கனி விட்டுவேம்பைப் பொறுத்தியென்று
சொல்லாமலகங்கண் கொள்கோபுரமுத்தித் தொண்டருனே. ௭௮

தொண்டுவளையிலமர் பசுவேச நின்றாயடிக்கே
வண்டுவளையிலத் தாற்கரியாயென் மறுவைமுன்னீ
ருண்டுவளையில வாக்குமைபோலொழித் தென்னையன்பா
கண்டுவளையிலவாக் கனபனென்றருள் கண்ணுதலே. ௭௯

கண்டகளுவிக் கடமென்றுளுவந்தக காலையினீர்
கண்டகளுவிகலா லுளையாநின் கருணைவெஃகாக்
கண்டகளுவிக் கழுவேனக்கோது கடிந்தெனைக்கா
கண்டகளுவிகருளுங் குடபுரக காவலனே. ௮௰

வலவாவகலங் கவர்தனதாளாநதி வந்தெனுயிர்
வலவாவகல லொழியென்றன னென்மனத்திற் கிசை
வலவாவகலத் தடந்தேர்நடாத்து வலைபரவ
வலவாவகலமென் பேகொள்பசுபதி மால்வளைக்கே. ௮௧

வளைச்சந்தனத்தழைதந்தா யமமான்மட மங்கையருக்
களைச்சந்தனத்தணி முன்றுவியாற்றுக ளாக்கியுனை
யளைச்சந்தனத்திய பாவாபரவின னொண்டடத்தி
னளைச்சந்தனத்ததிர் கோபுரன்வாழ்க னகவளைக்கே. ௮௨

ஏதாரணியனெ னீண்டையெனுதனை யாண்டனனுன்
மீதாரணியவம் போக்குங்குடந்தை வியன்மதுரை
சேதாரணியவந் திப்பதிகாஞ்சிதென் றில்லைசண்பை
வேதாரணியமு மேவும்பசுபதி வேதியனே. ௮௩

வேதியருக்கதி பொன்னிகுடபுர வேந்தர்க்குமால்
பாதியருக்கலர் கொன்றையைச்சூடும் பரர்க்கிருள்சே
ரோதியருக்கலர் சண்ணின்றடியி லொழுகநின்று
சாதியருக்கலர் சூட்டினரோதுய்யத் தக்கதுவே. ௮௪

தக்காரியம்பங்க மாறுக்குநாதத் தவலரும
தக்காரியம்பங்க னம்பாகுடபுரச் சங்கரமேன்
மைக்காரியம்பங்க மாகவந்தாலிவண் மாய்வலென்ற
மைக்காரியம்பங்க மேவவந்தாண்டருண் மாதங்கனே. ௮௫

தங்கவருங்கலை கற்கச்செல்வேனென் றலைவர்வெறுத்
தங்கவருங்கலை யொத்தாரினியென் னமலைகண்சந்
தங்கவருங்கலைக் கையாபசுபதித் தற்பரமா
தங்கவருங்கலை மெய்யாவென்றேத்துந் தகையலதே. அசு

அலங்காரத்தாமந்திகழ் முலையார்மய லாழ்ந்துமனங்
கலங்காரத்தாமந் திரிநண்பனே யிக்கைத்துவிண்பால்
விலங்காரத்தாமந்தி வீசுங்குடபுர வேதவெலும்
பிலங்காரத்தாமந்திரம் புகலாவெனைப் பேணுவையே. அஎ

வையங்ககனம்பரந் தகழ்ந்தார்மத மாளவடி
வையங்ககனம்பனைப் பரமோவென்ற மாமுனிநீள்
கையங்ககனம்பரித்தருள் கோபதிக் கண்மணியைக்
கையங்ககனம்படி சருநார்ந்துங் கருதுவமே. அஅ

கருந்தனந்தோற்கு மனத்தேன்மலைம கடனெழின்மு
திருந்தனந்தோய்புயத் தாயமலாவென்று தேர்கலவி
வருந்தனந்தோயந் திளைத்தாடுங்கோபதி மன்னைத்தொழா
திருந்தனந்தோயமன் வந்தாற்பிழைத்துய்வ தெவ்வணமே. அகூ

வண்ணந்தரிக்குமயற்கு நற்பேரின்ப வாழ்வளித்த
தண்ணந்தரிக்குமலர்க்கையன் றந்திடை தாழ்குழல்சொற்
பண்ணந்தரிக்குமனை னமாகோபதிப் பால்வதியார்
நுண்ணந்தரிக்கும்யவம் போற்றுயர்நுங்க நோகுவரோ. கூ௰

வருந்தாதையாதித்த ரிந்திரன்வாழ வெம்மான்கந்தனைத்
தருந்தாதையாதித னேய்மதில்கோபதித் தாணுவிரு
வருந்தாதையாதித்த வென்னமன்றுடிவந் தாள்வர்மெய்யி
னருந்தாதையாதித்தடித்துயி ரோயுமு னுதரியே. கூக

தரிக்குந்தனங்க ளுடையாரிரப்பவர் தம்மைவிடா
தரிக்குந்தனங்கழிக் குங்கோபதிக்குத் தலைவன்சங்கேந்
தரிக்குந்தனங்க மளித்தபிரான்கொன்றைத் தண்டொடையா
தரிக்குந்தனங்கள் பசப்பேகவந்திலன் றாழ்குழலே. கூ௨

தாழாதவனஞ்சடக்குகண்டாதசனத்தைவிண்ணில்
வாழாதவனஞ்சக்கொன்றாய்குடபுரவாணவினை
சூழாதவனஞ்சகம்பூசித்தேத்தன்பர்தோயின்பவம்
பாழாதவனஞ்சலியாதவனென்பராசிலரோ. கூ௩

ஆசினகரடமாவுரியாயவ்வியாதனுக்கன்
றேசினகரமளித்தாய்குடபுரவென்றுனது
மாசினகரமதில்வலஞ்சூழ்ந்தடிவந்திக்கிலார்
காசினகரமதிற்சென்றுமென்பயன்காணுவரோ. கூ௪

வலஞ்சுத்திகைத்துறுபூண்முலைமாதர்மயலிற்சிக்கி
யலஞ்சுத்திகைத்துவருவீர்குடபுரமண்மிபத்தி
நலஞ்சுத்திகைத்தலனுக்கிறியார்க்குநகுவெண்டலை
மிலஞ்சுத்திகைத்துகில்சேர்ப்பார்க்குச்செய்பவவேரறுமே ௯௫

வேரியம்பாகனசொல்லார்க்குருகிவிமலனிருஞ்
சீரியம்பாகனகமனனேயொன்றுசெப்புவல்வ
லாரியம்பாகனயன்றொழுங்கோபதியாலயஞ்சேர்
நாரியம்பாகனடிக்கன்புசெய்யருணண்ணுகவே. ௯௬

கவலேனமாயுண்முடிவென்றநெஞ்சிற்கறியவன்மு
கவலேனமாயுளைந்தாயுங்குடபுரன்காலைமறக்
சவலேனமாயுகத்தீப்போலநீவந்துனைக்கட்டியே
கவலேனமாயுதம்பாவொன்றுனைக்கினுங்காய்குவனே. ௯௭

காயத்தவனைப்புரப்பதுவேண்டிக்கரதலத்தா
னுயத்தவனைவளைத்தாய்தென்கோபுரத்தற்புதனே
நேயத்தவனையகலாய்நினைநினையாதகலு
மாயத்தவனைவிழுமீயின்வீழ்வர்வலியளற்றே ௯௮

வலியவருந்துகயமுரித்தானெழின்மன்னிக்கண்டம்
பொலியவருந்துவிடத்தான்பசுபதிப்புண்ணியனை
கலியவருந்துவனைப்போன்மெய்யானருள்கைக்கொண்டிடார்
மெலியவருந்துதிறம்வாய்ந்தளறெங்கும்வீழ்பவரோ. ௯௯

வீழாதவனைவிழையான்பசுபதிவீழ்ந்தவனைத்
தாழாதவனைநொடியேனுந்தான்புரப்பான்கனகஞ்
சூழாதவனைநகைபுடைத்தானென்றுசொல்லுனர்துன்
பாழாதவனைநிழர்பாலுஞ்சார்வாறிதிருவே. ௱

மறைவாழ்கவந்தணரியாகங்கள்வாழ்கமனுவறநூற்
றுறைவாழ்கமைமுகின்மாநிலம்வாழ்கத்துலங்குகைவேற்
இறைவாழ்கவைங்கரன்மாதுமைவாழ்கவின்சைவதவப்
பொறைவாழ்கவாழ்கப்பசுபதிநாதர்தம்பூங்கழலே. ௱௧

பசுபதிநாதன்றிருவடிசரணம்.

திருவாரூரந்தாதி
முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS

உ

7045

மதுரைமா நகரத்துக்கு வடகீழ்த்திசையிலுள்ள

ஆனைமலைப்பக்கமிருக்கும்

# ஒற்றைக்கடை

## விநாயகரந்தாதியும்

## இரட்டைமணி மாலையும்

## மும்மணிக்கோவையும்

இவற்றின் குறிப்புரைகளும்.

—(o)—

மதுரைத்தமிழ்ச்சங்க வித்துவான்

மு. ரா. அருணாசலக்கவிராயரால்

செய்யப்பெற்று

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றன.

1927

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

உ

சிவமயம்.

# முகவுரை.

திருக்கயிலாச பதியாகிய சோமசுந்தரக் கடவுளுக்கும், உலகமாதாவாகிய உமாதேவியாருக்கும், கலியுகவரதராகிய முருகக்கடவுளுக்கும், இராசதானியாகிய மதுரைமாநகரத்துக்கு வடகீழ்ப் பக்கத்திலுள்ள ஆனைமலையையடுத்த ஒற்றைக்கடை யென்னுமொரு சிறு கிராமத்தில் எற்றைக்கு மிடையூறில்லாமல் விவசாய விருத்தியை முன்னிட்டு, இற்றைக்குப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் யான்போய் இரண்டு மூன்று வருடமிருக்கும்போது அவ்வூரிலெழுந்தருளியிருக்கும் *சிவனடியார்க ணேசப் பெருமானாகிய கணேசப்பெருமான் றிருவடிகளில் வைத்த மெய்யன்பு மேலீட்டால் செந்தமிழ்ப்பாவால் ஓர் அந்தாதியும், இரட்டைமணிமாலையும், மும்மணிக்கோவையும் ஆகிய மூன்று பிரபந்தங்கள் பாடித்தோத்திரஞ்செய்து வந்தேன். அதன்மேல் திருநெல்வேலிக்குப் போயிருக்கும்போது "திருநெல்வேலியுறை செல்வர்தாமே" என்று திருஞானசம்பந்தசுவாமிகளால் அருளிச்செய்யப்பட்ட தேவாரம்பெற்ற "அனவரததானநாதர் கோயில்" வித்துவானாகச் சிறந்துவிளங்கிய ஸ்ரீ நெல்லையப்பன் கவிராயரவர்களிடத்தில் மேற்படி பிரபந்தங்களைப் படித்துக்காட்டினேன். அவர்கள் கேட்டு, மகிழ்ச்சியுற்று, இப்பிரபந்தங்கள் படிப்பார்க்குப் பரமபத்தியிளைப்பதாயும் ஆரம்பத்திற் பாடத்தொடங்குவோருக்கு மோனை எதுகை முதலிய முறைகளும் சொற்பொருள் விளக்கமும் வழுவாமற்பாடும் வழிகாட்டிகளாகவுமிருத்தலால் இவற்றைப் பரோபகாரங்கருதி அச்சிட்டு வெளிப்படுத்துக என்று கட்டளையிட்டதோடு சாற்றுக்கவியாக இரண்டு வெண்பாவும் பாடிக்கொடுத்தார்கள். அதைப்பெற்றுக்கொண்டு மீண்டுவந்து நாளிதுவரையும் அச்சிடுதற்கேற்ற இடம் பொருளேவல் வாயாமல் வாளா (சும்மா) இருந்துவிட்டேன்.

தற்போது அவையெல்லாம் வாய்த்தமையால் மதுரை மீனலோசனிப் பிரஸ் புரோப்ரைட்டர் மஹா-ள-ள-ஸ்ரீ அ. மூத்துச்சாமிப் பிள்ளையவர்கள் நூலருமையறிந்த தெய்வபத்தியிற் சிறந்தவர்களாதலால் அவர்களிடங் கொடுத்து விரைந்து பதிப்பித்து வெளிப்படுத்தினேன். இப்பிரபந்தங்களைப் படித்துப் பார்த்தபெரியார் குற்றங்களைத்தள்ளிக் குணங்களைக்கொள்ள வேண்டுமென்று பன்முறை தாழ்மையோடு பிரார்த்திக்கின்றேன். சுபம். சுபம். சுபம்.

மு. ரா. அ.

---

* சிவனடியார்கள் நேசப்பெருமானெனப்பதம் பிரித்துப் பொருள்கொள்க.

உ

# சாற்றுக் கவிகள்.

—— ο ——

திருநெல்வேலி அனவரததானநாதர்கோயில் வாயில்வித்துவானாகிய
ஸ்ரீமத். நெல்லையப்பன் கவிராஜரவர்கள் இயற்றியவை.

கருணைபொழி யொற்றைக் கடைக்களிறந் தாதி
மருவு மிரட்டைமணி மாலை—பொருவில்சீர்
மும்மணிக் கோவையெனு மூன்று முறைவழுவா
திம்மணிற்சொற் றானெவனென் னில். (1)

சொல்விளையு மாம துரைத்தமிழ்ச் சங்கத்தில்
நல்விளைவா மின்ப நயந்தெரியும்—கல்விப்
பொருணா நேடிப் புலவர்க் களித்த
*அருணா சலக்கவிரா யன். (2)

———

ஸ்ரீவில்லிபுத்தூர்த்தாலூகா குன்றூர் பெரியவீட்டு ஸ்ரீமாந்.
குமாரசுவாமி முதலியாரவர்கள் பாடியவை.

முந்தாதி யானருளொற் றைக்கடைவி நாயகமா மூர்த்தி மீதோர்
அந்தாதி யிரட்டைமணி மாலைமும் மணிக்கோவை யறைந்தா னேக
தந்தாதி கம்பாகந் தாவெனவே யத்தெய்வ தங்களைத்தி
னந்தாதி வாமலர்ப்பூ சனைசெயரு ணாசலநன் னாவ லோனே. (1)

வெண்பா.

அந்நூலோர் மூன்றையுநன் காய்ந்தறிந்த வான்றோர்கள்
இந்நூல் களைக்கற்றோர்க் கின்றமிழி—னெந்நூலும்
பாட வருமருத்தம் பண்ணவரு மெய்ப்பொருளைத்
தேடவரு மென்பர் தெளிந்து. (2)

———

*இவர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் நூற்பரிசோதகராயிருந்ததை இப் பாடல் குறிப்பிக்கிறது.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

உ

சிவமயம்.

## ஒற்றைக்கடை

# விநாயகாந்தாதி.

## காப்பு.

அந்தாதி யான பிரபந்த மொன்றுனக் காக்கவொரு
தந்தாதி யானஞ்செ யென்னுளத் தேயின்பந் தந்தருள்வான்
பிந்தாதி யான மிசையேறி வாமலர் பெய்பொழில்கள்
சந்தாதி யானயஞ் சாரொற்றை யாவணந் தன்னிலின்னே.

## நூல்.

பூங்கா வனந்தமிழ் போலத் தழையும் புனல்வயலுள்
நீங்கா வனந்தங்கி வாழுமொற் றைக்கடை நீணகரிற்
றீங்கா வனந்தம் வரினுந் தவிர்த்தெஞ் சிறுகுடிசைக்
காங்கா வனந்த மொருகொம்பி யானை யடிமலரே. (1)

மலரும் பருவ வள்மலர் கைக்கொண்டு மன்வைகறை
யிலரும் பருவதம் போற்றேன்று நின்கழற் கிட்டிறைஞ்சிப்
பலரும் பருவப் புறுவாழ்வுற் றூரப் படியிறைஞ்சேன்
கலரும் பருவ மனங்களை யொற்றைக் கடைக்களிறே. (2)

ஒற்றைக் கடைக்களி றேயூழி தோறு முயர்ந்துநிற்கும்
பொற்றைக் கடைக்களிப் புற்றெய்து மாவிட் புலவர்குழாத்
தெற்றைக் கடைக்க வெனைநினைப் பாயெளவை யென்பவள்செய்
பற்றைக் கடைக்கணித் தாங்கட் கொடுவிட்ட பண்ணவனே. (3)

---

(அரும்பதவுரை) அருள்வான் - அருளும்பொருட்டு. யானம் - ஊர்தி, வாகனம். சந்து-சந்தன விருக்ஷம். ஆதியால்-முதலியவற்றால். (1) குடிசை-சிறுவீடு. (2) வைகறை-விடியற்காலம். கல்-கற்றன்மை. அரும்பு-உண்டாகின்ற. (3) பொற்றை-(கயிலாச) மலை. கடை-இடத்து. பற்றை-அன்பை. ஆங்கண்-அந்த இடத்து.

பண்ணிய மார்ந்த ருமைச்செயல் கண்டு பலப்பலசெய்
துண்ணிய மார்ந்த ருனக்களித் தாலவர்க் கோங்குசிவ
புண்ணிய மார்தரு ணங்கண்டெற் காக்கப் புழைக்கைகொடு
திண்ணிய மார்தருச் சூழொற்றை யாவணஞ் சேர்ந்தவனே. (4)

சேரன் பதிகண்டு பொன்பெறச் செய்து திகழ்நம்பியா
ரூரன் பதிகங்கொள் வோன்பெறு மைந்தன்கொம் பொன்றுடையான்
ஆரன் பதிகந்தன் மேல்வைக் கினுமொற்றை யாவணத்தின்
மாரன் பதிகனை யால்வருந் தாத வரந்தருமே. (5)

தருமந்த மாதுசத் திக்கேற்பச் செய்வர் தமைப்புரந்து
வருமந்த மாதுமை கொண்கன் வைசிய மகற்கவைமுன்
னருமந்த மாதுல னுய்வந் தவனரு ளோங்காங்கொ
ளொருமந்த மாதுயர் தீர்க்குமொற் றைக்கடைக் குள்ளிருந்தே. (6)

உள்ளங் கரைய வருகேன் சிவசின்ன முண்மையொடு
கொள்ளங் கரையறிந் தன்புசெ யேன்செய்த குற்றமெலாந்
தள்ளங் கரையணி புற்றோலர் தந்தமைந் தாநினருள்
வெள்ளங் கரையழிந் தோரா வணத்தென்கண் மேவுதற்கே. (7)

மேவிக் குடம்பையுள் வாழும்புட் போல வியப்பவென
தாவிக் குடம்பை யுறச்செய் யயனொற்றை யாவணத்தி
லோவிக் குடம்பையு ளேய்தனத் தார்மய லோடச்செயான்
மாவிக் குடம்பையும் வென்றகண் மாதுமை மாமைந்தனே. (8)

ஏவாத மைந்தர் மனைவாழ்வு சுற்ற மெலாமிருந்தும்
ஆவாத மைந்தவித் தார்வந் தடிதொழு மைங்கரனு
ரோவா தமைந்த வருள்சாரொற் றைக்கடை யுண்டுநெஞ்சே
வாவா தமைந்தறு நீங்காம லென்சொல் வழிநிற்கிலே. (9)

---

(4) பண்ணியம்-பலகாரம். மார்ந்து-உண்ணுகின்ற. உண்ணிய-உண்ண. தருணம்-சமயம். புழைக்கை-துதிக்கை. ஒற்றையாவணம்-ஒற்றைக்கடை. இங்ஙனம் வருமிடந்தோறுங் கொள்க. (5) பதி-பதிக்கின்ற. (6) தமாது-தம்முடைய. அருமந்த-அருமருந்தன்ன. மாதுலன்-மாமன். மந்தமா-யானை. (7) அங்கரை-திருமேனியுடையவரை. தள்-நீக்கு. புற்றோல்-புலித்தோல். (8) குடம்பை-கூடு. ஒவி-நீங்கி. பையுள்-துன்பம். எய்-பொருந்தும். மா-பெரிய. இக்கு-இந்தப்பூமி. உடு-உடுக்கப்பட்ட. அம்பு-கடல். (ஆகுபெயர்) (9) ஆவா-ஆச்சரியம்ஆச்சரியம். ஐந்து-பஞ்சேந்திரியங்களை. வாதம்-வாதவியாதி. மைந்து-குழைந்து. வாதவியாதி யெனவே இனம்பற்றிப் பித்தசிலேட்டும வியாதியுங்கொள்க.

...AMAH... U. V. SWAMINATHAIYA L... ...UVANMIYUR, MADRAS-41



நீங்கா தவத்தி னெடுங்காலம் போக்கினை நீண்முறம்போ
லாங்காத வத்தி முகவித் தகனமை யாளற்கிது
பாங்கா தவத்திறந் தேராய் பிரணவப் பண்பறியாய்
தேங்காத வத்திக ழோரா வணத்திலென் றீநெஞ்சமே. (10)

தீயவ ருந்தமிற் சேராமற் றள்ளுமென் றீவினைகள்
காய வருந்தமி யேனென்செய் வேனங் கரபசிநோ
யோய வருந்தமிழ் தொப்பாநின் சீரரு ளோங்கியென்பாற்
பாய வருந்தமி ழோரா வணத்திற்கண் பார்த்தருளே. (11)

பார னவரத முந்தேடித் துன்பப் படப்படைத்தா
யார னவரத மாம்பாலுண் டான்முன் னவனெனுமைக்
கார னவர தன்றுனெற் றைக்கடைக் கண்ணருளான்
ஊர னவர தமியேனெவ் வாறினி யுய்வதுவே. (12)

உய்யானஞ் சங்கர சூர்வயல் சூழ்தரு மொற்றைக்கடை
யையானஞ் சங்கரங் கொண்டாட்டு வார்க்கரு ளைங்கரன்கார்
மையானஞ் சங்கர வார்விழி யோர்பெறு மாதர்மயல்
செய்யானஞ் சங்கான் சேயவ னேயுயர் தெய்வதமே. (13)

தெய்வதங் காத்தல் செபுமென் றுன் பாத தியானஞ்செய்தே
னுய்வதங் கர்த்த முடையாயென் றேகவ லுள்வெதுப்ப
மெய்வதங் காத்தண் ணருள்புரி வெம்பிற விப்பிணியைச்
செய்வதங் காத்தழை செய்சூழொற் றைக்கடைச் சிந்துரமே. (14)

சிந்தா குலவில் லறமாய வாழ்வினிற் சிக்கியொரு
தந்தா குலவியல் பெல்லாங்கெட் டேனித் தருணத்தினீ
யுந்தா குலவி லருவாயொ ராவணத் துள்ளினிமேற்
பந்தா குலவிளங் கொங்கையர் மாமயற் பற்றறவே. (15)

---

10 முறம்-சுளகு. காத-காதுகளையுடைய. தேம் - வாசனை. கா - சோலை. தவ-மிக. (11) அரும்-அருமையாகிய. தமிழ்-தமிழ்க்கல்வியுடைய. (12) பார்-பூமி. ஆரல்-கார்த்திகைத்தாய். காரன - மேகத்தையொத்த. ஊர் - செலுத்துகின்ற. அன - அன்னவாகனத்தையுடைய. வா - பிரமனே. (13) உய்யானம்-சோலை. சங்கரசு-பாஞ்சசந்நியம். ஐ-கடவுள். ஆனஞ்சு-பஞ்சகௌவியம். மையால்-விழி ஏர் பெறுமெனக் கூட்டுக. காவு-கள்ளம். (14) ஆத்தம்-உண்மை. கவல்-கவலை. வதங்கா-வாடாத. வதம்—நாசம். (15) ஆகு — பெருச்சாளி வாகனம். உலம் - திரண்ட கற்போலும்.

பற்றக ரக்கரு ணீக்கியை வாட்டும் பரமர்மைந்த
னற்றக ரக்கருங் கூந்தலர் கொங்கை நடுங்கொர் கொம்பொன்
றுற்றக ரக்கரு ணோதி வண்மை யுடையவர்கள்
பெற்றக ரக்கரு மோரா வணத்துப் பெருந்தகையே. (16)

பெருமபார தந்த முலையுமை மன்றல் பெறவடக்க
மரும்பார தந்தவிர்த் தான்முன் கொடியுரு வாய்ப்பவந்தோன்
விரும்பார தந்தத் தருளாறொற் றைக்கடை மேயவன்முன்
னரும்பார தந்தன் மருப்பால் வரையிறை யாமனமே. (17)

மனமறக் கற்குநன் னூலொன்றுங் கற்றிலன் வஞ்சகமே
முனமறக் கற்கு முடியழித் தானுக்கு முன்னவனே
சினமறக் கற்கு வழியொற்றை யாவணஞ் சேர்ந்தறியே
னினமறக் கற்குன் றெனுமேரென் றேறிமுன் னின்றவனே. (18)

ஈன்ற வளையும் பிதாவையுந் தெய்வ மெனவறியேன்
ஆன்ற வளையுண் முழங்கொற்றை யாவணத் தன்புமிகத்
தோன்ற வளையும்பர் போற்றுனைச் சூழ்ந்து தொழேன்வெவ்விடங்
கான்ற வளையுறு பாம்பணை யான்மரு காவருளே. (19)

காவிக் குளமுறு மீனூதி யுண்கருங் காகவுரு
மேவிக் குளமுனி முன்வந் தருள்புரி வித்தகவிப்
பாவிக் குளமுலை யாவாறொற் றைக்கடை பார்த்துவந்த
நீவிக் குளமு திறங்கா தெழுமுன நேர்ந்தருளே. (20)

நேர்வந் தனங்கன் மலர்தூவ மாய்த்த நிமலனுமுள்
ளார்வந் தனங்கன்ம மாகச்செய் தர்ச்சிக்கு மையன்மகி
ளோர்வந் தனங்கன் மனமேயொற் றைக்கடை யுற்றவன்றாள்
சேர்வந் தனங்கன் மலையாயின் னூர்மயற் றீயறவே. (21)

(16) கருள்-இருளை. நீக்கியை-போக்கிய சூரியனை. பெற்ற-அடைந்திருக்கின்ற பொருள்களை. கரக்கரும்-ஒளித்தலில்லாத. (17) வடக்கமரும்-வடதிசையில் பொருந்தும். அதம்-தாழ்மை. கொடி-காக்கை. விரும்பாது-(தன்னை) விரும்பாதவருடைய. அந்தத்து-இறுதிக்காலத்தில். முன் - பண்டைக்காலம். (18) அமல்-தங்குகின்ற. முன்னவன்-மூத்தவன். மறக்கற்கு-மறத்தலுக்கு. அறக்கற்குன்று-தருமமாகிய கல்மலை. (19) ஆன்ற-உயர்ந்த. வளை-சூழ்கின்ற. அளை-புற்று. (20) காவி-நீலோற்பலம். குளமுனி-குறள்வடிவாகிய அகத்தியமுனிவன். உலையாவாறு-சலனப்படாதவிதம். விக்குள்-விக்கல். அமுது-பால். (21) ஆர்வம்-அன்பு. தன்-தன்னுடைய. கல்-கற்பாய். கல்-கற்களையுடைய.

தீயங் கணைக்கு முதன்மக னார்பணி செய்வதுவே
ஞாயங் கணைக்குல மெல்லாமொப் பாம்விழி நங்கையரைப்
போயங் கணைக்கும் படிதிரிந் தாயென்ன புத்தியவர்
மாயங் கணைக்குமொ ராவணஞ் சேர்ந்துய்ய வாமனமே. (22)

வாமனம் பண்டமை வானன் மருக மகிழுமலர்த்
தாமனம் பண்டரு மியோகியர் காணுநின் றாள்வணங்கற்
காமனம் பண்டமி ழாயேனை யுந்தொண்ட னாமெனநீக்
காமனம் பண்டா வாவுமொற் றைக்கடை காப்பவனே. (23)

காபா லியமனை யன்றுதைத் தான்வன் கருதலரைத்
தீபா லியமனை வில்லாக் கயிலையிற் சேரவரு
ளேபா லியமனை வர்க்குமென் றேரம்ப னின்றுரையான்
மாபா லியமனை வாழ்வாரொற் றைக்கடை வம்மின்களே (24)

வம்மி னமரங்க ளல்வழி யீதென்று வாழைபலாத்
தம்மி னமரங் கணன்காரொற் றைக்கடைத் தந்தியைச்சார்
தும்மி னமரங்க ளன்னபெண் மண்பொன் றொடர்ச்சியெலாஞ்
செம்மி னமரங் கணமுநில் லாதிந்தத் தீதறவே. (25)

தீதா னவனைத்தூஞ் செய்யும் புகர்முகத் தீயனெனு
மாதா னவனை யடர்த்தானன் பார்க்குமுன் வந்தருளே
யீதா னவனை யனையான்றன் சீரடி யேத்தினரைக்
காதா னவனைங் கரங்கண்டொற் றைக்கடைக் கட்டொழுமே. (26)

---

(22) ஐக்கு—சிவபிரானுக்கு. னைக்கும்—கெடுக்கும். (23) வாமனம்—குறள் வடிவம். தாமன்—மாலையுடையவன், மன்மதன். அண்டரும்—நெருங்குதலில்லாத. பண்—செய். அண்டர்—தேவர். நீக்காமல் தொண்டனாமென நம்பு எனக் கூட்டுக. (24) தீ—வாட்டுகின்ற. பாலி—மழுவாயுதத்தையுடையவன். அமல்—தங்குகின்ற. நைவு—கேடு. பாலியம்—கொடுக்கமாட்டோம். ஏரம்பன்—விநாயகக் கடவுள். மா—செல்வம். பாலியம்—இளமை. மனைவாழ்வு—இல்வாழ்க்கை. (25) நமரங்கள்—நம்மவர்கள். இனம்—கூட்டமாகிய. சார்தும்-சேர்வோம். இனம்-இன்னிம். மின்—மின்னல். அமர்—தங்குகின்ற. அம்—அழகிய. இன்னஞ் சார்துமெனக் கூட்டுக. (26) புகர்முகம்—யானைமுகம். தானவன்—அசுரன். தான—கொடையுடைய, அனை—அன்னை, காதான்-மோதமாட்டான்.

கட்டப் படாத மதயானை யொற்றைக் கடையினில்வங்
தெட்டப் படாதமர் கின்றே னெனையின் னிசையளிக
ளொட்டப் படாதம ராடிற் பயனென்மற் றேருடம்பில்
விட்டப் படாத டிகியாற் சிவன்கண்முன் வேமதனே. (27)

மதகரி யேபுனை மாமுனி வன்செய்ட் மகத்திலுகித்
ததகரி லேழி வருமெம்பி ராற்குத் தனையனெனுப்
பதகரி லென்னையுஞ் சேராதொற் றைக்கடை பற்றுவர்செய்
சதகரி சும்பொறுத் தாளுநின் றண்மலர் தந்தருளே. (28)

தந்தத் தினையங்கை வைத்தோ யொருவன் றருந்தசையை
முந்தத் தினையன்முற் றேன்றல்செவ் வேளை யுழுத்தந்தியாய்
வந்தத் தினையம ரும்புன மாது மணப்பச்செய்தோ
யந்தத் தினையவி டாதொற்றை யாவணத் தாளெனையே. (29)

ஆண்டா னடிக்க வழக்கிலை மீன்றுள்ளு மாறுழவர்
தூண்டா னடிக்கண் வரான்மோதொற் றைக்கடைச் சூழல்விட்டு
மீண்டா னடிக்கவல் லான்சே யெனுமவ் விமலனுனைத்
தீண்டா னடிக்கடி யோகினன் கேண்மடஞ் சேருநெஞ்சே. (30)

நெஞ்சே கரந்தை யணிவான் பெறுதந்தி நீண்மலர்த்தா
ளெஞ்சே கரந்தை வருமாறொற் றைக்கடைக் கேகுகிலா
யஞ்சே கரந்தைப் படும்வழி யிதென் றறிந்துமின்ன
முஞ்சே கரந்தை யலர்பாதந் தீண்டுதற் கோடுவையே. (31)

---

(27) எள்தப்பு-எள் அளவுகுற்றம். இகழ்கின்ற குற்றமெனினுமாம். அடாது-அடுக்கமாட்டாமல். அப்பு-அம்பு, புட்பபாணம். அடாது-கொல்லாது. அப்பு-ஒட்டுவாய். (28) முனிவன்-நாரதமுனிவர். தகர்-ஆட்டுவாகனம். பதகர்-பாதகர். சதம்-நூறு. கரிசு-குற்றம். "பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்ப" ரென்றார் பிறரும். (29) தசை-மாமிசம். முற்றேன்றல்-முதன்மைந்தனே. அந்தத்தில்-முடிவுகாலத்தில். வந்து என்பது செய்தோயென்பதனோடு முடியும். (30) ஆனடிக்கண்-இடபத்தின்காலிடத்து. வரால் - வரால்மீன்கள். சூழல் - இடத்தை. மீண்டால்-திரும்பினால். (31) கரந்தை-ஒருசெடி. சேகரம்-தலை. தைவரும்-தடவும். அஞ்சு-பஞ்சேந்திரியங்கள். அரந்தை-துன்பம். சே-சிவந்த, காம்-தைகள்.

ஓடிப் படிக்க நிகர்மாதர் வாயெச்சி லுண்டவர்கள்
கூடிப் படிக்க லெனமிதிக் கக்கிடை கொள்வீரிந்தக்
கேடிப் படிக்கண் ணறுமாறொற் றைக்கடை கிட்டிநின்று
பாடிப் படிக்கவந் தாற்செயு மேரம்பன் பாதங்களே. (32)

பாத கரவித்தை மேவாவொற் றைக்கடைப் பண்ணவனே
மாத கரவித்தை யிற்பூசிப் பேன்மும் மலவலிநீ
யேத கரவித்தைம் புன்புல னைக்கெ டெழுத்தெனைத்தும்
போத கரவித்தைப் போலவ னேதெப் பொருள்கட்குமே. (33)

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணர்ந்து புலனழிந்து
மருளல்ல மாந்து முதுகுரங் காயினன் மாயையெனு
மிருளல்ல லோவ வருள்வாயொற் றைக்கடை யேரம்பனே
குருளல் லரிவையர் மின்னெனும் பூரியர் கூட்டறற்கே. (34)

பூரக ரேசக கும்பகஞ் செய்து பொறியடக்குஞ்
சீரக ரேசவி யாமற் றியானிக்குந் தெய்வமறைப்
பாரக ரேசற வாழுமொற் றைக்கடைப் பற்றலர்க்காய்
வீரக ரேசனென் விக்கினந் தீர்க்கும் விநாயகனே. (35)

வினைக்கொடு மைக்குண் மெலிவேனொற் றைக்கடை மேவியநின்
றனைக்கொடு மைய றணிப்பான்வந் தேன்மிகத் தண்ணளிசெய்
துனைக்கொடு திக்கை யுறுவா றினியுற் றுழியுதவி
யெனைக்கொ டுதிக்கை யிறையே யிதுபெரி தில்லைநிற்கே. (36)

---

(32) அவர்கள்-அம்மாதர்கள். கிடைகொள்வீர்-கீழேகிடப்பீர்கள். இப்படி-இந்தப்பூமி. கேடறுமாறு பாதங்கள் செய்யுமெனக் கூட்டுக. (33) அவித்தை-அஞ்ஞானம். தகரவித்தை-இருதய தாமரை. தகர்-உடைப்பாய. அவித்து-வேவித்து. கெடு-கெடுப்பாய். போது-தோன்றுகின்ற. அகரவித்தை-அகரமாகிய விதையை. ஏது-காரணம். நீ-மனமாகிய நீ. (34) மருள்-மயங்குகின்ற. அல்லம்-இஞ்சி. மாந்து-தின்ற. முதுகுரங்கு-கிழக்குரங்கு. ஆயினன்-போனேன். அல்லல்-துன்பம். குருள் - கூந்தல். எனும்-என்று சொல்லித்திரியும். பூரியர்-கீழோர். கூட்டு-உறவு. (35) பூரகம்-சுவாசத்தையுள்ளே வாங்கல். ரேசகம்-சுவாசத்தை வெளியே விடுதல். கும்பகம்-சுவாசத்தைச் சமப்படுத்தி யடக்கல். அகர்-மனமுடையவர். மறைப்பாரகர்-வேதத்தைப் படிப்பிக்கும் பிராமணர். ஏசற-நிந்தைகெட. பற்றலர்-பகைவரை. காய்-வருத்துகின்ற. கரேசன்-கையையுடைய ஈசன். (36) கொடு-கொண்டு. உதிக்கை-பிறத்தல். உற்றுழி-உற்றஇடத்து. கொள்-கொள்வாய். இப்பாடற்பொருள் - "தந்ததுன்றன்னைக் கொண்டதென்றன்னை" என்னூர் திருப்பாசுரக்கருத்து.

இல்லாரை யாவரு மெள்ளுவ ரென்னற் கெனையிலக்கா
நல்லாரை யாவருந் தாரேனு நின்னரு ணன்குடையேன்
வல்லாரை யாவண நீர்வளம் பூமி வளநிறையுங்
கல்லாரை யாவணஞ் சாரொற்றை யாவணக் கைம்மலையே. (37)

கையஞ் சுடனொர்கொம் புற்றேயொற் றைக்கடை காப்பவனே
மெய்யஞ் சுடல்கொடு வீணே திரிவம் விரைசெய்மல
ரையஞ் சுடர்திரண் டன்னநின் மேனியி லர்ச்சித்துநின்
றுய்யஞ் சுடச்சுட லைக்குக்கொண் டேகுமுன் னுற்றருளே. (38)

உற்றாரை யோட விரட்டுவன் வஞ்சிப்ப னுன்மலர்த்தா
ணற்றாரை யோடம் பிறவிக் கடற்கென நாடுகிலேன்
சுற்றாரை யோடம ரொற்றைக் கடைக்கட் டுயர்தவிர்ப்பார்
மற்றாரை யோட விருங்கர னீன்றருண் மாதங்கமே. (39)

மாதங்கத் தானை யுடுத்த பிரானைநன் மாமனெனு
நீதங்கத் தானை யுலாவுமொற் றைக்கடை நின்மலனே
தீதங்கத் தானை யுரித்தான் முதற்பெறுஞ் சிந்துரமே
யாதங்கத் தானை யுநராவர் நின்னடிக் கன்பிலரே. (40)

அன்புரு வச்சிறப் பெய்தேனை யாளொற்றை யாவணத்தி
லின்புரு வச்சித்தி புத்தியை வேட்டவ னீயுமுனி
யென்புரு வச்சிர மாக்கிதன் னேவலி னேமலர்கள்
பின்புரு வச்சிலை கோட்டியை வீட்டும் பிரான்மைந்தனே. (41)

---

(37) இலக்கா-அடையாளமாக. நல்லார்-நல்லோர். வல்லாரை - நீர்மிக்க இடத்துண்டாகும் ஒரு பச்சிலை. ஆவணம்-உண்டாகும்விதம். கல்லாரை-கல் மதில். ஆவணம் - புநர்பூச நக்ஷத்திரத்தை. சார்-சேர்கின்ற. (38) ஒருகை-துதிக்கை. அஞ்சு-பயப்படுகின்ற. மலரை - பூக்களை. உய்யம் - பிழைக்கமாட்டோம். (39) தாரை-நேரோடுதலுடைய. ஆரை-மதில். ஐ-அழகிய. ஓடு-பிரம கபாலம். அவிரும்-விளங்கும். (40) தானை-வஸ்திரம். தான்-அசை. தீது-தீமை யுடைய. அங்கத்து-சரீரத்து. ஆதங்கத்தால்-துன்பத்தால். நையுநர்-கெடுபவர். (41) இன்-இனிய. வேட்டவ-விவாகஞ் செய்தவனே. முனி-ததீசிருஷி. உரு-நிறம். வச்சிரம்-வச்சிராயுதம். ஆக்கி-ஆக்கிய இந்திரன்; ஏ-ஏவுகின்ற. பின்பு-பிற்பக்கம். கோட்டியை-வளைத்த மன்மதனை.

U. V. SWAMINATHAIYA LIB...
...TIRUVANMIYUR. MADRAS-41



பிரானந்த னந்தமழை யகலாக மான பெரியவசெய்
வரானந் தனந்த மலியுமொற் றைக்கடை வாழ்வெய்தியும்
பரானந் தனந்தவ வேட்குமென் னெஞ்செனும் பாவியுன்பா
விரானந்த னந்தவெங் குந்திரி வாலிதற் கென்செய்வனே. (42)

என்னகந் தைத்துணி வுக்கீ டெனச்செல்வ ரேயிகழ்ந்து
சொன்னகந் தைத்துணி யுஞ்சோறுங் கிட்டிலன் றூங்கன்முக
வன்னகந் தைத்துணி லாமுயி ருண்ணு மருப்பமலை
யன்னகந் தைத்துணிக் கின்றவொற் றைக்கடை யாரத்தியே. (43)

அத்தி வளவுணன் மார்பிடங் கீண்டகோம பங்கையிற்கொள்
சத்தி வளவுப்ப லேயொற்றை யாவணஞ் சார்ந்துபெற்ற
சொத்தி வளவுமற் றுமற் கடன்பட்டுத் துய்மனமி
கத்தி வளவுறு கண்ணடைந் தேலிதைக் கண்டருளே. (44)

கண்டிக் கவாவுங் கனிமோ தகஞ்சர்க் கரையுனது
பண்டிக் கவாவுட னீவே னவற்றைப்பல் பண்டங்களோ
டண்டிக் கவாவுட் கொடுபசி தீர்ந்தபின் றூவதல்லல
துண்டிக்க வாவுயர் வாமொற்றை யாவணத் தூத்தும்பியே. (45)

தும்பிக்கை யாயன் புடையார்க்கு நீயரு டோன்றலென்ற
நம்பிக்கை யாயவந் நாலுங்கொண் டுன்னை நயந்தனனோ
டம்பிக்கை யாய மிடவேந்தி முன்சென்ற வையன்கண்ணுறல்
வெம்பிக்கை யாயம மோகமுட யிற்கை விடாதருளே. (46)

---

(42) பிரான்-எப்பொருட்குமிறைவனே. நந்தனம்-(இந்திரனுடைய) நந்தனவனம். வரால்-வரால்மீன். நந்து-சங்கு. பரானம்-அந்நியர்சோறு. தவ-மிக. நந்தல்-கேடு. நந்த-மிக. (43) தூங்கல்முக-யானைமுகத்தையுடைய. வல்-வலிய. நகம்-மலைபோன்ற அசுரனை. உள்நிலாம் - அவனுள்ளிடத்து விளங்கும்-மருப்ப-கொம்பையுடையவனே. கந்தை - கட்டுத்தறியை. அத்தி-யானையாகிய விநாயகர். (44) அத்தி-யானை முகமுடைய. வள்-வலிய. அவுணன்-அசுரன். கீண்ட-கிழித்த. சத்தி-வலிமை. வளம்-வளத்தையுடைய. இளை-மெலிய. உறுகண்-துன்பம். (45) கண்டு-கற்கண்டு. அவாவும்-விரும்பும். பண்டிக்கு-வயிற்றுக்கு. அண்டி-நெருங்கி. கவா-கவ்வி. அல்லல்-துன்பத்தை. (46) தும்பிக்கை-துதிக்கை. தோன்றல்-கடவுள். ஓடு-பிரமகபாலத்தை. பிக்கை-பிக்ஷை. ஆயம்-(தாருகாவனத்து) மாதர் கூட்டம். வெம்பு-வாடுகின்ற. இக்கு-கரும்பு வில்லுடைய. ஐ-தலைவனது. ஆய்-தாய்; இலக்குமி. விடாது-நீக்காமல்,

விடப்பட வாகமை யல்குன்மின் னாரின்ப வேட்கைத்துன்பம்
படப்பட வாக மெலிவார்தன் றுள்வெம் பவக்கடற்குத்
திடப்பட வாக நினையா ரெனினுந்தற் சேர்ந்தவர்தங்
கடப்பட வாக னெதிர்வரு மொற்றைக் கடையிடத்தே. (47)

கடைக்காலங் காணுமொற் றைக்கடை மேவைங் கராகடுஞ்சூற்
படைக்கால காலன் குமரா விளமைப் பருவக்குறு
நடைக்கா லமையும் விநாயக நங்கையர் நன்னுதலுக்
கிடைக்கால மன்ன விழிக்குடைந் தேனையு மேன்றுகொள்ளே. (48)

என்றானந் தந்தமிழ்க் கின்னு மிரங்கிலை யெம்பெருமான்
றோன்றானந் தந்தரு செய்சூழொற் றைக்கடை துன்றுநினைப்
போன்றானந் தந்தனை யெய்தநின் றாட்குட் புகுவதென்றோ
வான்றானந் தந்தம ரர்க்கருள் வள்ளன்முன் வந்தவனே. (49

வந்தித்திக் கும்பணி செய்யுஞ்சொன் மாதர் மயக்கவழி
யந்தித்திக் கும்படுத் தந்தோகெட் டேனுந்தை யங்கையினின்
றுந்தித்திக் கும்பழ னென்றன்று வாங்கு முயர்ந்தவவெண்
டந்தித்திக் கும்பரும் போற்றுமொ ராவணத் தார்க்கிறையே. (50)

தாரணி யாவையும் பெற்றானு மாசை தணியன்குறள்
போரணி யாவைத்து ளானருள் பிள்ளைப் பிரானெனுநின்
னேரணி யாவையி னில்லேனன் பில்லவர் நீள்கவித்தார்
மாரணி யாவைய னேநல்கொற் றைக்கடை வாழ்முதலே. (51)

(47) வாகு-அழகு. வேட்கை-ஆசை. படப்பட-உண்டாக உண்டாக. சேர்ந்தவர்கள்-அடைந்தவருடைய. தப்பு-குற்றத்தை. அட-கெடுக்க. ஆகன்-பெருச்சாளி வாகனத்தையுடைய கடவுள். (48) கடைக்காலம்-யுகாந்தகாலம். சூற்படை-சூலாயுதம். குறு-சிறிய. ஆலம்-விடம். (49) நந்தம்-நம்முடைய. தோன்றல்-புத்திரனே. நந்து-சங்கு. போன்று-ஒத்து. அமரர்க்கு தேவர்கட்கு. (50) வந்தித்து-வணங்கி. பணி-தொண்டு. அந்தித்து-பொருந்தி. இக்கும்பு-இந்தக் கூட்டத்தை. உந்தை-உன்பிதா. எண்-எட்டு. தந்தி-யானைகளையுடைய. திக்கு உம்பரும்-திக்குப்பாலகராகிய தேவர்களும். (51) தணியன்-தணியமாட்டேன். குறள்-பூதங்களை. அணியா-படையாக. அணி-அண்ணி; நெருங்கி. ஆவையின்-அந்த இடத்தில். மார்-மார்பு. முதல்-முதற்பொருள்.

வாழுவை யானனந் தன்போற்கற் றூலும் வணங்கிலரை
வேழுவை யானவன் றன்னடி கட்கன்பு மேவித்துயர்
போழுவை யானனந் தந்தோஞ் செயினும் பொறுக்குநல்லோர்
சூழவை யானன வேமல்கொற் றைக்கடை தோய்நெஞ்சமே. (52)

தோயச் சுகந்தரு நின்னடி பாடுநர் சூழலினிற்
போயச் சுகந்தமிழ் கற்குமொற் றைக்கடை புக்கவினைக்
கீயச் சுகந்த மலர்கொய்நி டாம விருக்குமிந்த
நாயச் சுகந்தச் சமயத் தருள்செய்வி நாயகனே. (53)

நாய்க்காவ தன்புண் டஃதெனக் கில்லை நறுமலர்கள்
தூய்க்கா வதன்கிளை நீளொற்றை யாவணச் சூழல்விட்டுப்
போய்க்கா வதமபல சுற்றிற் பயன்புகழ் புண்ணியஞ்சேர்
வாய்க்கா வதனநன் மாதங்க மாகிய மாவள்ளலே. (54)

மாவள்ளி யோகை யுடன்றா வுண்டு வளஞ்செய்புனத்
தேவள்ளி யோடு கலந்தான் றுணைவ வெவர்களுமின்ப
மீவள்ளி யோயுனை யேமுற்று நம்பிவந் தேன்முனிவர்
மீவள்ளி யோகஞ் செயுமொற்றை யாவண வித்தகனே. (55)

வித்துரு மந்தனை நேரிதழ் மாரனை வீட்டுதற்கோர்
சத்துரு மந்தன வர்மயக் கங்கெடு தற்குன்மறை
பத்துரு மந்த மறியாற் செபித்திலன் பார்த்தருண்மி
கத்துரு மந்தடஞ் சூழோர் கடையின்முக் கட்கரியே. (56)

கட்கா தலமரு ளரியுங் கயிறெனக் கண்டவரு
மட்கா தலமரு வாரேலெந் தாயுயர் வண்மையினை
விட்கா தலமரு விப்பெறு மோர்கடை மேயநின்றருள்
பெட்கா தலமரு கின்றேனிற் குற்றமென் பேசுவதே. (57)

---

(52) ஐ-அழகிய. துயர்-துன்பத்தை. போழ்-பிளப்பாய. அவை-(மேற் சொல்லிய) அடிகள். தோம்-குற்றம். அவையால்-சபையால். நனவே-தெளிவே. (53) சூழல்-இடம். அச்சுகம்-அந்தக்கிளிகள். அச்சு-சரீரம். உகு-கெடுகின்ற. (54) தூய்-தாவி. அது-பகுதிப்பொருள்விகுதி. கிளை-வளார். சூழல்-இடம். காவதம்-காதம். வாய்க்கா-கிடைக்கா. வதனம்-முகம். (55) ஓகை-மகிழ்ச்சி. ஈ-அருளுகின்ற. மீ-மேலான. வள்-வளமுடைய (56) வித்துருமம்-பவளம். சத்துரு-பகையாகிய. மந்தன்-சனியன். மறை-(பிரணவமாகிய) மந்திரம் துருமம்-சோலை. தடம்-வாவி. (57) கட்காது-கட்செவி; பாம்பு. அல-இல்லை. மருள்-மயக்கம். மட்காதல்-மண்ணாசை. விட்கா-கற்பகம். பெட்காது-விரும்பாது. அலமருகின்றேனில்-சுழலுகின்ற என்னிடத்தில். முதலடி வேற்றுப் பொருள்வைப்பு; அஃதாவது பிரவஞ்சைத்தை மெய்யென மயங்காது பொய் யெனக்கண்ட ஞானிகள் என்பதாம்.

பேசுக வாரிய ருயவி நாயகன் பெட்புறுசீர்
நீசுக வாரி யமிழ்வாபொற் றைக்கடை நீணகரில்
மாசுக வாரியல் கொங்கைமின் ஞர்தம் வசஞ்செயுவர்
ஆசுக வாரி யமர்கண் மயக்க மறுநெஞ்சமே. (58)

அறங்கரை யாமத்தி ஞலுனே யெயர்ச்சி யாதவராம்
மறங்கரை யாமத்தி மர்க்கெய்தி லாகின் மலரடியை
யுறங்கரை யாமத் தினுமற வேன்பொன் ஞெளிசெயுஞாண்
பிறங்கரை யாமத்தி யேபொற்றை யாவணப் பேரரசே. (59)

பேராசை யத்தம்பெண் மண்மேல்வைத் தேன்றொண்டர் பேசுபுகழ்த்
தாராசை யத்தனை யும்மெனே யேவந்து சார்ந்துநின்று
தீராசை யத்தமிழ் சாலொற்றை யாவணத் தேகிற்றெழா
ஓராசை யத்தரு ணங்கண்டு தீர்த்த நாளார்கொமபனே. (60)

கொம்பொன் றலங்க வெதிர்வரு வாயெனிற் கும்பிட்டுநல்
வம்பொன் றலங்க லணிவேம் பமபடர் வந்தெதிர்த்தா
லும்பொன் றலங்கய மேயொற்றை யாவணத் துள்ளேயன்றி
யம்பொன் றலங்கணிற் காணவு மெணணரி லமைபுமுற்றே (61)

ஐயா கவலை யறுமொற்றை யாவணத் தன்பனைத்தும்
பொய்யா கவலையும் புன்சிறி யேற்குமுன் பொன்னிறமே
செய்யா கவலைமுன் வீசிய செம்மலின் சேயெனுநீ
யுய்யா கவலை யுணக்கொடுப் பேனைநை யூர்ந்தருளே. (62)

---

(58) ஆரியன்-குரு. வாரி-கடவுள். அமிழ்வாய்-மூழ்குவாய். மாசு-குற்றம். உக-கெட. ஆசுக ஆரி-பாணத்தினபூகு. நீ அச்சுகவாரியமிழ்வா யெனக் கூட்டுக. (59) அறம்-தருமசாத்திரம். கரை-சொல்லுகின்ற. ஆமம்-பச்சரிசி. மறம்-பாவம். கரையா-குறையாத (தாற்பரியம்.) ஞாண்-கயிறு. அரை-இடை. ஆம்-ஆகின்ற. (60) சை அத்தனையும்-இகழ்ச்சியவ்வளவும். தீரா-நீங்கமாட்டா. சையம்-(பொதிகை)மலையின். சால்-மிகுந்த. ஆசை-குற்றத்தை. அத்தருணம்-தீருஞ்சமயம். (61) வம்பு-வாசனே. ஒன்று-பொருந்துகின்ற கயமே-யானைமுகக் கடவுளே. உள்ளே-இடத்தை. பொன்றலம்-பொன்னுலகத்தை. (62) பொய்யாக-பொய்யாய்ப்போக. செய்ஆக-செய்கின்ற திருமேனியுடையாய். சேய்-மகன். உய்-செலுத்துகின்ற. ஆகு-பெருச்சாளி வாகனம். அவலை-சிற்றுண்டிகளை.

ஈர்ந்து வருமிள வேறுடை யானை யொருவலஞ்செய்
தீர்ந்து வருமிணை யில்கனி யேற்றவ னென்றுன்பெலாஞ்
சேர்ந்து வருமிழு நஞ்சென வாட்டுமித் தீக்கொடுமை
யோர்ந்து வருமித் தொறுப்பாயொற் றைக்கடை யுள்ளெழுந்தே.

உள்ள றலைப்பட வாளை குதித்தெழு மொற்றைக்கடை
வெள்ள றலைப்படர் செஞ்சடை மேற்கொள் விமலனருள்
வள்ள றலைப்பட வைநின் னடியும் மலவலியைப்
பிள்ள றலைப்பட ராவிதம் நிற்குப் பெரித்தன்றே. (64)

பெரிய வரையர மாதர வாமம் பிகைபெற்றருள்
அரிய வரையர மாதர மேவொற்றை யாவணத்தார்க்
குரிய வரையர மாதரன் மாமரு கோர்மையெழில்
தெரிய வரையர மாதர மென்னுங்கட் சேயிழையே. (65)

சேவித்த கையறுப் பாரிலை யான்பிற தெய்வங்களைப்
பாவித்த கையனென் றெள்ளா தருண்முக்கட் பண்ணவனே
வாவித் தகையம ரோரா வணத்துன் மருப்பினைவிட்
டேவித் தகையக் கயமுக னிற்பெரி தென்வினையே. (66)

எம்பாவ மத்தனை யுந்தீரொற் றைக்கடை யேத்திலந்துன்
பம்பாவ மத்தனை யுந்ததி போன்று பரமரங்கை
யம்பாவ மத்த மடங்கச்செய் தாற்கரு ளைங்கரனே
வம்பாவ மத்த னெனுநீயென் முன்னர் வராவிடிலே. (67)

---

(63) ஈர்ந்துவரும்-குளிர்ந்த பவளமும். உவர்-கடல். வருமித்துவயிரங் கொண்டு. (64) உள்ளல் – உள்ளானென்னும் பறவை. தலைப்பட - (வந்து) கலக்க. வாளை—வாளைமீன். அறலை-கங்கையை. படர்-விரிந்த. வள்ளல்-வள்ளற்றன்மையுடையவனே. பிள்—பிள. அறு-முறி. அலைப்பு-துன்பம். அலைப்பு அடாவிதம் பிள்ளறு எனசகூட்டுக. அடா—நெருங்கா. (65) வரை-மலை. அரமாதர்-தெய்வப்பெண்கள். அவாம்-விரும்பும். அரியவர்-அருமையாயுள்ளார். ஐயர்—, அம்-அழகிய. ஆதரம்-அன்பு. அரையா-தலைவர். அ-அந்த. மாதரன்-இலக்குமியைத் தரித்த விஷ்ணு. மருகோர்-மருமகனுயுள்ளவர். வரை-எழுதுகின்ற. சரம்-ஒப்பு இச்செய்யுள் மகடூஉ முன்னிலை. (66) சேவித்த-கும்பிட்ட. கையன்-கீழோன். தகை-அழகு. தகை-தடு. கயமுகனில்-கயமுகாசுரனைப் பார்க்கிலும். (67) பாவ-வியாபிக்க. அளையும்—கலக்கும். ஆவம்-அம்பறுத்தூணி; கடல். அத்தம்-கையில். வம்பு-வீண். ஆம்ம்-ஆவோம். ததிபோன்று வம்பாவமெனக் கூட்டுக. ததி—தயிர்.

MAHAMAHOPADHYAYA
...NATHA IYER LIBRARY

வரவிம்மி தந்தனை யாற்றுந் தமிழ்கற்று வாஞ்சையிருந்
திரவிம்மி தந்தறி யார்பாற்செய் வேனின் னிடத்தெய்தியீ
பரவிம்மி தந்தரு மோர்கடை யாயென்று பாடிலனைங்
கரவிம் மிதந்தபுத் திச்செய லேகக் கடைக்கணியே. (68)

கடைக்கணி யாய நிறைதரு மொற்றைக் கடையுறுமென்
னடைக்கணி யாயங் கருதேல் விநாயக நங்கைவள்ளி
யிடைக்கணி யாயவ னண்ணு மெனுமெந்தை யேயன்பர்சொற்
றொடைக்கணி யாயர் குழலினு மாம துரத்ததென்றே. (69)

துரகங் கவிக்கருள் வார்வாழொற் றைக்கடைத் தும்பிமுனி
கரகங் கவிழ்க்குங் கருங்காக மென்னைக் கடுங்கொடுந்தீ
நரகங் கவிக்குமுன் னேவந் தருள்செயு நானினிமே
லுரகங் கவிக்கொ டவலையைப் போலுள் ளுடைந்திலனே. (70)

உடையானை யாவ ரோரீஇயிருப் பாரஃ தோர்வை யொற்றைக்
கடையானை யானன மேயா யெனையுட் கலக்குமலத்
தடையானை யாதுனைச் சாரவைப் பாய்கையிற் றங்குசங்கப்
படையானை யாண்டு மிவர்வானும் பூசிக்கும் பாதத்தனே (71)

பாதங் களைகண் டடியேனுக் காக்கவுட் பற்றுபசு
போதங் களைகண்ட மீதேயை தோன்றுமுன் போயுறியி
லேதங் களைகண்ட போதே கவர்பவ னின்மருகா
தீதங் களைகண்ட கர்தீரொற் றைக்கடைச் சின்மயனே. (72)

---

(68) வரம்-விசேடமாகிய. விம்மிதம்-ஆச்சரியம்; அஃதாவது எலும்பைப் பெண்ணாக்குதல் முதலியவை. வாஞ்சை-ஆசை. இரவு-யாசித்தல. பர-மேலானவனே. விம்மு-பெருக்கின்ற. இ-இந்த. மிதந்தபுத்தி-மந்தப்புத்தி. இரவுசெய்வேனெனக்கூட்டுக. (69) ஆயம்-ஆதாயம். நடைக்கண்-ஒழுக்கத்தினிடத்தில். இடை-இடத்து. கணி-வேங்கைமரம். சொல்தொடை-சொற்றொடுத்தலுடைய. கணி-கண்ணி; மாலை. ஆயர்-இடையாது. குழலினும- (வேய்ங்) குழலோசையைப்பார்க்கிலும். இக்கவி, கடைதலைவிற்பூட்டுப்பொருள்கோள். (70) கவிக்கு-புலவனுக்கு. நரகு நரகம். உரகம்-பாம்பு. கவிகொள்-கவ்விகொண்ட. (71) ஓரீஇ-நீங்கி. ஓர்வை-உணர்வாய் ஆனனம்-முகம். நையாது-கெடாமல். படை-ஆயுதம். ஆனை-இடபவாகனத்தை. யாண்டும்-எவ்விடத்தும். இவர்வானும்-ஏறுகின்ற சிவபிரானும். சங்கம்-விஷ்ணு பஞ்சாயுதத்திலொன்று. (72) களைகண்-ஆதாரம். பசுபோதம்-சீவபோதம். களை-நீக்கு. கண்டம்-கழுத்து. ஐ-கோழை. அளை-தயிர். அளை-கலக்கின்ற. கண்டகர்-பாவிகள். தீர்-நீங்கிய. களைகணுக் தவெனக் கூட்டுக.

சின்மைய னாகத் திகழ்நின்னை யாவணத் தின்மடவார்
பன்மைய லாக மதியை விழுங்கநிற் பாடிமகிழ்
நன்மைய னாகற்ற தெற்றுக்கண் ணாலிந் நவைநின்முன்னர்
வன்மைய னாகமை யென்முன் கெடலொப்ப மாயுமின்றே. (73)

மாயா மலகன்ம மத்தனை யுங்கெட மன்னுமங்கை
யேயா மலக மெனநினைக் கண்டில னோரம்பனே
காயா மலக மிசைவந் திருந்து கருணைசெய்நீ
யாயா மலகறு மன்புக்கென் பாலொற்றை யாவணத்தே. (74)

ஆவணம் பற்பல வாமொற்றை யாவணத் தாம்பன்முகத்
தேவணம் பற்ப மூறுசெம்மை யாமது தேர்ந்தர்ச்சிக்கப்
பூவணம் பற்பமென் றெண்ணற்க வென்னுரை புன்மனமே
சாவணம் பற்பகை யாம்வினை நீசெயத் தக்கதன்றே (75)

தக்க மடமையு ளாயா தலிற்பெண்க டாஞ்செய்மயற்
றுக்க மடமைந் தனையினி யாவது சொல்வதுகே
ளக்க மடமை யலரு டுலாமொற்றை யாவணத்தின்
பக்க மடமைந் திருவொரு கொம்பன்கண் பார்த்திடுமே (76)

பாரத் துவாவிளங் கொங்கைய ராடப் படுமணமார்
தீரத்து வாவி நிறையொற்றை யாவணஞ் சேர்ந்துவயி
றாரத்து வாவிரு வெண்றே ரதிதிக்கு மன்னமிடா
ரோரத்து வாவினு முய்யார் கயமுகத் தூத்தமனே. (77)

---

(73) பல்மையல்-பலமயக்கமாகிய. அல்-அல்லாத. நா-நாக்கு நவை-குற்றம். வன்மை-வலியகரிய. அல்-இருள். நாகு-இளமை. அமைஎல் - அமைந்த சூரியன். நவைமாயுமெனக் கூட்டுக. (74) எய்-பொருந்திய. ஆமலகம்-நெல்லிக்கனி. காயாமல்-கோபியாமல் ஆயாம்-தாயாகும். அலகு-எண். (75) ஆவணம்-கடைவீதி. ஆம்பல்-யானை. தே-கடவுள். வணம்-வண்ணம்; நிறம். பற்பம்-தாமரை. செம்மை-சிவப்பு. பூ-மலரை. அள்-அள்ளுவாய். அற்பம்-இலேசு. சாவு - மரணம். அண் - பொருந்துகின்ற. அம்பற்பகை-பழிச்சொல்லாகிய விரோதம். என்னுரையற்பமென்றெண்ணற்க,நம்பு எனக்கூட்டுக. (76) உளாய்-உடையாய். அட - நெருங்க. மைந்தனே-குழைந்தாய். கமடம்-ஆமை, ஐ-அழகிய. அலர்-நீர். அடு-அடுப்பாய். அமைந்திரு-அடங்கியிருப்பாய்.(மனமே) (77) துவா-இரண்டு. ஆட-மூழ்குதலால். படும்-உண்டாகும். தீரத்து-கரையையுடைய, து-உண். அத்துவா-வழி.

உத்தம னத்தி யுரித்தானும் பூசிக்கு மும்பலென்றா
மூத்த மனத்தி னிறத்திரு மேனிய னன்பர்தொழுஞ்
சித்த முனத்திமிர் தீர்ப்பான்செய் மேதி செருத்தலின்றீங்
துத்த மனத்திரட் கூட்டுமொ ராவணத் துத்தெய்வமே. (78)

துத்தங் கருமை சுரந்திடல போன்மனை தோறுஞ்செல்வர்
தத்தங் கருமை யெருமை சொரியுந் தகவுநிறை
யத்தங் கருமை பெருமை மலியொற்றை யாவணத்தார்
சித்தங் கருமை யொருபாகர் முன்பெற்ற சீர்மைந்தரே. (79)

சீரிய மன்றற் குழற்புத்தி யோடுநற் சித்தியெனும்
பாரிய மன்ற மிசைநடஞ் செய்தருள் பாதத்தினாற்
காரிய மன்றனை யன்றுதைத் தார்பெற்ற கண்மணியே
பேரிய மன்ற முழங்கோர் கடையிற் பெருந்தகையே. (80)

பெரும்பா கலங்கறைத் தாளங்கு சங்கையிற் பெற்றிவர்ந்து
வரும்பா கலங்களி றேயொற்றை யாவண மாகவினூர்
தரும்பா கலங்க லறக்கொளு நின்னெஞ்சென் றன்மட்டில்வல்
விரும்பா கலங்கவிழ் நாய்கனைப் பாநின் றிரங்குவனே. (81)

இரங்காயஞ் சக்கர மாற்கிவள் ளாலுயர்ந் தின்னல்செய்மூப்
புரங்காயஞ் சககரன் மைந்தாவொற் றைக்கடைப் பூங்கொம்புதீர்
குரங்காயஞ் சக்கர ளம்போற் சுடுந்துயர் கொண்டுநிரந்
தரங்காயஞ் சக்கர மானூர்க்கு மின்னென்று தாழ்ந்தனனே. (82)

---

(78) என்றூழ்-சூரியன். திமிர்-விறைப்பு. மேதி-எருமைகள். செருத்தல்-பால்மடு. துத்தம்-பால். (79) துத்தம்-பால். கருமை-சூல்கொண்ட மேகம். தகவு-குணம். சித்து அங்கர்-ஞானமே திருமேனியாகவுடையவர். துத்தம் எருமை சொரியுமெனக்கூட்டுக. (80) மன்றல்-வாசனை. பாரிய-மனைவியையுடையாய். பேரியம்-பெரிய வாச்சியம். (81) பாகலம்-யானை நோய். கறைத்தாள்-உரலடி. இவர்ந்து-ஏறி. பாகு-பாகன். அல்-இல்லாத. கலங்கல்-வருத்தம். மட்டில் - அளவில். கலம் - கப்பல். நாய்கன் - வணிகன்; செட்டி. (82) காய்-சுடுகின்ற. தீர்-நீங்கிய. களம்-விடம். நிரந்தரம்-எப்பொழுதும். சக்கு-கண். தாழ்ந்தனன்-தாழ்வடைந்தேன். காயமின்னென்று எனக்கூட்டுக.

தாழைப் பசிய வளநாட்டி லெம்மிறை தந்நதிக்
கீழைப் பசியனைத் துந்தோய்ந்தவன் றனடி கிட்டச்செயு
மூழைப் பசியக மேயொற்றை யாவணத் துற்றுச்சும்மா
பீழைப் பசியற வுண்டிருந் தாலென் பெறுவதுவே. (83)

பெறுகம்பு லாம்வய லொற்றைக் கடையெம் பிரானுக்குப்பச்
சறுகப்பு லாய்த்தணிந் தாறுபே றெனும்பதி னாறினிலுஞ்
சிறுகப்பு லாலுணுஞ் சேரிப் பரத்தையர் திட்டியென்று
மறுகப்பு லாச மொடுபாய சொரிந்து வருந்திலமே. (84)

வரும்போ தகந்தனி லுண்மை யுரைக்கு மருப்பொன்றுடைப்
பெரும்போ தகந்தவ ருரைதென்ற நீயெம் பிரான்பெறவோங்
தரும்போத கந்தன்முன் னுமந்தத் தந்திமுன் சார்ந்திடிற்ப
கரும்போத கந்தண் பொழில்சூழொற் றைக்கடைக் கண்மணமே. (85)

கண்கண்ட முற்றெய்வ மொற்றைக் கடையைங் கரனவன்றாள்
உண்கண் டமுதினு மிக்கினி தாமென் றுவரிசுலா
மண்கண் டமுமற்றைக் கண்டமுஞ் சொல்லு வதைமனத்து
ளெண்கண்ட முட்டிய துன்பமெ லாம்வந் திசையினுமே. (86)

இசைவாக மங்கல மேயுமொற் றைக்கடை யில்லுயர்வே
தசைவாக மங்கலந் தாயே னுனையெனச் சாம்பொழுதி
லசைவாக மங்கலங் கண்ணுற வெப்பதுமுன் னுற்றுவெரிங்
கிசைவாக மங்கலன் போற்றரித் தானுக்கு மேற்றெய்வமே. (87)

---

(83) தாழை-தென்னை. நாட்டில்-சோழநாட்டில். இறை - விநாயகர். நதிக்கீழ் - காவிரியினிடத்து. ஐப்பசியனைத்தும் - ஐப்பசிமாதமுழுதும். பசி-துதிப்பாய். பீழை-துன்பம். (84) பெறுகம்பு-ஈனும்பருவத்தையுடைய சங்கு. பேறு-பயன். சிறுகம்-குறையமாட்டோம். திட்டி-கண். மறுகு-சுழலுகின்ற. உலாசம்-உல்லாசம், சந்தோஷம். பதினாறு-புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள். (85) போதகம்-யானைக்கன்று, பிரான்-சிவபெருமான். ஓம்-பிரணவப்பொருளை. போத-ஞானத்தையுடைய. தரு-பொருந்திய. (86) முற்றெய்வம்-முதற்றெய்வம். கண்டு-கற்கண்டு. சுலாம்-சூழும். எண்கு-எண்ணுவேன். இது தன்மைவினை முற்று. (87) மங்களம்-சுபச்செய்கை. உனை எனை-தலைவனையும் தன்னையும். அசைவு-சலனம். ஆகம்-சரீரம். அங்கு-அவ்விடத்து. வெரிந்-முதுகு. கம்-கங்கையை. அம்-அழகிய. கலன்-ஆபரணம்.

மேம்பட்ட மத்திகை போலவொற் றைக்கடை மேயவெண்பா
ஆம்பட்ட மத்தி முகத்தணி வானுக்கென் றுன்மிடியாம்
பாம்பட்ட மத்திற் சனிபோற் பகைக்கப் படினுந்ததி
காம்பட்ட மத்திற் கலங்காமை மானக் கலங்கிலேனே. (88)

கலங்கல மாக்கண்க ணீர்சோர மும்மலக் கட்டுப்பட்டு
விலங்கல மாக்களில் வீண்பத ராமெமை வேண்டிநின்றோ
டலங்கல மாக்கரி தேனுமெம் முள்ளத்தி லன்பெனலா
மிலங்கல மாக்கடைக் கண்பாரொற் றைக்கடை யேரம்பனே. (89)

ஏரம்ப சூரத் தரியலற் காய்ந்த விறைமுனண்ணல்
சீரம்ப சூரத்தர் மைந்தா கயமுகற் செற்றகொம்பாங்
கூரம்ப சூரத் தனையுமி லோர்கடைக் குஞ்சரமே
யாரம்ப சூரத் தனமாயிற் றுன்பணி யாற்றுவதே. (90)

ஆற்றடங் காவெள்ள மோவா மதுரை யதன்வடகீழ்
பாற்றடங் காமலி யோரா வணத்தென் பழவினையாற்
கூற்றடங் கார்துணை நின்னையல் லாதக் கொடியன்வருங்
காற்றடங் கார்மழை போன்மதஞ் சோர்துதிக் கையிறையே. (91)

கையடை யாகவந் தேனரு ளந்திய காலங்கண்டத்
தையடை யாலறி வோயுமுன் னேயொற்றை யாவணத்திற்
பையடை யாரர சுள்ளுமென் னுள்ளும் பழவினைத்தீ
மையடை யாருள்ளு நீங்கா விநாயக வாரணமே. (92)

---

(88) மத்திகை-மாலை. பட்டம்-நெற்றிப்பட்டம். ததி-தயிர். காம்பு அட்ட-காம்பைக்கெடுத்த. மத்தின்-மத்தால். (89) விலங்கலம்-விலகமாட்டோம். மாக்களில்-மனிதருக்குள். அலங்கு-விளங்குகின்ற. அலம்-அமைவு. இலம்-வீட்டில். கல-கலப்பாய். மா-ஒரு சிற்றளவு. (90) சூரத்தரியலன்-சூரனுகிய பகைவனை. சீர்-சிறப்புப்பொருந்திய. அம்-அழகிய. பசு-எரு, இடபவாகனம். ஊர்-செலுத்துகின்ற. கூர் அம்ப-கூரிய பாணத்தையுடையவனே. பணி-தொண்டு. ஆற்றுவது-செய்வது. (91) ஓவா-நீங்காத. கூற்று-யமன். அடு-கொல்லுகின்ற. தடு-தடுப்பாயாக. (92) கையடை-அடைக்கலம். அந்தியகாலம்-மரணகாலம். கண்டத்தை-கழுத்தை. அடு-அடுக்கின்ற. ஐயால்-கோழையால். பையடை-பரிய இலைகள்.

வாரண வாசி நகர்க்கங்கை தோய்ந்தென் வனநரியைச்
சீரண வாசி யியற்றிக் கொடுவரு செம்மற்குமுற்
காரணவாசி ரியனுமொற் றைக்கடை காண்பவர்க்குப்
பூரண வாசி புகல்வோ னருள்பெறப் போந்திலரே. (93)

போந்தா ரகவல் லறச்செயுஞ் செஞ்சுடர் போனுநிற்குத்
தேந்தா ரகவன் முதலிய பாவெனத் தேர்ந்தவைசெய்
யேந்தா ரகவர சேயய னீன்ற விருசுதைக
ளாந்தா ரகவ லுருதொற்றை யாவணத் தாளமையே. (94)

ஆளா வதுமெய்ந் நினக்கேயொற் றைக்கடை யாரரசின்
மீளா வதுல விமலா வலம்புரி மென்மலர்த்தார்த்
தோளா வதுவைசெய் சித்தியும் புத்தியுந் தொண்டுசெயுந்
தாளா வதுசெய யானும்வந் தேனென் றனக்கருளே. (95)

தனதானி யாதிகள் வேண்டிநின் சீர்த்தியைச் சாற்றுதனீங்
கினதானி யாயமி லாரையும் பாடி யிரங்குமன்பர்
மனதானி யாகிய வள்ளாலொற் றைக்கடை மாதங்கமே
யெனதானி யாரம்ப காலம்வந் தாட்செய்வ தென்னுளதே. (96)

என்னந் தரங்க மிசையாதொற் றைக்கடை யெய்துதற்கு
முன்னந் தரங்க மிசைவான் வணங்கு முதல்வவளை
மன்னந் தரங்க மிசைநிற்கு மாற்கருள் மாவள்ளலென்
றன்னந் தரங்க மிசைவாக மந்தந் தவன்பொருளே. (97)

---

(93) வாரணவாசி-காசி. வனநரி-காட்டுநரி. சீரண-சிறப்புப்பொருந்த. ஆசிரியன்-குரு. ஆசி-மங்கலவாழ்த்து. (94) போந்தார்-வந்தவர்கள். அகஅல்-உள்ளிருள், ஆணவமலம். அவை-அகவல் முதலிய பாவாகிய அப்பாடல்களை. செய்யேம்-பாடமாட்டோம். தாரகம்-பிரணவமந்திரம். சுதைகள்-புத்திரிகள். தார-மனைவிகளையுடையாய். கவல்-கவலை. (95) ஆள்-அடிமை. அரசின்-அரசமரத்தினின்றும். அதுலம்-ஒப்பில்லாத. வலம்புரி-நந்தியாவர்த்தம். அது-அத்தொண்டு, அடிமை. (96) தால்-நாக்கு. மனதானி-மனமாகிய தானத்தையுடையவன். ஆனி-அழிவு. (97) அந்தரங்கம்-மனம். தரங்கம்-சமுத்திரத்தை. மிசைவான்-(உழுந்தளவாக்கி) உண்ட அகத்தியர். வளை-சக்கராயுதத்தை. மல்-நடனம், அது விஷ்ணுகூத்து. நந்து-மிகு. அரங்கமிசை-சபையின்மேல். வள்ளல்-வள்ளலே. அந்தரம்-தீமையை. தமி-பொறுத்தருள். பொருள்-புத்திரன்.

தந்தத் தனதன வென்றளி பாடுந் தடப்பொழில்சூ
ழந்தத் தனதனையார் பயிலொற்றை யாவணத்தில்
முந்தத் தனதனந் தானந்த நல்கு முழுமதநீ
ருந்தத் தனதன யங்காணில் யாவ ரொருவுவரே. (98)

ஒருவிதத் துங்கடைத் தெருவொற் றைக்கடை யூர்க்குட்செலுந்
தெருவிதத் துற்சனர் சேர்க்கைவிட் டேகெனிற் சென்றிலைவெள்
ளருவிதத் துன்னத யானை மலையி னயலிற்பினு
மருவிதத் தும்பி முகன்மன மேயருள் வானருளே. (99)

அருளத் தனையொப்பி லாதானொற் றைக்கடை யையன்றிரண்
டுருளத் தனைமுக முற்றவன் பெற்றவன் யோகஞ்செய்ப
வருளத் தனையனை யானா யுறைபவன் மன்னுமிரு
பொருளத் தனையுந் தருமவன் றாமரைப் பூங்கழலே. (100)

முற்றிற்று.

## வேண்டுகோள்.

மன்னுமொற் றைக்கடை வாய்க்கா வரச மரத்தடியிற்
றுன்னுமொற் றைக்கொம்ப னைத்தேவ வென்னுட் டுபரமறப்
பன்னுமொற் றைத்திரி பங்கா டிமாலைப் பார்த்தணிவாய்
மின்னுமொற் றைப்பொன் மணிமாலை யின்விலை மிக்கதித்தே

---

(98) தனதன்-குபேரன். முந்த-முற்பட்டுவர. அனந்தானந்தம் - அளவில்லாத ஆனந்தம். உந்த-செலுத்துகின்ற. அத்தன்-துதிக்கையுடையவன். அதன்-அதனுடைய. அதாவது- அனந்தானந்தநல்குதல். (99) அத் துற்சனர்- அந்தக்கெட்ட சனங்கள். உன்னதம்-உயர்ச்சி. அயல்-பக்கத்தில். இதத்தும்பி முகன்-நன்மையுடைய யானைமுக விநாயகர். (100) அருள-கருணைசெய்தற்கு. அத்தன்-(துதிக்)கையுடையவன். உளத்து-மனத்தினிடத்து. அனை-அன்னை, தாய். அனையானாய் - ஒப்பவனாய். இருபொருள் - கல்விப்பொருள், செல்வப் பொருள். (வேண்டுகோள்) மின்னும்-மின்னலும். ஒற்று-பொருந்துகின்ற. ஐ-அழகிய. ஒற்றைமாலையெனக்கூட்டுக.

உ

சிவமயம்.

# ஒற்றைக்கடை விநாயகர்

# இரட்டைமணி மாலை.

## வெண்பாவும் கலித்துறையும்.

### காப்பு.

ஓரா வணமுற் றுயரறிவி னோருமுளத்
தோரா வணமுற் றுணர்ச்சியொடு—சீராம்
இரட்டை யமைந்த தனுக் கேற்பவே யப்பற்
கிரட்டைமணி மாலைசெப்வே னியான்.

### நூல்.

பூங்கமல மேலயனும் போற்றுந்தன் பொன்னடியை
யாங்கமல னொற்றை யாவணத்தா—னீங்கரிய
கொம்பிருக்குங் கையான் கொடுக்குமேற் கூடுமே
நம்பிருக்கு மெய்தா நலம். (1)

நலங்கற் றவர்தங் கருத்தினிற் காண்பவ னண்ணுபந்த
விலங்கற் றவருளத் தேயுறை யேரம்பன் மெய்பறிவு
கலங்கற்றம் பார்த்தெமன் வாராதொற் றைக்கடைக் கட்டவிர்த்தென்
னலங்கற் றமிழ்புனை வானவ னேநமக் காந்துணையே. (2)

ஆம்பழனஞ் செந்நெ லடையொற்றை யாவணத்தின்
மாம்பழனஞ் செங்கைவைத்த வள்ளலே—தேம்பழனு
ளருமுன் னருமுன் னங்கமுங்கண் டாற்கணத்து
ளேகுமென் றுன்ப மெலாம். (3)

(காப்பு) ஓராவணம்-ஒற்றைக்கடை. இரட்டையமைந்ததனு - தேவசரீரமும், மிருகசரீமும். (1) ஒற்றையாவணத்தான்-ஒற்றைக்கடையையுடையவன். (2) அற்றம்-சோர்வு. அலங்கல்-மாலை. (3) பழன்-பழம் அழன்-பிணம். ஆகும்-பெருச்சாளி வாகனமும். அங்கமும்-திருமேனியும்.

எல்லாரு மண்ணிற் பிறந்திறந் திட்டன ரிவ்விரண்டும்
அல்லாரு மாபதி யன்றியில் லென்றறிந் தாரதனால்
நல்லா ருளங்கொ ளவனரு மைப்பிள்ளை நாலுகவி
வல்லா ருலாமொற்றை யாவணஞ் சேர்முக்கண் மாதங்கமே. (4)

மாதம்பத் தோடிரண்டு வாய்த்த மழகளிறே
மாதம்பத் தோடிரண்டு மன்கருவுட்—போத
லறமுறக்கா தாயொற்றை யாவணத்தாக் கென்னை
யறமுறக்கா தாய்நீயே யாம். (5)

ஆம்போதி லாமென் றடங்கா தவாக்கொண் டலைந்துடலந்
தேம்போதி சற்றுமி லாதேனை மாதர்தஞ் சிற்றிடையுட்
பாம்போதி னந்தினம் பற்றுமித் துன்பப் படமுடியா
தோம்போதி யாயினி யேனுமொற் றைக்கடை யோர்கொம்பனே. (6)

ஓராயி ரந்துன்ப முற்றவற்றை யோவுநெறி
நீரா யிரந்துபடு நெல்லொத்தீர்—பாராயு
மொற்றைக் கடைவீர முற்றகொம்பொன் றுள்ளானன்று
ளொற்றைக் கடைவீ ரினி. (7)

இன்னா தனமுற்று முற்றேன் மனத்தையு மெண்ணில்விலைப்
பொன்னா தனமெனப் போந்திருந் தான்வண்டார் பூம்பொழிலுட்
டன்னா தனவென்று பாடுமொற் றைக்கடைத் தாழ்துதிக்கை
மன்னா தனவன் கருணையை யென்னென்று வாழ்த்துவனே. (8)

---

(4) இல்-இல்லை. நாலுகவி-ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம். (5) தம்பத்தோள்-தூண்போன்ற தோள்கள். அற-கெட. முறக்காதாய்-சுளகுபோன்ற காதையுடையவனே. கா-காப்பாய். அறஎன்னை ஆக்குஎனக் கூட்டுக. ஆக்கு-செய். பன்னிரண்டுமாதங் கருவென்றது பிதாவயிற்றிலுள்ள இரண்டுமாதமுஞ் சேர்த்தென்க. (6) தேம்பு-வாடுகின்ற. ஓதி-ஞானம். ஓம் - பிரணவப் பொருள். (7) ஓவுநெறி-நீங்குமார்க்கம். ஆயிர்-ஆராயமாட்டீர். (8) இன்னாதன-இன்பமில்லாதவைகள், மன்-நிலைபெற்ற.

வாழ்வனைத்து மெய்யென்றே மாந்து மயற்கடற்குள்
வீழ்வனைத்துன் பத்தினின்று மீட்டியின்னும்—பாழ்வயிற்றி
னுங்கருவெய் தாதொற்றை யாவணத்து னைங்கரன்று
ளோங்கருளே செய்யுநெஞ்சே யோர். (9)

நெஞ்சந் தியங்க வுழல்வேனை யாட்கொள நீயிச்சம
யஞ்சந்தி யங்கவு ளாடியொப் பாகிய வங்கனையார்
தஞ்சந் தியங்கவுஞ் சம்மதித் தானுந்தை தானதையோர்
மஞ்சந் தியங்க வுயரொற்றை யாவண மாதங்கமே. (10)

மாகமுகங் காவளர்ந்து வானவர்முன் மாதருநே
ராகமுகங் காட்டுமொற்றை யாவணத்து—ளேக
மருப்பங்கை யன்பதத்தை வாழ்த்துவரே வாழ்வார்
மருப்பங்கை யன்படையா மல். (11)

மல்லலம் பாரர சிந்திரன் மாலயன் வாழ்வுறினும்
அல்லலம் பாரம் பகமாத ரின்ப மடுக்கினுநாம்
புல்லலம் பாரதந் தீட்டுநின் றாளன்றிப் பூசுரரில்
லில்லலம் பாரணஞ் சாலொற்றை யாவணத் தேரம்பனே. (12)

ஏரம்பன் றங்கரங்க ணேந்திழையார்க் கென்னுநெஞ்சே
யேரம்பன் றங்கரசை யேவலஞ்செய் —தோரம்
அடுக்கநினைப் பாயேலோ ராவணத்து ளாரோ
டுக்கநினைப் பார்ப்பா னவன். (13)

அவன வளது வெனுமொற்றை யாவணத் தைங்கரனிப்
புவன வளவுசெய் காலான் மருகன் பொழில்வளமிக்
கவன வளவன்றன் னாடுதண் காவிரி காணவிட்டோன்
எவன வள்வ ரிவைய ரிருவர்க் கிறையவனே. (14)

---

(9) வீழ்வனை-வீழுகின்ற என்னை. பாழ்-வீணாகிய. (10) சந்தி-சந்திப்பாய். கவுள்-கன்னம். ஆடி-கண்ணாடி. சந்து-தூது. மஞ்சு-அழகிய. அந்தி-செவ்வானம்போன்ற. அங்க - திருமேனியையுடையாய். (11) தரு - கற்பக விருக்ஷம். மரு-வாசனை. (12) மல்லல்-வளர்தங்கிய. அல்லல்-துன்பத்தை யுடைய. ஆர்-ஒத்த. இல்லில்-வீட்டில். அலம்பு-முழங்குகின்ற. சால்-மிகுந்த. (13) அம்பன்று - பாணமல்ல. கரம்-விடம். அரசை-அரசமரத்தை. அடுக்க-அடுக்கிவைக்க, சேர்த்துவைக்க. (14) வனம் - அழகு. வளவன் - சோழன். எவனம்-எவ்வனம், வாலிபம். இருவர் - சித்தி புத்தி யென்னும் பிரமாவின் புத்திரிகள்.

இறையளவு கண்டபொழு தேத்திலே ரம்பன்
கறையளவு கண்டனுயர் கற்கள்—உறையவங்கை
யாற்றாக்கி வைப்பனொற்றை யாவணத்தை யண்மிவருங்
கூற்றாக் கிடரிலையெற் கு. (15)

இடரா சனன முதலிது காறு மெனைவருத்தப்
படரா சனந்த மியற்றுவ னீயெப் படியருள்வாய்
நடராச னன்புறு மைந்தாவொற் றைக்கடை நாடுசெம்பொன்
அடரா சனமென வீற்றிருந் தாண்முக்க ணைங்கரனே. (16)

முக்கட்டு நால்வாய்த்து முன்றெழுவார் மும்மலத்தின்
இக்கட்டு நீக்கு மியற்றுசீர்—திக்கெட்டும்
ஓராவ ணங்குடிகொண் டுள்ளுறையு மும்பரெலா
மோரா வணங்கு மொளி. (17)

ஒளிக்கும் பரம வுலோபரைப் பாடி யுளமுலைந்தேன்
கிளிக்கும் பனோக மிசைபாடுஞ் சோலை கிளர்பொதியத்
தளிக்கும்ப மாமுனி சிந்திக்கும் பாதத்தண் ணுல்பழனத்
துளிக்கும்ப ரூர்புகு மோரா வணத்தி லுவாவரசே. (18)

அரசடியா ராம்பலொற்றை யாவணத்தி லன்பிற்
பரசடியார் ராம்பற் பலருள்—விரசுதலா
லாணவமாங் காரல் லகலுமலந் தன்றிப்
பூணவமாங் காரமொடு போம். (19)

போமாலை யங்கரும் பொத்தீரொற் றைக்கடைப் போதகத்துக்
காமாலை யங்கண்டு கைதொழுஞ் சூலைவெப் பாதிபித்தங்
காமாலை யங்கமு றுவாழ் வடுக்குங் கமழுமலர்ப்
பூமாலை யங்கன் பொடுபுனை வீரதன் பூங்கழற்கே. (20)

முற்றிற்று.

---

(15) கறை-விடம். அளவு-கலந்த. உயர்கல்-கயிலாசமலை. அண்மி - நெருங்கி. ஊக்கு - செலுத்துகின்ற. (16) இடரா-துன்பமோ. வருத்த-வருத்தஞ் செய்தால். படர்-விரிந்த. ஆசு-குற்றம். அடர்-நெருங்கிய. (17) இயற்று-இயலையுடையது. ஓராவணம்-ஒற்றைக்கடை. ஒளி-பிரகாசப்பொருள். (18) பொதியத்தளி-பொதிகைமலையாகிய கோயில். பழனத்துள்-வயலினுள். உவா-யானை. (19) காரல் - கரிய இருள். பூண்-பொருந்துகின்ற. அவம்-வீண் செயல். (ஆகுபெயர்) (20) போம்-செல்லுங்கள். தொழும்-வணங்குங்கள். அங்கம்-சரீரம்.

உ

சிவமயம்.

# ஒற்றைக்கடை விநாயகர்

# மும்மணிக்கோவை.

---

### காப்பு.

காப்பாசங் கையகலக் கற்றார்கள் கண்டுதொழு
மாப்பாசங் கையகங்கொள் வள்ளலுன்றாள்—பூப்பார்செய்
யண்மும் மணிக்கோவைப் பாமொர்கடை யார்நினக்குப்
பண்மும் மணிக்கோவைப் பா.

### நூல்.

### ஆசிரியப்பா.

பூவரு மயன்முத லேவருந் தொழுநீ
யென்று ளாயோ அன்றுளேன் யானும்
ஆயினு மனந்தந் தாயி னுதரம்
புக்குழன் றிருந்துபூ மிக்குள்வந் துதித்துப்
பொன்பெண் மண்ணி லன்பெண் ணிலவாய்
வைத்துனை மறந்து பித்துறு வேனையிவ்
வொன்றினுந் தோயா நன்றிய லுன்னை
நிகரு மென்று பகருவர் தாமே
மேருவு மணுவு நேரு மென்னச்
செப்புதற் கஞ்சாத் தப்புறு மறிவிலார்
அவர்தம் வார்த்தை யெவரே மதிப்பார்
அடிமை நானென் குடிமுழு தென்றும்
ஆண்டா னீயே வேண்டா வென்னத்

---

(காப்பு) காப்பு-காவலாம். மா-பெரிய. வள்ளல்-வள்ளலே. (அண்மை விளி) பூப்பு-(மலர்கள்) பூத்தல். செய்-வயலில். அண்மும்-நெருங்கும். அணி-அழகிய. கோ-நீருக்கு. வைப்பாம்-இருப்பிடமாம். ஆர்-பொருந்திய. கோவைப் பாக்காப்பு தானெனக் கூட்டுக.

தள்ளினும் போகே னுள்ளிய வுண்மையி
லிப்பிறப் பன்றி யெப்பிறப் புறினுநின்
றொண்டே செய்வது கொண்டது நடைபெறற்
கேற்ற தாகச் சாற்றரும் பொருள்கள்
இன்றியமை யாதன வன்றிமற் றொன்றை
வேட்கை மிகுதியிற் கேட்கை யுற்றே
னென்னினு மதனை நின்னியற் கேற்ப
வல்லையி னுதவுவா யில்லை யென்னாய்
ஆதலி னின்சீ ரோத லாவதோ
எண்ணிலா நகர்தன் னுண்ணிலா வண்ட
மோங்குநின் மேனியிற் றூங்குதல் போலு
முட்புறக் கனிகள் பெட்புற நாலு
பக்கமு நாலு மிக்க பலாவுந்
தொக்க மாவுந் தக்க கதலியும்
இலாங்கலி யும்விண் குலாந்தரு வீரைந்
தென்ன வானவர் முன்னர் வளரும்
பாண்டிநன் னாட்டிடை வேண்டிய தளிக்கும்
பிறையணி வேணி யிறையவ னரசு
புரியு மதுரா புரியதன் வடகீழ்
ஒற்றைக் கடையின் மற்றைக் கடையில்
காட்சியை நோக்கும் மாட்சிமை தேக்கும்
யோகிய ருளம்போ லாகிய வாசடி
நீழலி னுறையும் வேழ முகங்கொள்
தலைமை மேவிய நிலையுறு தேவே. (1)

வெண்பா.

தேவருந் தாவரநிற் சேவை செயாரேலிங்
கேவருந் தாவரமீ யேரம்பா—பூவருந்தே
னூறுபண்ணை யுட்பாயோ ராவணத்தி லன்புசிறி
தூறுபண்ணை யுங்கொள்ளு வோய். (2)

---

(1) நாலும்-தொங்கும். இலாங்கலி-தென்னை. கடையில் காட்சி-முடிவில்லாத் தோற்றப்பொருள், அஃதாவது பரம்பொருள். (2) தாவரம்-அசரம் (அசையமரம்)ஆம். பண்ணை-வயல். பண்-பாட்டு.

### கலித்துறை.

உவாமுகந் தோன்ற வுலாமொற்றை யாவணத் துன்னையெந்நெஞ்
சவாமுகந் தோறு மருச்சிப் பதற்கன்றி தன்றியொன்றுந்
துவாமுகந் தோர்ந்தனு வாயினு மீயரு மேத்தவர்மெய்த்
தவாமுகந் தோர்கல சங்கொளில் வாரிதி தாழ்வதின்றே. (3)

### ஆசிரியப்பா.

வாரி சூழுஞ் சீரி தாகிய
மண்ணி லுயர்ந்த விண்ணி லமர்ந்த
தேவர்முப் பத்து மூவ ருள்ளுஞ்
சீர்த்தி மிக்கமும் மூர்த்திக ளுள்ளும்
உயர்வோ னென்ப தயர்வில் விநாயகப்
பெயரே காட்டுங் கயமா வதனம்
உடையா யொற்றைக் கடையா கியநன்
நகரில் வாழு நிகரி லாதின்
னடிமலர் பரவும் படிவரு தொண்டர்
நின்னிற் பெரியரென் றென்னின் மதித்துப்
பூசனை புரிந்து பாசனை செய்வன்
இதனு லென்மேற் கதநீ கொள்ளல்
எந்தை யாகிய சுந்தர மூர்த்தி
நாயனு ரன்று தூய வாரூர்க்
கோயி லின்முதல் வாயி லுட்புகும்
போதவ னுற்ற தீதறு தேவா
சிரிய மண்டபத் துரிய ராகிக்
கருத்தொண் டெய்தாத் திருத்தொண் டெய்தும்
இணையி லன்பர் துணைமல ரடிதொழா
தகல்வது கண்டப் புகரி லன்பர்
இவனு மிவனையா ளவனு நமக்குப்
புறம்பெனு மடிமைத் திறந்தெரிந் தோங்கு
தேரூர் வீதி யாரூ ரருஞ்சம்

(3) உவா-யானை. அவாம்-விரும்பும். துவாம்-உண்ணமாட்டோம். மெய்த்தவா-மெய்க்கப்பட்டவனே. முகந்து-மொண்டு. (4) கதம்-கோபம். தொண்டு-வாயில்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

மதித்தவர் தம்மைத் துதித்தகல் வாயென்
றெம்பிரா னென்னுமத் தம்பிரான் றோழர்க்
கருளின ரன்றி மருளிலவ் வன்பரைச்
சிறிதுஞ் சினந்தில ரறிதி நீயவர்
மைந்த னாதலிற் றந்தை யறிவு
கொள்ளுதல் கடனும் விள்ளுங் காலே. (4)

வெண்பா.

காலங் கடக்கவன் கன்மங் கடவேனின்
காலங் கடக்கக் கலந்தக்காற்—சீலமார்
ஆங்கொற்றை யாவிரட்டை யாநாமோ ராவணத்தின்
பாங்கொற்றை யாவேரம் பா. (5)

கலித்துறை.

பாப்பாடு வார்பல நூலினுட் டேடும் பழம்பொருளொற்
காப்பா டுவாமுகம் பெற்றோனொற் றைக்கடைக் கண்ணுறைவோன்
சேப்பாடு வாகன மாகக்கொண் டோனெனுஞ் செந்திலுற்று
மாப்பாடு வார்கட லின்கட்செய் தோன்முனம் வந்தவனே. (6)

ஆசிரியப்பா.

வந்தனை செய்வார் சிந்தனை முடிதற்
கூறு தவிர்க்கு மாறு திருவுரு
வெடுத்த வள்ளா லடுத்த தன்குறை
யெள்ளத் தனையு முள்ளத் தெண்ணா
தண்டர் முனிவர் கொண்ட துயரங்
கண்டுள மிரங்கிப் பண்டுதன் மருப்பாஞ்
சாங்க மொன்றையு பாங்க மாக்கி
நின்முகங் கொண்ட வன்முனை யடங்க

---

(4) தம்பிரான்றோழர்-சுந்தரமூர்த்திநாயனார். அவ்வன்பர்-தேவாசிரியமண்டபத்திலிருக்கும் அந்தத் திருக்கூட்டத்தார். (5) கால்-திருவடி. நாம்-நாமிருவரும். ஒற்று-பொருந்தும். (6) காப்பாடு-காப்பாற்றுகின்ற. உவா - யானை. சேப்பு-சிவப்பு. செந்தில்-திருச்செந்தூர். மா-(சூரனாகிய) மாமரம். பாடு-அழிதல். (7) சாங்கம்-சரீரத்தோடு கூடிய அங்கம். உபாங்கம்-சரீரத்துக்கு வேறுயுள்ள அங்கம். நின்முகங்கொண்டவன்-கயமுகாசுரன்.

நெஞ்சினைக் கீண்ட வெஞ்சினத் தண்ணு
வீதலால் யாரு மோத லாம்படி
பூபா ரந்தீர் மாபா ரதமம்
மருப்பி னற்பொற் பொருப்பி லெழுதிய
அத்தமு மியானை மத்தக முங்கொள்
பிரணவப் பொருணின் சரணவற் புதமலர்
அரணெனப் பணியுமென் மரணதுக் கப்பெரும்
பகையா மிதையா குகையா நின்று
வீட்டிச் சனனக் கூட்டில் விடாம
லீட்டிய வினையெலா மோட்டி நின்னை
யேட்டி லொருபுறந் தீட்டி வைத்தல்
செய்தடி யேனை யுய்தர வருள்வாய்
இடைசிறு கியநற் கடைசியர் குழுமிக்
களையெனக் களைந்து விளைவயற் கரையிற்
சிந்தா நின்ற செந்தா மரையைக்
கனலெனக் கருதி யினமுறு மலவன்
வாடை பொருமற் பேடை யோடு
பற்பல சேர்ந்து பொற்புற வூர்ந்து
நெருங்கும் பழன மருங்கு சூழும்
பலவளஞ் சால நிலவிய வொற்றைக்
கடையில் வைகன் புடைய நீயே. (7)

வெண்பா.

நீயே கதந்தவிரா நெஞ்சினையே னீங்கரிய
வீயே கதந்த விநாயகனே—தாயேபோ
லாதரிப்பா ராரொற்றை யாவணத்தி லந்தோயான்
மாதரிப்பார் மேலென்செய் வன். (8)

---

(7) அத்தம் - கை. மத்தகம்-தலை. ஆகு-பெருச்சாளிவாகனம். உகையாநின்று-செலுத்தி. அலவன்-நண்டு. (8) கதம்-கோபம். நெஞ்சினை-மனமுடையாய். வீ-மேலான. மாதர்-அழகு. மேல்-இடத்தில்.

## கலித்துறை.

வன்றொண்டை வாய்ப்பநிற் காற்றேன் பலகை வலையுறலா [ன்னை
லொன்றொண்டை வாண்முகத் தோற்குமுன் னைப்பமள்ள ரூன்றுதெ
நின்றொண்டை வாழிடஞ் சென்றேங்கொற் றைக்கடை நின்மலனை
யென்றொண்டை வாய்விக்கல் மேலெழச் சாய்பொழு தென்னெய்துமே

## ஆசிரியப்பா.

எய்தவர் தம்மை வைதலின்றி
யம்பினை நோவார் தப்பிழை போலென்
வினையை நோவா தனையே யனைய
நினைநோ மென்பிழை யுனையே யன்றிப்
பொறுத்தெல் குறையை யறுத்திடு வார்யார்
குடும்ப மென்னப் படும்பெருங் கடலுள்
மக்க ளாகிய மிக்க திரைகள்
மோத மோத வேத மெய்தி
நிச்சலும் பிணியா மச்சங் கொடிய
காம மென்னு நாம வரவொடு
கடிக்க நெஞ்சந் துடிக்க வாடி
யச்ச மெய்துமந் தச்சம யத்தில்
வறுமை யென்னப் பெறுமொரு முதலை
விழுங்க வந்த தழுங்க நொந்தே
னைதச்சகித் தாலு மிதைச்சகித் திடுதற்
கொண்ணு மோவிஃ தெண்ணு வாயலை
யாவ தாகுக போவது போகுக
ஈவதே பெருமையென் றேவரு முணர்வரஃ
தறிந்த வள்ளால் முறிந்த கொம்பும்
ஐந்து கரமுஞ் சிந்து மதநீர்
தன்னமுங் குறையாக் கன்னமு முறியா
மருப்பமர் முகமும் விருப்புறு தமிழ்புகு

---

(9) ஒண்டு-சேர்ந்த. ஐ-ஐந்து. மள்ளர்-உழவர். ஒண்-ஒளிபொருந்திய
தை-பூசநக்ஷத்திரம். (10) நாமம்-அச்சம். தன்னமும்-சிறிதும்,

மிடறுஞ் செவியுங் குடநேர் வயிறும்
ஆற்றல் சாலு நாற்றடந் தோளு
மணநுகர் கையுமிக் கணமெதிர் தோன்றநின்
பரிசனஞ் சூழத் தரிசனந் தந்தருள்
நன்றே யாமிஃ தொன்றே போதும்
வேத முடியிலு நாத முடியிலுஞ்
சிறந்த தென்றே யறந்த வாத
வொற்றைக் கடையின் முற்றத் திருவுளம்
பற்ற வரசோ டுற்ற வரசே. (10)

வெண்பா.

அரசமரத் தோன்றன் னடியவரை யாள்வோன்
புரச மரத்தோன்றல் போல—விரசுமல
மானவரி லொன்றா தரித்தொற்றை யாவணத்தில்
வானவரி லொன்றுக்கு வான். (11)

கலித்துறை.

வானவ ரங்க ணிறவாம னஞ்சுண்ட வன்மகனு
ஞான வரங்கணி யாரொற்றை யாவண நாயகன்வேல்
மான வரங்க ணிகர்மட வார்க்குள மாழ்கிலருக்
கான வரங்க ணிமிடத்தி லேதந் தருளுவனே. (12)

ஆசிரியப்பா.

அருட்கட லென்னும் பொருட்கட வாரணம்
பேருத ரத்தொடு மேரு நிகர்ப்ப
இங்கெழுந் தருளித் தங்குத லாலஃ
தருந்து மாறு விருந்துசெய் தற்குத்
தக்க வுணவுகள் தொக்க பலபல
வுள்ள வாயினுந் தள்ளரி தாமுக்

(10) மணநுகர்கை-துதிக்கை. பரிசனம்-ஏவல் செய்பவர். நாதம்-சிவதத்துவம். தவாத-கெடாத. (11) புரசமரத்தோன்றல்-திரிபுரயுத்தஞ்செய்த சிவபிரான். அரில்-குற்றம். ஒன்றாது-பொருந்தாது. அரித்து-கெடுத்து. (12) அங்கண்-அந்த இடத்து. ஞானஅரங்கு-அறிவுடையார் சபை. அணி-அழகு. மானவரம்-வீரத்தையுடைய அரம். மாழ்கிலருக்கு-மயங்காதவருக்கு. (13) பொருள்-பொருளாகிய. கடம்-மதம்.

கனியினு மினிய நனிசுவை யுடையது
கரும்பே யென்று பெரும்பே ரன்பொடு
தாமே யறிந்தோ பூமேற் பன்னிரு
விரலுயர் மதுரைக் கரச னாகிய
வழிவழி யடிமைச் செழியன் காண
நல்லா ரென்னு மெல்லாம் வல்ல
சித்தரா மநாதி முத்தர்கல் லானைக்
கூட்டிய கரும்பிந் நாட்டி லுண்டேற்
றகவுறு மிதற்கென மிகவிளை வித்திடு
மிணைசிறி தும்மில் பணைக னான்கு
புடைசூ ழொற்றைக் கடைவா ழெந்தா
யைந்தவித் துயர்ந்த சிந்தையிற் றெளிந்த
வேதியர் வானவ ராதி யனைவரும்
வீடு வேண்டிக் கூடும் பிறவி
சிறிதும் வேண்டில ரறிவரி தாமது
பேரின் பென்றே நேர்நின் றேநீ
மருளற மொழியினும் பொருளல வெற்குக்
கோடி கோடி நீடிய பிறவி
யெய்தி னாலு மெய்திக ழிதுவே
யொப்பிலா னந்தந் திப்பிய மாநின்
றிருவடித் தாமரை மருவடித் தொண்டி
னன்புறு பூசனை யின்புற வியற்றுந்
தொண்டர்தந் தொண்டர் கண்டக மகிழ
அடிமை செய்யும் படிநினை வுறிலே. (13)

வெண்பா.

நின்னருமைத் தாயநன் னீர்மை நினையீன்ற
நன்னருமைத் தாயறிவ னானறியே—னன்ன
தொருகுறையென் னாதா ளொருகடையு ளார்தம்
மருகுறையென் னாதாவந் தாங்கு. (14)

(13) தகவு-தகுதி. திப்பியம்-நன்மை. அடித்தொண்டு-பழமைத்தொண்டு.
(14) நீர்மை-குணம். நன்னர்-அழகுடைய. என்னாது-என்று சொல்லாமல். ஒருகடை-ஒற்றைக்கடை யென்னுமூர். அருகு-பக்கத்தில். என்-என்னுடைய.

கலித்துறை.

வந்தி யரிவை தரும்பிட் டருந்தல்வன் மண்வெட்டல்செய்
புந்தி யரிவை யெதிர்காண் பவர்க்கருள் பூரணர்சேய்த்
தந்தி யரிவைகு லோகாதி வாழ்வு தருமதனை
யந்தி யரிவை யரந்தையெல் லாமொற்றை யாவணத்தே. (15)

ஆசிரியப்பா.

ஆக்க ளமுதமுங் காக்கள் மலரும்
மாக்க ளடிமையு நாக்கள் பாடலும்
நல்வர வாகிய செல்வ மிக்கார்
விருப்பணி யாகிய திருப்பணி பலவும்
பெரியரி லுயர்ந்த பெரிய நினக்கே
யாக்குபு மகிழுந் தேக்கு புகழ்நன்
கிடையறு வொற்றைக் கடைமறு கிற்றைக்
கென்னையு மாட்கொள் பொன்னைநேர் சடையாய்
திருக்கயி லாயந் துருக்களி லொன்று
வெழுதிய பிரணவ விழுமிய வடிவந்
தாங்கிய வத்தியின் பாங்கினை நின்று
காணுபு கசிந்துட் பூணு மன்பினவ்
வத்திக ளாகிச் சத்தியுஞ் சிவமு
மொன்று யின்ப நன்று நுகர்ந்து
பெற்றதற் கேற்ப வுற்ற யானைத்
திருமுக மும்பண் டுருவினுக் கேற்பத்
தெய்வ ஆகமுஞ் சைவ மகிமை
யறிந்தில ரெல்லாம் பிறிந்தில ராகிக்

(15) வந்தி அரிவை-வந்தியாகிய பெண். புந்தியர்-பேரறிவுடையவர். இவை யென்பது பிட்டருந்தல், மண்வெட்டுதலாகிய திருவிளையாடல்களை. சேய்த்தந்தி-பிள்ளையாகிய யானைமுக விநாயகர். அரி-விஷ்ணு. வைகு-தங்குகின்ற. அதனை-அந்த விநாயகரை. அந்தி-அடுப்பாய்.(மனமே) அரிவை-அரிந்து தள்ளுவாய். அரந்தை-துன்பம். (16) அமுதம்-பால். மாக்கள்-மனிதர்கள். அணி-ஆபரணம். கடை-கடையினிடத்து. தேக்கு-நிறைந்த. விழுமிய-சிறந்த. அத்தி-யானை. ஆகம்-திருமேனி.

கண்டக மகிழக் கொண்ட செம்மால்
ஆலயந் தொழுவது சாலவு நன்றென்
றொருத்தி சொன்ன தருத்தியி னுணர்ந்துநின்
கோயின் முன்னர் வாயிலின் வந்து
கூடு வார்சிலர் நாடு வார்சிலர்
ஆடு வார்சிலர் பாடு வார்சிலர்
பூசிப் பார்சிலர் நேசிப் பார்சிலர்
யாசிப் பார்சிலர் பேசிப் பார்வீழ்ந்
தெழுவார் சிலர்நேர் தொழுவார் சிலர்கை
கட்டுவார் சிலர்தலைக் குட்டு வார்சிலர்
துதிப்பார் சிலருள் மதிப்பார் சிலர்மல
ரெடுப்பார் சிலரது தொடுப்பார் சிலர்துயர்
விள்வார் சிலரருள் கொள்வார் சிலர்மறை
புகல்வார் சிலர்வினை யகல்வார் சிலரதான்
றின்னமெத் தனையோ பன்னருஞ் செயல்கள்
செயற்கரி யனவா வியற்றுவ ரவற்று
ளொன்று மில்லே னென்று நின்னருட்
குரிய னாகுவன் விரியுமிந் நிலத்தே. (16)

வெண்பா.

நிலமுந் தனமுமே நேடுவோர் நீடு
நலமுந் தனலங்க ணால்வாய்—தலமாம்பூங்
காவணங்க ணாற்றிசையுங் காப்போற் கமழொற்றை
யாவணங்க ணாற்றினங்கா ணார். (17)

---

(17) நேடுவார்-தேடுவார். உந்து-செலுத்துகின்ற. அனல்-அக்கினி யுடைய. அம்-அழகிய. கண்-நெற்றிக்கண்ணுடைய. நால்வாய் - யானை யாகிய விநாயகர்: விநாயகருக்கு நெற்றிக்கண்ணுண்டென்பது விநாயக புரா ணத்துட் காணலாம். காவணங்கள்-பந்தர்கள். கா-பூஞ்சோலை. கனல்-கண் ணால்.

### கலித்துறை.

ஆரியங் காணி யெனக்குடி கொள்ளொற்றை யாவணத்திற்
கூரியங் காணி நிறத்தடித் தாலுமொர் கொம்பன்றேண்டே
காரியங் காணினக் கென்னெஞ்ச மேயிக் கருத்துமுற்றத்
தேரியங் காணிற் சிறந்தானென் றெற்சொலச் செய்யினியே. (18)

### ஆசிரியப்பா.

செய்க்குழூஉ நடுவண் மொய்க்குமா நெடுவெண்
சங்குந் தாமரை யெங்கும் பெடையொடு
தங்கு மெகினமும் பொங்கு நிலவொளி
பரப்பி மேன்மேல் நிரப்பி யிரவிற்
கங்கு லகற்றி மங்குல் மிகுத்த
விசும்புற வளரும் பசும்பயிர் வெண்பயி
ராயுறச் செய்சீர் மீயுய ரொற்றைக்
கடையில் விரிபா சடைநிறை யரசின்
வீற்றிருந் தன்பர் பாற்றிருந் துங்கவி
கேட்டருள் செய்யு நாட்ட மெய்துந்
தும்பி மாமுகத் தெம்பி ரானே
பொருவி லாநின் றிருவு ளஞ்சிறி
திரங்கி யென்மனக் குரங்கி லமர்ந்தெனை
யாட்கொள வேண்டும் வேட்கை மிக்கேன்
ஆகு வினிலிஃ தேகும் விரைவினில்
ஐய மில்லைப் பைய வொருமுறை
யூர்ந்து மெய்ம்மை தேர்ந்து கொள்க
கண்டார் கவிமேற் கொண்டா ரிவரென
நகைப்ப ரென்று திகைப்புற லுந்தை

---

(18) ஆரி-அழகு. அம்-அழகிய. கூர்-கூர்மை. இயங்கு-சஞ்சரிக்கின்ற. நிறத்து-மார்பில். தேரி-தெளிந்து. ஆணில் - புருடர்களுக்குள். எற்சொல- என்னைச்சொல. முதலடி-ஆரியம், சம்ஸ்கிருத பாஷை யென்னலுமாம். (19) குழூஉ-கூட்டம். நடுவண்-நடு இடம். எகினம்-அன்னம். கங்குல்- இருள். மங்குல்-மேகம். மீ-மேல். அடை-இலை. ஆகுவினில்-பெருச்சாளிவாக னத்தைப் பார்க்கிலும். இஃது - இம் மனக்குரங்கு. கவி - குரங்கு. உறல்- உறுதே. உந்தை-உன்பிதா.

மாமன் மைத்துனன் காம ரிளையோன்
மாடும் பருந்துங் கூடி மன்னறும்
பயிலுந் தோகை மயிலு மாகிய
விலங்கும் பறவையு மிலங்க வேறுவ
ரிவரு மற்றே தவறி லிவர்குல
இயற்கை யாகிய செயற்க ருஞ்சீர்
நடக்கையென் றவர்வா யடக்கு வேனே. (19)

வெண்பா.

அடக்கரிய துன்பத் தழுந்தாதா றொக்குங்
கடக்கரிய தும்பிமுகக் கையாய்—திடக்கருணை
யன்பாலொற் றைக்கடையி லாற்றிலந்தத் தையுடனே
யென்பாலொற் றைக்கடையில் வில். (20)

கலித்துறை.

இற்கட னற்பற் றுக்கோடொன் றுமின் றியழுந்தமன
மற்கட னன்மதி மாழாந்த வென்றுயர் மாற்றுதற்கு
நிற்கட னன்கு விதத்துண்டொற் றைக்கடை நித்தமணிக்
கற்கட னுதன்பின் விற்றே னருளுமுக் கட்கடலே. (21)

ஆசிரியப்பா.

கடலே யனைய கலைகள் பலவும்
உடலேய் உயிருக் குறுதி பயக்கும்
நுண்ணிய மெய்ப்பொருள் நோக்கு வதற்குக்
கண்ணிவை யென்னக் கற்றோர் கருத்திற்
காணு நின்னையக் கற்றார் முன்னர்
நாணுறீஇ நிற்க நவையறு நூல்கள்

(19) அற்றே-அப்படியே. (20) அழுந்தாது-மூழ்காமல். கடம்-மதம். ஆற்றில்-செய்தால். அந்தத்து-முடிவுகாலத்தில். ஐ-இருமல். ஒற்று-பொருந்து கின்ற. ஐக்கு-கோழைக்கு. அடையில் - சேருமிடம். இல் - இல்லை. அழுந் தாமல் கருணையாற்றில் என முடிக்க. (21) பற்றுக்கோடு - ஆதாரம். மற் கடன் - குரங்கையுடையேன். மாழாந்த - மயங்கிய. அடல்-வலி. நான்கு விதத்து-பலவிதத்தும். நித்த-நித்தியப்பொருளாயுள்ளவனே. மணிக்கற்கள்- நவரத்நமாகிய கற்களை. தனது-தன்னுடைய. (22) உடலேய் - உடலிற் பொருந்திய. நாணுறீஇ-வெட்கமுற்று. நவை-குற்றம்.

காணி யளவுங் கல்லாக் கடையேன்
பேணிக் காணப் பெறுவ தெவ்வா
றுறவு கோல்நட் டுணர்வு கயிற்றின்
முறுக வாங்கி முற்றக் கடையின்
முன்னிற் பானென மொழியும் வேதந்
தன்னை நம்பியந் தப்படி செப்பச்
சத்தி யில்லேன் றனது நிற்க
பத்தி வலையிற் படுவோ னென்று
முத்தி யடைந்த முதல்வர் மொழிந்த
அத்திற முணர்ந்தனை தனுவு மாற்றேன்
மகப்பெ றுதிய வழங்கு நீயும்
அகப்படு வாயலை யையகோ வைய
கோநினைப் பாருளங் கோயிலாக் கொள்வனென்
றேநினை தனைப்பா டிறைவர்சொல் வழிநின்
றுயினு நினையே னுதலி னென்மனங்
கோயி லாகக் கொண்டரு ளாயினிச்
செய்வ தென்னெனத் திகைக்குஞ் சமயத்
துய்வழி யாக வொன்று தோன்றிற்
றனைநீ முடிபென வடங்கி னேனனை
தெனைநீ யென்னி லிசைப்பன் கேண்மதி
யவனரு ளாலே யவன்றாள் வணங்கியென்
றுவமை யிலாம லுரைதிரு வாசகம்
ஆத லாலே யதுதிறம் பாம
லேதமி யேனை யிணக்கி வணங்கச்
செய்த னின்கடன் செய்யா யென்னில்
மைதவி ருன்னை வணங்காக் குற்றம்
என்பா லில்லை யில்லை யில்லை
யன்பா லரசடி யமர்நதோ ராவணத்
தருண்மழை பொழியு மைங்கர நால்வாய்

---

(22) உறவு-பத்தி. உணர்வு-ஞானம். முறுக-பலமாக. வாங்கி-இழுத்து. நின்ஐ-உன்னுடைய பிதாவாகிய சிவபெருமான்.

பொருவின் முக்கண் புகரி லிருதா
ளொருகொம் பெய்து முயரிய தெய்வப்
பெருமனின் றிருவுளப் பெற்றி யாதே. (22)

வெண்பா.

பெற்ற தமையப் பெறுதெம் பிரானருள்சே
யுற்ற தமையனெனு மோர்கடையீர்—மற்றனைத்தும்
வாஞ்சித் தமிழ்க்குமருள் வாரி வறப்பநுந்தா
ளீஞ்சித் தமிழ்க்குமரு ளீர். (23)

கலித்துறை.

ஈரப் பணையச் சுரிமுக வெண்சங்க மேந்தியுவ
ரூரப் பணையச் சுதன்போலொற் றைக்கடை யுண்மெயன்பு
சாரப்ப ணையச் சுழற்சியில் லாநிலை தங்கவைபங்
கூரப் பணையச் சுவத்தோ டுறுமொரு கொம்பிறையே. (24)

ஆசிரியப்பா.

இறைக்குநீ ரூறு மென்ப திந்தத்
தறைக்கு ளுண்மைத் தன்மை யாதலி
னடிமைசெய் யடியே னடுத்தடுத் துறினு
முடிவிலா நின்னருள் முழுதுந் தாரேயல்
அணுவணு வாக வாயினு மருள்வாய்
கனுவெலாந் தாளங் கால்செங் கரும்பி
னுனியி லிருந்து நுங்கிச் சென்றடி
யினிதுய ரின்சுவை யெய்தல் போலக்
கொண்டு கொண்டுட் குழைந்துபே ரின்பம்
அண்டு வேனதற் காக விங்கே
பொன்குலா நின்னடி புக்க சீரே

---

(22) பெற்றி-தன்மை. (23) அமையப்பெறுது-காணமாட்டாமல். சேய்-முருகக்கடவுள். வாஞ்சித்து-இச்சித்து. தமிழ்க்கும்-தாழ்த்தும். மருள் வாரி-மயக்கமாகிய கடல். ஈஞ்சு-ஈந்து. (24) பணை - வயல். அப்பு - சமுத்திரம். (ஆகுபெயர்) அணை - சேர்ந்த. போல்-ஒத்த. பண்-செய். ஐயச்சுழற்சி-சந்தேகச்சுற்று. வை-வைப்பாய். அம்-அழகு. கூர-மிக. பணை-பருத்த. அச்சுவம்-அரசமரம். (25) தாளம்-முத்து. கால்-சொரிகின்ற. நுங்கி-உண்டு.

நன்கு பாடி நாட்கழிக் கின்றேன்
வேட்டவர்க் கெல்லா மேலு மேலுங்
கேட்ட வரங்களுட் கிளர்ச்சியிற் றருவா
யென்பதும் பிறர்வா யிசைப்பக் கேட்டேன்
அன்ப திருந்தா லவையெலா மெற்றுக்
குரைக்க வேண்டுமஃ தொன்றே சாலும்
நிரைக்கு மாமணி நீணெடு மாட
மொருங்குசூழ் மதுரையி லொண்மலர் நிறையத்
தரும்பெரு மகத்துவந் தங்கு கடம்பி
னிருந்தா செய்தின னெந்தை யிஃது
திருந்த நமக்குச் சேரு மென்பதற்
கிம்மியு மைய மில்லை யென்றால்
நம்மி னெண்ணிலா நாட்சென் றாலும்
ஈறிலா னவனும் எய்தலெவ் வாறெனத்
தேறியோ வேறு தேடுவ தேநல்
லறமெனக் கிட்டா தாயின் வெட்டென
மறவெனும் பழமொழி வாய்மைக் கொப்ப
அயர்த்ததை விட்டதற் கடுத்த பக்கந்
துயர்த்து புகழ்சா லொற்றைக் கடையி
னரச மரத்தினை யண்மிநீ வந்துபே
ரர்சா யிருந்த தாருந் துதிக்கைத்
துதிக்கை தாங்கிய தோன்றா லென்மனி
மதிக்கை யெல்லாம் வழங்கு வாயே. (25)

வெண்பா.

வாயார் வாழ்த்தியுள்கி வந்திக்க மாட்டாரை
நோயார வாழ்த்தியுள நோவிக்கு—மீயாரை
யண்டவிட மாட்டாவோ ர்ாவணத்தி லன்பருளங்
கொண்டவிடர் நீக்குமைங்கைக் கோ. (26)

---

(25) வேட்டவர்க்கு-விரும்பியவர்கட்கு. எற்றுக்கு-எதற்கு. சாலும்-போதும். நம்மின்-நம்மைப்போல. ஈறிலான்-நாசமில்லாதவன். அயர்த்து-மறந்து. அண்மி-நெருங்கி. துதிக்கை-துதித்தலையுடைய. (26) உள்கி-நினைத்து. ஆர-உண்ண. ஆழ்த்தி-தாழ்த்தி. நோவிக்கும்-நோவைச்செய்யும்.

## கலித்துறை.

கோவை யெழுதித் தருநுந்தை பாரதங் கொண்டகதைப்
பாவை யெழுநிகர் கொம்பா லெழுதியும் பன்முகபூங்
ணவை யெழுவளஞ் சூழுமொற் றைக்கடைக் கண்ணுறைநீ
ஈவை யெழுதாரங் கேட்டாய்ந் துரைப்பார்க் கெதுபெரிதே. (27)

## ஆசிரியப்பா.

பெரியதிற் பெரிதெனப் பேசு தற்குஞ்
சிறியதிற் சிறிதெனச் செப்பு தற்கு
மொருசான் றென்ன வும்ப லுருவு
மருவு நெல்லின் வால்நுனி போலுங்
கருவுறு மணுக்களுட் கருதுநுண் ணியவணு
வுருவுங் கொண்ட வொருபெருந் தகையே
இடம்பொரு ளேவ லில்லார் நெஞ்சந்
திடப்பட நின்னெதிர் சேவை செய்தா
லுடன்பட லுற்றுத வொருபெருங் கருணைத்
தடங்கட லேயென் றமிழ்முன் கேட்க
விரும்பியொற் றைக்கடை மேய விநாயக
அரும்பு முதனான் காம்பொருள் போலு
நாற்பொரு ளறியே னல்ல நல்ல
நூற்பொருள் சிறிதும் நுணுகி யாயேன்
வயது சென்றது வாய்ப்பல் வீழ்ந்த
தயர்வு பெரிய தாய துடலெலாம்
நரைவந் திட்டது நாணங் கொள்ளத்
திரையு மினிமேற் சிறிது சிறிதா
வருநோய் பலவும் வந்து வந்து

---

(27) கோவை-திருச்சிற்றம்பலக் கோவையார். தரும்-கொடுப்பன். பாவை-பாட்டை. (சுலோகத்தை) எழு-தூண். உம்பன்முக-யானைமுகவிநாயகனே. ஐ-அழகு. எழு-ஓங்குகின்ற. ஈவை-கொடுப்பாய். எழுதாரம்-எழுமுறை. (28) சான்று-சாட்சி. உம்பல்-யானை. கரு-கருப்பம். அணுக்கள்-அணுக்கள். நான்கு-அரும்பு, மலர், காய், கனி. நாற்பொருள்-சரியை, கிரியை, யோகம், ஞானம். அயர்வு-சோர்வு.

பொருமவை தீரவுட் புகுத்து மருந்தா
விருமலுங் கோழையு மெழுமிம் மட்டோ
கருவிக ளோயுங் கரணமுந் தேயுங்
காடு வாவெனுங் கண்டார் நகைக்க
வீடு போவெனு மெள்ள மெள்ள
அறிவு மயங்கும் அருகிருப் பார்கள்
மறிவிலாத் துன்ப வாட்டங் கண்டுள்
ளலுத்துப் பேசி யதிரக சியமா
வலுத்தவா ஞளிது மாயா விரைவில்
மண்ணிலோ பொன்னிலோ வாஞ்சை யிவருக்
குண்ணினை வறுதற் குரைத்தவ் விரண்டும்
வாயி லூற்று மாயு முயிரெனப்
பாயும் நானும் பற்றிக் கிடக்கும்
அந்த வேளையுன் னடிமற வாமற்
சிந்தனை செய்யுந் திறனுரு தாதலி
னிந்த வேளையே யிவையெலா மெய்துமுன்
னெந்தையே திருவுள மிரங்கிநின் றந்தை
தாயொடு தம்பி தன்னை நின்னைப்
பூவொடு நீர்கொடு பூசை யாசை
மிகுத்துச் செயச்செய் வித்துப் பின்னெனைப்
புகுத்துக நின்றாட் பூந்தா மரைக்கே. (28)

வெண்பா.

பூந்தா மரைத்தாதார் பொன்மலரே போலுமிகச்
சேந்தா மரைத்தாளெஞ் சென்னிமிசை — மாந்தா
ஒருகடைய வாங்களிறே யூன்றினும்போ தும்மென்
னருகடைய வாராயன் பால். (29)

கலித்துறை.

அனபா லடிமை திறம்பா வொருவ னளித்ததசை
யின்பா லடிசி லினுநனி யுண்டவ ரீரிருவர்
முன்பா லடியி லமர்ந்தார் மகவென முன்னுதித்தீர்
என்பா லடிகளின் பூந்தா ளொரராவணத் தென்றெய்துமே. (30)

முற்றிற்று.

---

(28) மாயா-இறவாது;முற்றிறுதிதொக்கது. (29) சேர்து-சிவர்து. அரைத்தான்-பாதித்திருவடி. மார்தா-கெடாத. அவாம்-விரும்பும். வாராய்-வந்தருள்வாய். (30) நனி-மிக. ஈரிருவர்-சனகாதி முனிவர் நால்வர். முன்னுதித்தீர்-முதற்றோன்றிய விநாயகரே. அடிகளின்-சுவாமிகளது.

# பிழையுந் திருத்தமும்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்த |
|---|---|---|---|
| 7 | 24 | உடைப்பாய | உடைப்ப |
| 15 | 21 | ரோ | ே[redacted] |
| 18 | 5 | கலங்கிலே | கலங[redacted] |

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

சிவமயம்.

# கச்சி இதழகல் அந்தாதி

இது
சைதாப்பேட்டை, 'தியலாஜிகல் காலேஜ்'
தமிழ்ப் பண்டிதர்
திருமாகறல்-ப-தி. கார்த்திகேய முதலியாரால்
இயற்றப்பட்டு

"இராமாயணஸாரம்", "இராஜராஜேஸ்வரி"
முதலியவற்றின் நூலாசிரியர்
செய்யூர் - முத்தைய முதலியார், பீ. ஏ.
இயற்றிய உரையுடன்

சென்னை:
'டிவைன்' அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1907.

# முகவுரை.

நீராழியுற்ற இந்நிலவுலகில் செல்வங்கள் பலவும் சிறந்து விளங்குவது தொண்டைமா நாடு. அந்நாட்டுக்குத் திலகமென ஒளிர்வது எம்மிறைவன் ஒருமாவிற்பெருமான் உறையும் கச்சியம்பதி. இப்பதியே புண்ணிய தலங்கள் பலவற்றுள்ளும் சிறந்ததென இறைவனாலேயே இயம்பப் பெற்றது.

“புண்ணியமெய்த் திருக்காஞ்சி யெவற்றினுமேம் படுபுரியா மவ்வூர் தன்னை
யெண்ணினுங்கேட் பினுமசொலினும் வணங்கினும்பே ரின்பவீ டெவர்க்கு நல்கும்”

என்றபடி இந்தத் தலத்தை மனத்தால் நினைக்கினும் நம்முடைய பாபம் நசிக்கும் எனில் இதன் சிறப்பை வேறு என்னென்று சொல்லுதல் கூடும்?

இத்துணைச் சிறப்புவாய்ந்த இப்பதியில் பத்தர்க்கெளியராய் விளங்கும் பரமசிவத்தின்மீது அளவில்லாத பத்தி யுடையராவர் இந்நூலின் ஆசிரியர்; இவர் நற்குணத்திலும் நற்செய்கையிலும் மிகச் சிறந்தவர்; தமிழ்மீதும், தமிழபிமானிகள் மீதும் ஆர்வம் மிகுந்தவர்; எனக்குத் தமிழின் அருமை பெருமைகளை விளங்கக் கூறி, அதிலுள்ள வற்றாத சுவையை நான் என்றென்றும் சுவைத்து ஆநந்திக்குமாறு முதன்முதலில் சுவை காட்டியவரும் இவரே.

இவர் சிவபெருமானிடத்துத் தமக்குள்ள அன்பின் மிகுதியால், இக் “கச்சி இதழகல் அந்தாதி”யை இயற்றுவாராயினர். அந்தாதி யாவது ஒரு செய்யு ளிறுதியிலுள்ள எழுத்து, அசை, சீர் அல்லது அடி அடுத்த செய்யுளின் ஆதியாக வரத்தொடுப்பது. “இதழ் அகல்” என்றால் மேலிதழும் கீழிதழும் ஒன்றோடொன்று சேராமல் அகன்றே நிற்பது. அதாவது, இச்செய்யுள்களை உச்சரிக்கும்போது உதடுகள் ஒன்றுபடாமல் அகன்றே நிற்கும். இதனை வடநூலார் “நிரோட்டகம்” என்பர்.

இந் நூலாசிரியர் காஞ்சீபுரத்தில் தம்முடைய ஆசிரியர் வ. கணபதிப்பிள்ளையவர்களிடம் தொல்காப்பிய முதலியன பாடங் கேட்டகாலத்தில் இயற்றிய இதனை இப்போது ஆங்குள்ள அன்பர் பலர்வேண்டிக்கொண்டபடி அச்சிட்டு வெளியிடுவாராயினர்; ஆனால், செய்யுள்களை மட்டில் வெளியிடுவது பண்டிதர்க்கேயன்றி ஏனையோர்க்கும் பயன் படாதாகலின், உரையுடன் வெளியிடல் நலமென்று என்னிடம் குறிப்பித்தமையால், யான் இப்போது இதற்கு உரை யெழுத லானேன். போதிய அவகாசமின்மையால் உரை விரிவில எழுதப்படவில்லை யாயினும், இப்போது எழுதப்பட்டிருக்கும் பதவுரை, குறிப்புரை, கருத்துரைகளினின்றுமே எவரும் பொருளை எளிதில் அறிந்துகொள்ளக் கூடுமென்று நம்புகின்றேன்.

யான் மேற்கொண்ட தொழிலுக்கிடைக்கிடையே கிடைத்த அவகாசத்திலும் அவசரத்திலும் இது எழுதப்பட்டதாதலின், இதிற் பிறழ்வுகள் உளவேல், அவற்றைத் திருத்தியமைத்துக் கொள்ளுமாறு செந்தமிழ்ச் செல்வர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சென்னை,
21 - 3 - 1907 } செய்யூர் - முத்தைய முதலியார்.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41.

உ

சிவமயம்.

# கச்சி இதழகல் அந்தாதி.

## காப்பு.

### வெண்பா.

கங்கைக்கணிந் தீன்றதனிக் காதலனை யைங்கரனை
நங்கை சிரநிறீஇ நன்றேத்திச்—சங்கையறக்
கச்சியந் தாதி கழறிநலங் கண்டக்கா
லிச்சை யிடர்க ளில்லை. (க)

திங்க ளணிசடையான் சேயடிகட் கந்தாதி
நங்களங் கேக நயந்தியற்றச்—சிங்கநிகர்
கந்தனை யிற்றைக் கணிந்திறைஞ்சி நன்னெஞ்சே
சிந்தனை செய்தே தெளி. (உ)

உ

சிவமயம்.

# கச்சி இதழகல் அந்தாதி.

## நூல்.

### கட்டளைக்கலித்துறை

கங்கா தரனந்த காரி சடையன் கயிலையன
கங்கா தரனந்த நந்தன நாதன் கழனியின் றண்
கங்கா தரனந்தற் கீர்ங்கதி தந்தனன் காசினிய
கங்கா தரனந்த ரங்கெடக் கச்சியிற் கண்டனனே. (க)

| பதம். | பொருள். |
|---|---|
| கங்காதரன் | கங்கையைத் தரித்தவனும் |
| அந்தகாரி | அந்தகா சூரனை வென்றவனும் |
| சடையன் | சடையுடையோனும் |
| கயிலையன் | வெள்ளிமலை யுடையோனும் |
| அகம் | பாவங்களை |
| காது | போக்குகின்ற |
| அரன் | அரனென்னும் பெயரோனும் |
| நந்தநந்தனன் | திருமாலுக்கு |
| நாதன் | இறையோனும் |
| கழனியின் | கழனிகளின் |
| தண்கங்கு | தண்ணிய வரம்பிடத்து |
| ஆதரன் | விருப்பமுள்ளோனாகிய |
| நந்தற்கு | திருநாளைப் போவாருக்கு |
| ஈர்ங்கதி | குளிர்ந்த வீட்டுலகத்தை |
| தந்தனன் | கொடுத்தோனுமாகிய சிவபெருமான் |
| காசினியகம் | இப்பூமியிடத்து |
| காதரல் | நம்மைக் காத்தலைச் செய்க. |
| நம் தரங் கெட | நமது அச்சம் நீங்க |
| கச்சியிற் கண்டனன் | அன்னவனைக் கச்சியிற் கண்டேன். |

கருத்து:—கங்கையைத் தரித்தவனும, அந்தகாசூரனை வென்றவனும், ஜடாதாரியும், வெள்ளிமலை யுடையவனும், அரனென்னும் பெயரோனும், திருமாலுக்கு இறையோனும், திருநாளைப் போவாருக்கு வீட்டுலகத்தைத் தந்தவனுமாகிய சிவபெருமானை நான் கச்சிப்பதியிற் கண்டேன். அன்னவன் நம்மைக் காத்தருள்க.

கண்ணலங் காரி யழைக்க நடந்தே கனிசெய்கரை
கண்ணலங் காரி யெனச்சாற்றி நெஞ்சங் கரைந்தனநிற்
கண்ணலங் காரி யயற்கரி தாங்கதி காணலெற்றங்
கண்ணலங் காரியர் சங்கஞ்சேர் கச்சிக் கனநிதியே. (உ)

| பதம். | பொருள். |
|---|---|
| கண்ணலங்காரி | கண்ணலங்காரமுள்ள ஒரு மாது |
| அழைக்க | கூப்பிட |
| நடந்து | போய் |
| கனிசெய் | கனிதலைச் செய்கின்ற |
| கரை | (உனது) மொழி |
| கன்நலம் | தேனலம்பயப்பதாகும் |
| காரி நலம் | கிளிநலம் பயப்பதாகும் |
| எனச்சாற்றி | என்று சொல்லி |
| நெஞ்சம் கரைந்தனம் | மனமுருகினோம்; |
| நிற்கண்ணலம் | நின்னையெண்ணிலோம். |
| காரி | இந்திரனுக்கும் |
| அயற்கு | பிரமனுக்கும் |
| அரிதாம் | கிடைத்தற்கரிதாகிய |
| கதி | மோட்சம் |
| காணல் எற்று | காணுதலெப்படி? |
| அங்கண் | அவ்விடத்து |
| அலங்கு | விளங்குகின்ற |
| ஆரியர் | பெரியாரது |
| சங்கம் சேர் | கூட்டம் சேர்கின்ற |
| கச்சிக் கனநிதியே | கச்சியின்கட்பெருநிதியே |

குறிப்பு:—ஒரு தொடருள் இறுதி நின்ற பெயர்க்கு மாத்திரம் உருபு விரிந்து நின்று மற்றைப் பெயர்களில் உருபு தொக்கு வருதலுமுண்டு.

கருத்து:—இந்திராதி தேவர்விளங்கும் கச்சிப்பதியில் வீற்றிருக்கும் எம்மிறையே! அலங்கார முள்ள ஒரு பெண்ணைப் பின் சென்று "ஆ! உன் மொழி தேன்மொழியோ? கிளிமொழியோ" என்று மனமுருகினேனேயொழிய, உன்னை ஒரு கணமேனும் நினைத்திலேன். என்செய்கேன்? இப்படிப்பட்ட எனக்கு இந்திரன் பிரமன் முதலியவர்க்கும் கிடைத்தற்கரிய மோட்சம் எங்ஙனம்கிடைக்கும்?

கனகங்கை யாரலங் கச்சியி னேசர் கனியிரதக்
கனகங்கை யாரலங் கார நகிலக் கதிர்திகழ்தண்
கனகங்கை யாரலங் காணு திறைஞ்சியக் காதலர்சீர்
கனகங்கை யாரலங் காணரி தேர்கிளர் காதலியே. (ரு)

| பதம். | பொருள். |
|---|---|
| கனகம் | பொன்னால் |
| கை | அலங்கரிக்கும் |
| ஆரல் | மதில் சூழ்ந்த |
| அம் கச்சியில் | அழகிய காஞ்சியில் |
| நேசர் | அன்புடையாரும், |
| கனியிரதம் | கனிகளைப்பெய்யு மாவடியில் வாழும் |
| கன கங்கையார் | மேன்மைபொருந்திய கஙகாதராருமாகிய சிவ பெருமான் |
| அலங்கார நகிலம் | அலங்காரமுள்ள கொங்கையாகிய |
| கதிர் திகழ் தண் கல் நகம் | ஒளிவிளங்குந் தண்ணியமலையின்கண் |
| கையார் | வெறுப்படையார். (ஆகலின்) |
| அலம் காணுது | துன்பததை நோக்காமல் |
| இறைஞ்சி | வணங்கி |
| அக்காதலர் சீர் கல் | அந்நாயகரது சீர்மையைக்கற்க ; |
| நகம் | நகுதல் செய்யாம் ; |
| கை | சிறுமைதரும் |
| ஆரலம் | பகை |
| காணரிது | காணுதல் கூடாது ; |
| ஏர் கிளர் காதலியே | அழகால் விளங்குகின்ற காதலியே. |

கருத்து:—பேரழகுவாய்ந்த பெண்ணே! அழகிய காஞ்சியில் அன்புடையவராய் மாமரத்தடியில் விளங்குஞ் சிவபெருமான் உன் மீது வெறுப்படையார். ஆகையால் அந்நாயகரை வணங்கி அவருடைய சீர்மையைக் கற்க.

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY, TIRUVANMIYUR, MADRAS-41.



காதல னந்தரஞ் சேரிண்டைக் கைதையங் கச்சியிகல்
காதல னந்தர னேத்தநல் லந்தணன் கண்டிறைஞ்சக்
காதல னந்தர னின்றாசி சாற்றக் கழிநலனு
காதல னந்தர னாகநன் னெஞ்சங் கலந்தினிதே. (௪)

| பதம். | பொருள். |
|---|---|
| காதல் | அன்புடனே |
| அனம் | அன்னப்பறவைகள் |
| தாம் | கூட்டமாக |
| சேர் | சேர்கின்ற |
| இண்டை | தாமரைமலர்களையுடைய |
| கைதை | வயல்சூழ்ந்த |
| | அழகிய கச்சியானது |
| இகல்காது | பகைவரைக் கொல்லும் |
| அலன் | கலப்பை யுடையோனும் |
| நந்து | சங்கிற்கு |
| அரன் | இறையோனுமாகிய திருமால் |
| ஏத்த | துதிக்கவும், |
| நல் அந்தணன் | நல்லபிரமன் |
| கண்டு இறைஞ்ச | |
| காதலன் | கற்பகச சோலையும்நல்லிடமுமுள்ள |
| அந்தரன் | சுவர்க்கேந்திரன் |
| நின்று ஆசிசாற்ற | நின்று வாழ்த்தெடுப்பவும, |
| கழிநலன் | மிக இன்பந்தருவதாகும்; |
| ஆகாது அலல் | துன்பமுண்டாகாது; |
| நல் நெஞ்சம் | நல்நெஞ்சத்தில் |
| இனிது கலந்து | இனிதேகலந்து |
| நம் தரன் ஆக | அது நமக்கு வசப்பட்டதாக. |

**கருத்து:**—வளமைமிக்க கச்சிப்பதியானது, திருமால் துதிக்கவும், பிரமன்கண்டு வணங்கவும, சுவர்க்கேந்திரன் நின்று வாழ்த்தெடுப்பவும், மேலான இன்பந்தருவதாகும். நாமும் அப்பதியை நினைந்து நற்கதியடைவோமாக.

கலகங்க ணந்தத் திகழ்கச்சிச் சங்கரன் கன்
கலகங்க ணந்தச் சிறகலர் கேகயங் கண்டெனினி
கலகங்க ணந்த கராதில நெஞ்சே கனிந்திங்ஙனே
கலகங்க ணந்தரித் தந்தணர் சேர்ந்ததைக் கண்ணிநன்றே. (ரு)

| பதம். | பொருள். |
|---|---|
| கலகங்கள் | தீமைகள் |
| நந்த | கெட |
| திகழ்கச்சி | விளங்குகின்ற கச்சியின்கண் |
| சங்கரன் | சிவபெருமானது |
| கன்னி | அழிவின்மையாகிய |
| நந்திக்கல்லகம் | நந்திமலையினிடத்து |
| கண்நந்த | கண்கள்வளர |
| சிறகு | தோகைகளை |
| அலர் | விரிக்கின்ற |
| கேகயம் | மயில்களை |
| | கண்டேன் எனில் |
| இகல் அகம் | பகைக்கின்ற பாவங்கள் |
| கணம் | கணப்போதில் |
| தகராதில | கெடுவனவாம். (ஆகலின்) |
| நெஞ்சே | மனமே |
| கனிந்து | மகிழ்ந்து |
| இங்ஙனே கல | இவ்விடத்திற் கலக்க. |
| அந்தணர் | முனிவர்கள் |
| கங்கணம்தரித்து | விரதஞ்செய்துகொண்டு |
| சேர்ந்ததை | சேர்ந்திருந்ததை |
| | பெரிதெண்ணி |

கருத்து:—கச்சிப்பதியில் சிவபெருமானது நந்திமலையில் உள்ள மயிற் கூட்டங்களைக் கண்டமாத்திரத்திலேயே நாம்செய்த பாவங்களெல்லாம் அறவே ஒழிந்துவிடும். ஆகையால், மனமே! முனிவர்கள் விரதஞ் செய்துகொண் டிருக்கும்படியான அப்பதியில் நீ எப்போதும் கலந்திருப்பாயாக.

கண்டிகை யானலஞ் செய்கின்ற செங்கைக் கனதனத்தார்
கண்டிகை யான கரத்திற் சிறந்தநங் கச்சியையே
கண்டிகை யானஞ் செறிநந் தனங்காண் கரிலிங்ஙனங்
கண்டிகை யான கலைநிதங் கற்க கரியநெஞ்சே. (ரு)

| பதம். | பொருள். |
|---|---|
| கண்டிகையான் | கடகத்தினல் |
| நலம்செய்கின்ற | அழகுசெய்கின்ற |
| செம் கை | சிவந்தகையும் |
| கனதனத்தார் | கனமாகிய கொங்கையு முடைய மாதரது |
| கண் திகையான் | கண்ணிற்கு மயஙகாதவனுகிய சிவபெருமானது |
| நகரத்திற்சிறந்த | எல்லாநகரங்களினுமேம்பட்ட |
| நம் கச்சியையே | நமது காஞ்சியையே |
| கண்டு இகை | கண்டு கொடுப்பாயாக. |
| யானம்செறி | தேன் செறியும் |
| நந்தனம் | பூங்காவனம் |
| காண் | காண்பாயாக. |
| கரில் | குற்றங்களை |
| இங்ஙனம் கண்டி | இங்கே நீக்குவாயாக. |
| கையான | ஒழுக்கமாகிய |
| கலை | நூல்களை |
| நிதம் கற்க | தினமுங்கற்பாயாக. |
| கரிய நெஞ்சே | கரிய மனமே |

கருத்து:—குற்றங்கள் நிறைந்த மனமே! சிவந்த கையும், சிறந்த கொங்கையுமுடைய மாதரது கண்வலைக்கு மயங்காதவனுகிய சிவபெருமானை, புண்ணிய தலங்கள் பலவற்றுள்ளும் சிறந்த கச்சிப் பதியில் நீகண்டு, ஒழுக்கநூலை ஓதி, உன்னிடத்திலுள்ள குற்றங்களை ஒழிப்பாயாக.

கரியா னனந்தழை யாநின்ற நாயகன் கந்தனயன்
கரியா னனந்த சயன னிறைஞ்செழிற் கச்சியிற்சங்
கரியா னனந்த நிதிதந் தணங்கின் கனதனச்சி
கரியா னனந்த ரடைந்தேற் கினிய கதிதரலே. (எ)

| பதம். | பொருள். |
|---|---|
| கரி ஆனனம் | யானை முகத்தினால் |
| தழையாநின்ற | தழைந்துகொண்டிருக்கின்ற |
| நாயகன் | விநாயகனும் |
| கந்தன் | முருகனும் |
| அயன் | பிரமனும் |
| கரியான் | இந்திரனும் |
| அனந்தசயனன் | திருமாலும் |
| இறைஞ்சு | வணங்குகின்ற |
| எழில் கச்சியில் | அழகிய காஞ்சியின்கண் |
| சங்கரியான் | மங்கைபாகனான சிவபெருமானே! |
| அனந்தம் | அளவின்மையாகிய |
| நிதிதந்து | பொருள் கொடுத்து |
| அணங்கின் | பெண்ணினது |
| கனதனம் | கனத்த கொங்கையாகிய |
| சிகரியான் | மலையினால் |
| அனந்தரடைந்தேற்கு | மயக்கமடைந்தேனுக்கு |
| இனியகதி | இனியவீட்டுலகத்தை |
| தரல் | தருக. |

குறிப்பு:—சங்கரியான் அண்மைசுட்டிய விளிநிலைக்கிளவி. இனி, அகதி=நரகம், தரல்=தரற்க எனலுமாம்.

கருத்து:—விநாயகன், முருகன், பிரமன், இந்திரன், திருமால் முதலியோர் வணங்கும் கச்சிப்பதியிலுள்ள மங்கைபாகனான சிவபெருமானே! நான் ஒரு பெண்ணுக்குப் பெரும பொருள் கொடுத்து, அவளுடைய கொங்கையாகிய மலையால் மோகமுண்டு மயக்கமடைந்தேன். எனக்கு நரகத்தைத் தராமல் பேரின்பந் தந்தருளல் வேண்டும்.

தரனந் தியாகத் தழகின னாரணத் தந்தைசசி
தரனந் தியாகத் திகழர னெங்கள் சரசனற்சீ
தரனந் தியாக நிதஞ்செயங் கச்சியிற் சார்ந்தநிரந்
தரனந் தியாக நசையனஞ் சிந்தையிற் றங்கினனே. (அ)

| பதம். | பொருள். |
|---|---|
| தரன் | சிவந்த |
| அந்தி | அந்திக்காலம்போல |
| ஆகத்தழகினன் | உடம்பிலழகுடையானும், |
| ஆரணம் | வேதங்களுக்கு |
| தந்தை | தந்தையும், |
| சசிதரன் | பிறை சூடியும், |
| நந்தியாக | நந்தீசனாக |
| திகழரன் | விளங்குகின்ற அரனும், |
| எங்கள் சரசன் | எங்களுக்கு இனியனும், |
| நற்சீதரன் | நல்ல திருமால் |
| நந்து | வளர்கின்ற |
| யாகம் | யாகங்களை |
| நிதம் | நாள்தோறும் |
| செய் | செய்கின்ற |
| அம்கச்சியில் | அழகிய கச்சியின்கண் |
| சார்ந்தநிரந்தரன் | சார்ந்த நிரந்தரனும் |
| நம் | நமக்கு |
| தியாகநசையன் | கொடுத்தற்கு விருப்பமுள்ளவனு மாகிய சிவபெருமான் |
| நம்சிந்தையில் | நம்மனத்தில் |
| தங்கினன் | தங்கியிருக்கின்றனன். |

கருத்து:—திருமாலினால் யாகங்கள் செய்யப்படும் கச்சிப்பதியிலுள்ள சிவபெருமான் நம் மனத்தில் தங்கியிருக்கின்றனன். அச்சிவபெருமான் மிக வடிவுடைய சுந்தரன்; அவனே வேதங்களுக்குத் தந்தை; அவனே பிறைசூடி; அவனே நந்தீசனாக விளங்கும் அரன்; அவனே நமக்கு இனியன்; அவனே எவர்க்கும் விரும்பியதைக் கொடுக்கும் விருப்புடையவன்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
THIRUVANMIYUR :: MADRAS

தங்கத் திகைத்தனத் தார்நகை காட்டித் தயங்கியெதிர்
தங்கத் திகைத்தனங் கேகயந் தேனெனத் தாங்கினநித்
தங்கத் திகைத்தனங் கையில னீயெனச் சாற்றிலர்சித்
தங்கத் திகைத்தன னல்லனென் கச்சியிற் சந்தனனே. (சு)

| பதம். | பொருள். |
|---|---|
| தங்கம் | தங்கம்போலும் |
| திகை | தேமலையுடைய |
| தனத்தார் | கொங்கையையுடைய மாதர்கள் |
| நகைகாட்டி | முறுவல்செய்து |
| தயங்கி | விளங்கி |
| எதிர்தங்க | எதிரில் நிற்க |
| திகைத்தனம் | மயங்கினோம்; |
| கேகயம் | மயிலே |
| தேன் | தேனே |
| என | என்றுரைத்து |
| நித்தம் | தினமும் |
| தாங்கினம் | காத்தோம்; |
| கையிலன் | கையிலொன்று மிலேன் (ஆதலால்) |
| கத்திகைத் தனம் | பூமாலை வாங்கித்தந்த பொருளை |
| ஈ என | ஈயென்றுகேட்க |
| சாற்றிலர் | ஒன்றும் பேசிலர்; |
| சித்தம் | அவர் மனம் |
| கத்தி | கத்திபோலுங் கொடிது; |
| கைத்தனன் அல்லன் | (இன்னும்) வெறுத்தேன் அல்லன். |
| என் | இஃது என்ன காரணம்? |
| கச்சியில் | காஞ்சியின்கண் |
| சந்தனனே | நல்லபொன்போலுஞ்சிவபெருமானே. |

கருத்து:—தங்கம் போலும் தேமல் நிறைந்த மாதொருத்தி புன்னகை புரிந்து என்னெதிரில் நிற்க, அவளைக்கண்டு மயங்கினேன்; 'மயிலே' என்றேன்; 'தேனே' என்றேன்; அவளை அனுதினமுங் காத்தேன்; உள்ளபொருளெலாம் ஒழியவும், 'கையிலொன்றுமில்லை; பூமாலை வாங்கித்தந்த பொருளையாவது கொடு' என்று கேட்டேன். அவளோ வாய்திறந்திலள்! ஆ! ஆ!! அவள் மனம் மிகக் கொடிது. இவையெல்லாம் அறிந்தும், இன்னும் நான் அவளை வெறுத்திலனே! கச்சிப்பதியிலுள்ள சிவபெருமானே! இது என்ன காரணம்?

சந்தனஞ் சந்தனஞ் சென்னெறி சென்றன சாலச்சர
சந்தனஞ் சந்தனந் தீட்டிக் கனிந்தகஞ் சாரச்சரா
சந்தனஞ் சந்தனந் தாரா தலநல்ல சர்க்கரைக
சந்தனஞ் சந்தனக் காகா தெழிற்கச்சிச் சங்கரனே. (கo)

| பதம். | பொருள். |
|---|---|
| சந்து | தூது போன |
| அனம் | அன்னப்புள் |
| சந்தனம் | தேர் |
| செல்நெறிசென்றன | சென்ற நெறியே சென்றன ; |
| தனம் | கொங்கை |
| சாலச்சரசம் | மிக இனிமையானது ; |
| சந்தனந்தீட்டி | சந்தனம் பூசி |
| அகம்கனிந்து | மனமகிழ்ந்து |
| சார | புணர |
| சராசந்தன் | சராசந்தனது |
| அஞ்சம் | அமிசம்போலுயிர் தளிர்ப்பதாகும்; |
| தனம் | செல்வமும் |
| தாராதல . | தருவதாகும்; |
| நல்லசர்க்கரை | இனிய சர்க்கரை |
| கசந்து | கசப்புற்று |
| தனக்கு | நாயகிக்கு |
| அல்நஞ்சம் ஆகாது | இருள்போற்கரிய நஞ்சமாகாது. |
| எழில் | அழகு வாய்ந்த |
| கச்சிச்சங்கரனே | கச்சியின்கட் சிவபெருமானே. |

கருத்து:—கச்சியின்கட் சிவபெருமானே! நினக்குத் தூதுவிட்ட அன்னப்புள் நின் தேர் சென்ற சுவட்டு நெறியே சென்றன, தலைவியின் கொங்கை மிக இனிது. அதன் கண்ணே சந்தனம் பூசி மகிழ்ந்து புணர வாடியவுயிர் தளிர்க்கும்; செல்வமுமுண்டாம்; தலைவியும் விருப்பு வைத்திருக்கின்றனள்.

(இது பாங்கி தலைவனைக் கண்ணுற்றுத் தலைவியைப் புனைந்துரைத்தல்.)

சங்கரி யந்தரி கச்சியி னங்கையர்த் தாங்களிக்கட்
சங்கரி யந்தரி யென்னக் களிக்கின்ற சங்கரநெஞ்
சங்கரி யந்தரி னன்ஞான நன்றெனைத் தள்ளற்கநஞ்
சங்கரி யந்தரி யாநின்ற தீயன சங்கரித்தே. (௬௬)

| பதம். | பொருள். |
|---|---|
| சங்கு | சங்குகளாகிய |
| அரியம் | வாசியவொலி |
| தரி | தரிக்கும் |
| கச்சியில் | கச்சியின்கண் |
| நங்கையர் | கலைமகளையும் திருமகளையும் |
| தாங்கு | காத்தருளும் |
| அளிக்கண் | அருளொழுகுங்கண்ணுடைய |
| சங்கரி அந்தரி | சங்கரியே அந்தரியே |
| என்ன | என்று துதிக்க |
| களிக்கின்ற சங்கர | மகிழ்கின்ற சங்கரனே! |
| நெஞ்சம் | மனம் |
| கரியம் | கருநிறமுடையோம் |
| நல்ஞானம் | நல்லுணர்வை |
| தரின் | தந்தால் |
| நன்று | நன்றாகும் |
| நஞ்சம் | உண்டநஞ்சமே |
| கரி | (தள்ளாம லாளுதற்கு)ச சான்றாகும். |
| அந்து | அந்தென்னும் வண்டைப்போல் |
| அரியாநின்ற | கெடுக்கின்ற |
| தீயன | தீயசெயல்களை |
| சங்கரித்து | அழித்து. |

குறிப்பு:—காமாட்சி: க=கலைமகளையும், மா=திருமகளையும், அட்சி= கண்ணில்வைத்துக் காத்தருள்வாளென்பது.

கருத்து:—வளமை மிக்க கச்சிப்பதியில், கலைமகளையும் திருமகளையும் நோக்கி, "அருளொழுகுங் கண்ணுடைய சங்கரியே! சுந்தரியே!" என்று துதிப்பதால் மகிழ்கொள்ளும சங்கரனே! நான் கரிய மனமுடையேன். எனக்கு நல்லுணர்வு தரல் வேண்டும. எங்ஙனம் கருநிறமுடைய நஞ்சையும தள்ளாமல் உட்கொண்டனையோ, அங்ஙனமே என்னையும தள்ளிவிடாமல் ஏற்றருளல் வேண்டும்.

சங்கர சங்கரத் தானன் கிறைஞ்சித் தகரநிறை
சங்கர சங்கர நீதா யெனக்கேட்டென் றாழ்நெஞ்சிளஞ்
சங்கர சங்கரந் தியாகஞ்செய் கின்றனை தண்ணறிஞர்
சங்கர சங்கரத் தீதழி கச்சியிற் றந்தியங்கே. (கஉ)

| பதம். | பொருள். |
|---|---|
| சங்கு | சங்குகளுக்கு |
| அரசு | அரசாகிய பாஞ்சசன்னியமுடைய |
| அம் | அழகிய |
| கரத்தான் | கையுடையதிருமால் |
| நன்கிறைஞ்சி | நன்குவணங்கி |
| தகரம்நிறை | ஞானவித்தை நிறைந்த |
| சங்கரசங்கர | சங்கரனே சங்கரனே |
| நீதாய் | நீ எனக்குத்தாய் |
| என | என்று துதிக்க |
| கேட்டு என் | கேட்டுப் பயனென்னை? |
| தாழ் நெஞ்சு | தாழ்ந்த மனமே! |
| இளஞ்சங்கர் | இளமையாகிய சங்கவளையலணிந்த மகளிரை நிகர்த்தாய் |
| அசம் | ஆடுகளை |
| கரந்து | வஞ்சித்து |
| யாகஞ்செய்கின்றனை | யாகஞ்செய்கின்றாய் |
| தண் அறிஞர் | தண்ணிய அறிஞரது |
| சங்கரசம் | சங்கத்தால் விளையும் ஞானரசத்தினால் |
| கரம் தீது | நஞ்சுபோன்ற குற்றம் |
| அழி | அழிகின்ற |
| கச்சியில் | கச்சியின்கண் |
| தந்து இயங்கு | தந்துவிளங்குக. |

கருத்து:—பாஞ்சசன்னியமுடைய திருமால் "சங்கரனே! நீயே எனக்குத்தாய்!" என்று துதிப்பதை நீ கேட்பதனால் யாது பயன்? உன்னிடமுள்ள வஞ்சனையை ஒழித்தா யில்லை. ஆகையால், ஏ மனமே! நீ உடனே கச்சிப்பதிசென்று உன்குற்றத்தை ஒழித்து ஒளியுடன் விளங்குவாயாக.

தந்தியங் காரிகை யாறறச் சாற்றினன் தானந்தினந்
தந்தியங் காரிகைக் கன்றினி னாய்ந்தனன் தண்ணளியன்
தந்தியங் காரிகை காதலன் றந்தை தயையெழிற்சித்
தந்தியங் காரிகை கச்சித் தலத்திற் சலங்கடிந்தே. (கரு)

| பதம். | பொருள். |
|---|---|
| தந்து | வேதத்தின் |
| இயம் | சொற்பொருளை |
| காரி | கரிக்குருவி |
| கையாறு | துன்பம் |
| அற | நீங்க |
| சாற்றினன் | சொன்னவனும், |
| தானம் | தானங்களை |
| தினந்தந்து | தினமுஞ்செய்து |
| இயங்கு | விளங்குகின்ற |
| ஆரி | சோழனை |
| கைக்கன்றினின் | இளங்கன்றினால் |
| ஆய்ந்தனன் | ஆராய்ச்சிசெய்தவனும், |
| தண்ணளியன் | தண்ணிய அருட்பிழம்பானவனும், |
| தந்தி | யானையால் வளர்க்கப்பட்ட |
| அம்காரிகை | அழகிய பெண்ணுக்கு |
| காதலன் | நாயகனான முருகனுக்கு |
| தந்தை | தந்தையுமாகிய சிவபெருமானது |
| தயை எழில் | திருவருளுண்டாயின் |
| சித்தம்தியங்கார் | மனமயங்கார். (ஆகலின்) |
| இகை | கொடுப்பாயாக |
| கச்சித்தலத்தில் | காஞ்சித்தலத்தின்கண் |
| சலங்கடிந்து | பொய்முதலியனதவிர்த்து |

கருத்து:—மனமே! கரிக்குருவிக் குபதேசஞ் செய்தவனும், சோழனை இளங் கன்றினால் ஆராய்ச்சி செய்தவனும், அருட்பிழம்பானவனும், முருகன் தந்தையுமாகிய சிவபெருமானது திருவருளுண்டாயின் உன்னுடைய மயக்கம் ஒழியும். ஆகையால், கச்சிப் பதியடைந்து, பொய் முதலியன தவிர்த்து, தான தருமஞ் செய்வாயாக.

சலஞ்சலங் கைத்தலத் தேந்தினன் றன்கா தலன்சினநிச்
சலஞ்சலங் கைத்தல ரெய்தனன் றண்ணந் தனந்திகழ
சலஞ்சலங் கைத்தலள் கண்செயி லச்சித் தசன்சிறியீ
சலஞ்சலங் கைத்தலங் கங்கிளர் கச்சியிற் றங்கிறையே. (கச)

| பதம். | பொருள். |
|---|---|
| சலஞ்சலம் | சலஞ்சலமென்னுஞ் சங்கினை |
| கைத்தலத்து | கையில் |
| ஏந்தினன் தன் | ஏந்தினவனுகிய திருமாலுக்கு |
| காதலன் | மகனுகிய மன்மதன் |
| சினம் | கோபத்தினுல் |
| நிசசல் | தினமும் |
| அஞ்சு | ஐந்தாகிய |
| அலங்கு | விளங்குகின்ற |
| ஐத்து | அழகிதாகிய |
| அலர் | மலரம்புகளை |
| எய்தனன் | விடுத்தனன்; |
| தண்ணந்தனம் | தண்ணிய கொங்கை |
| திகழ் அசலம் | விளங்குகின்ற மலையாம் |
| சலம் | (இன்று) அசையுந்தன்மையதாகும்; |
| கைத்தலள் | இன்னும் வெறுப்பிலள்; |
| கண்செயில் | திருவருள் செய்யின், |
| அச சித்தசன் | அம்மன்மதன் |
| சிறியீசல் | சிறிய ஈசல் போலாவன். |
| அஞ்சலம் | யாமும் அஞ்சிலோம். |
| கைத்தல் | அலங்கரித்தலுடைய |
| அங்கம் | வேதாங்கம் |
| கிளர் | விளங்குகின்ற |
| கச்சியில் | காஞ்சியின்கண் |
| தங்குஇறையே | வாழ்கின்ற சிவபெருமானே! |

கருத்து:—திருமாலின் மகனுகிய மன்மதன் பஞ்சமா பாணங்களை இடைவிடாது விடுக்கவும், அசையா மலைபோலுங் கொங்கையானது இன்று அசையுந்தன்மைய தாயிற்று. ஆயினும் என்? இன்னும் வெறுப்பிலள்! ஆகையால், காஞ்சியின்கண் வாழும் சிவபெருமானே! நீயே திருவருள் செய்யவேண்டும். உன்னருள் உண்டாயின் அம்மன்மதனும் அழிவான்; யாமும் அஞ்சிலோம்.

(இது பாங்கி தலைவியின் தன்மை கூறல்.)

தங்கலை யார னனந்தலை சேர்த்த தனிநதிநத்
தங்கலை யாரந் நிலனேர்நன் கச்சியிற் றண்ணியசித்
தங்கலை யார நிலங்கெடச் சாலத தயைசெயநித்
தங்கலை யார ஞரீட்டினென் னெஞ்சே தனநல்கியே. (கரு)

| பதம். | பொருள். |
| --- | --- |
| தங்கு | பொருந்தும் |
| அலை | அலைகள் |
| ஆரல் | மதிலின் |
| நனந்தலை | உசசியில் |
| சேர்த்த | சேர்த்துவைத்த |
| தனிநதி | ஒப்பற்ற யாற்றிலுள்ள |
| நத்தம் | சங்கு |
| கலை | பதினாறு கலைகளும் |
| ஆர் | நிறைந்த |
| அநிலை | அசசநதிரனை |
| நேர் | நிகர்க்கும் |
| நன்கசசியில் | நல்ல கசசியின்கண் |
| தண்ணியசித்தஙகலையார் | குளிநத மனம் அலையாதவ ராகிய சிவபெருமான் |
| அநிலங்கெட | பிறவிநீஙக |
| சாலத்தயைசெய | மிகத்திருவருள்செய்ய |
| நித்தம் | தினமும் |
| கலையார் | ஆடையால் மயக்கு மகளிரது |
| அஞர் | துன்பங்களை |
| ஈட்டின் | தேடினால் |
| என் | என்னபயன்? |
| நெஞ்சே | மனமே |
| தனம் நல்கி | பொருள் கொடுத்து |

குறிப்பு:—நிலா நில என்றாயிற்று. குறியதன்கீழாக்குறுகும்.

கருத்து:—சங்குகள் நிறைந்த கச்சிப்பதியிலுள்ள சிவபெருமானுடைய திருவருளைப் பெற்று, உன் பிறவியை நீக்கிக்கொள்ள நீ விரும்புதியேல், ஆடையால் மனத்தை மயக்கும் மகளிர்பின்சென்று அவருக்குப் பொன்னைக் கொடுத்துத் துன்பத்தை தேடிக்கொள்வதால் யாது பயன்?

தனத்தரங் கத்தனை யார்நடஞ் செய்கச்சித் தானனைக்கே
தனத்தரங் கத்தனைக் கஞ்சனைச் சேணிற் கலசநிகர்
தனத்தரங் கத்தனை யாக்கி யளிக்கின்ற தந்தையைச்சே
தனத்தரங் கத்தனை நெஞ்சிலிட் டஞ்சலி தந்தனனே. (கரு)

| பதம் | பொருள். |
|---|---|
| தனத்து | பொன்னுலாகிய |
| அரங்கத்து | நாடகசாலையில் |
| அனையார் | அன்னைபோலும் அன்புடைய கணிகைமாதர் |
| நடம் செய் | நடனஞ் செய்கின்ற |
| கச்சித்தானனை | கச்சித்தலத்தானும், |
| கேதனம் | (கருடக்) கொடியுடைய |
| தரங்கத்தனை | பாற்கடலிற் பள்ளிகொள்ளும் திருமாலையும் |
| கஞ்சனை | பிரமனையும் |
| சேணில் | துறக்கத்தில் |
| கலசநிகர் | தாமரையரும்பொத்த |
| தனத்தர் | கொங்கையுடைய அரம்பையருக்கு |
| அம் கத்தனை | அழகிய நாயகனாகிய இந்திரனையும் |
| ஆக்கி | படைத்து |
| அளிக்கின்ற | காக்கின்ற |
| தந்தையை | அப்பனும், |
| சேதனம் | ஞானமாகிய |
| தரங்கு | நெறியிலுள்ள |
| அத்தனை | கடவுளும் ஆகிய சிவபெருமானை |
| நெஞ்சிலிட்டு | மனத்தில்வைத்து |
| அஞ்சலி தந்தனன் | அஞ்சலி செய்தேனாக. |

குறிப்பு:—சேண்-இருமடியாகு பெயர்.

கருத்து:—பொன்னுலாகிய நாடக சாலையில் கணிகைமாதர் நடனஞ் செய்கின்ற கச்சித் தலத்தானும், திருமால, பிரமன், இந்திரன், முதலியோரைப் படைத்துக் காக்கின்ற அப்பனும், ஞானமாகிய நெறியிலுள்ள கடவுளுமாகிய சிவபெருமானை மனதில் வைத்து அஞ்சலிசெய்தேனாக.

தந்தனந் தங்கற் றதனுலென் னூரியைத் தாளநத்தந்
தந்தனந் தங்கச் சிலையெனச் சாற்றித் தனங்கணனி
தந்தனந் தங்க நிழலிலே யென்செய்கேஞ் சங்கிறைநித்
தந்தனந் தங்க டியநினை கச்சியிற் சங்கரனே. (௧௭)

| பதம். | பொருள். |
| --- | --- |
| தந்து | நூல்கள் |
| அநந்தம் | பலவாக |
| கற்றதனுல் என் | படித்ததனுலென்ன? |
| நாரியை | மகளிரை |
| தனம் | நும்கொங்கை |
| தாளம் | தாளமாகும் |
| நத்தந்தம் | யானையது சிறந்ததந்தமாகும் |
| தங்கச்சிலை | பொன்மலையாகும் |
| எனசசாற்றி | என்றுபுகழ்ந்து |
| தனங்கள் | செல்வங்கள் |
| நனிதந்தனம் | மிகத்தந்தோம். |
| தங்க | இருக்க |
| நிழல் இலை | திருவடிநிழ லில்லையாகும். |
| என்செய்கேம் | என்செய்வோம்? |
| சங்கு இறை | திருமால் |
| நித்தம் | தினமும் |
| தன் | தனது |
| அந்தம் | மரணம் |
| கடிய | நீங்க |
| நினை | நினைக்கின்ற |
| கச்சியில் | கசசியின்கண் |
| சங்கரனே | சிவபெருமானே |

குறிப்பு:—செய்கேம். கு-எதிர்கால விடைநிலை.

கருத்து:—திருமாலால் துதிக்கப்படும் கச்சிப்பதியில் வாழும் சிவபெருமானே! நான் பல நூல்களைப்படித்தேன். ஆனுல், என்ன பயன்? பெண்களைப் பார்த்து "உங்கள் கொங்கை தாளமோ, யானைத்தந்தமோ, பொன்மலையோ" என்று பலவாறு புகழ்ந்து உள்ள பொருளையெல்லாம் கொடுத்தொழித்தேன். உன்னுடைய திருவடி நிழலைப் பெருதவனுயினேன். அந்தோ! என் செய்வேன்?

கரந்தரி யாதரத் திண்கயி றேந்தினன் கைக்கனிநி
கரந்தரி யாதர நாதற்சேர் கென்னக் கதிர்க்கச்சிந
கரந்தரி யாதர ணற்றிநன் றன்றே கழலினிச்சி
கரந்தரி யாதர ணிக்க ணரியன காரிகையே. (கஅ)

| பதம். | பொருள். |
|---|---|
| கரந்து | ஒளித்து |
| அரி | யமன் |
| ஆதர | இரக்கமுண்டாக |
| திண்கயிறு | திண்ணியபாசத்தை |
| ஏந்தினன் | எடுத்தான் |
| கைக்கனி | உள்ளங்கை நெல்லிக்கனியை |
| நிகர் | ஒத்த |
| அந்தரி | பார்வதிக்கு |
| ஆதரம் | விருப்பமுள்ள |
| நாதன் | சிவபெருமானை |
| சேர்க என்ன | அடைக என்றுரைக்க |
| கதிர்க்கச்சி நகரம் | ஒள்ளியகாஞ்சி நகரத்தில் |
| தரியாது | தங்காமல் |
| அரண் அற்றி | அழகற்றாய். |
| நன்று அன்றே | இதுநன்று அன்றே! |
| கழல் | அவன் திருவடிகளை |
| இனி | இனி |
| சிகரம் | தலைக்கணியாக |
| தரி | தரிக்க |
| யா | எவை |
| தரணிக்கண் | உலகத்தில் |
| அரியன | அருமையானவை |
| காரிகையே | பெண்ணே |

குறிப்பு:—அன்றே - ஏகாரம் இரக்கப்பொருட்டு. பெண்ணே-மகடூஉ முன்னிலை.

கருத்து:—பெண்ணே! மரணம் நிச்சயமாகலின் சிவபெருமானை அடைக என்ன, அவனதுகாஞ்சிநகரத்திலேயே வசியாமலிருக்கின்றாய். இது நன்று அன்று. இனியேனும் அவன்திருவடிகளைச் சூட்டுக. யாவும் சித்திக்கும்.

காரிகை யாதனந் தன்கத்த னென்னக் கயிலையன்றீக்
காரிகை யாதனந் தந்தே யளிக்கின்ற கச்சியில
காரிகை யாதனஞ் சந்ததிக் கேநகை காலிலிந்தக்
காரிகை யாதனந் தானே யிழந்தனள் கன்னெஞ்சனே. (கக)

| பதம். | பொருள். |
|---|---|
| காரி | இந்திரன் |
| கையாது | வெறுக்காமல் |
| அநந்தன் கத்தன் | அநந்தனே கர்த்தனே |
| என் | என்றுதொழும் |
| அக்கயிலையன் | அவ்வெள்ளிமலையானும் |
| தீக்கார் | தீயகுற்றங்களை |
| இகையாது | தராமல் |
| அனந்தந்தே | அன்னந்தந்தே |
| அளிக்கின்ற | காக்கின்ற |
| கசசியில் அகாரி | கசசியின்கட் கடவுளும் |
| கை ஆதன் | ஒழுக்கந்தருமாசிரியனுமாகிய சிவபெருமான் |
| காலில் | காலின்கண் |
| இந்தக்காரிகை | இந்தப் பெண் |
| ஆதனம் | ஆடையை |
| தானே இழந்தனள் | தானே யிழந்துவிட்டாள் |
| நம்சந்ததிக்கே | இதுநமது மரபிற்கே |
| நகை | நகைப்பாகும் |
| கல் நெஞ்சனே | அவன் கல்லொத்த மனமுடையானோ. |

குறிப்பு:—கார் - பண்பாகு பெயர். அநந்தன் கத்தன்-அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவி. ஏகாரம் - வினாப்பொருட்டு.

கருத்து:—தலைவி ஆடையைக் காலினிடத்தே தானேயிழந்தனள். இது நம் குடிமைக்கு நகைப்பாகும். கச்சியின்கட் சிவபெருமான் கல்லொத்த மனமுடையானோ?

(இது பாங்கி தலைவியின் தன்மை கூறல். மிக்க மோகத்தால் ஆடையிழந்தாளென்பது.)

கன்னலஞ் செய்தனச் சந்தனஞ் சிந்தக் கதழனங்கன்
கன்னலஞ் செய்தனந் தள்ளா திரானுற் கனிதல்சில
கன்னலஞ் செய்தன கந்தீங் கிரதங் கலந்தனன்றுள்
கன்னலஞ் செய்தனத் தாலிகழ் கச்சியிற் கண்ணிநின்றே. (உ0)

| பதம். | பொருள். |
|---|---|
| கல் நலம் செய் | மலைபோல் நலஞ்செய்கின்ற |
| தனம் | கொங்கையிற் பூசிய |
| சந்தனம் | சந்தனம் |
| சிந்த | சிந்தும்படி |
| கதழ் அநங்கன் | கோபிக்கின்ற மன்மதன் |
| கன்னல் | கருப்புவில்லால் |
| அஞ்சு எய்து | பஞ்சபாணங்களெய்து |
| அனம் தள்ளாதிரான் | அன்னந்தள்ளாதிரான்; |
| கனிதல் | இங்கு மகிழ்ந்திருத்தல் |
| சில கன்னல் | சிலநாழிகையேயாம். (ஆதலால்) |
| அஞ்சு தீங்கு | தீவினைக்கு அஞ்சுக. |
| எய்து அநகம் | நல்வினையை அடைக. |
| இரதம் | மாவடியில் |
| கலந்தனன் தாள் | கலந்த சிவபெருமான் திருவடியை |
| கல் | கற்க |
| நலம் | நற்குணமுடையோம் ஆவோம். |
| செய் | கழனிகள் |
| தனத்தால் | பொன்னினுல் |
| நிகழ் | விளங்குகின்ற |
| கச்சியில் | காஞ்சியின்கண் |
| கண்ணி நின்று | எண்ணிநின்று. |

குறிப்பு:—நல்லம், நலம்-இடைக்குறை.

கருத்து:—மன்மதனுடைய பஞ்சபாணங்களால் துன்பமே உண்டாகும்; இங்கு நாம் மகிழ்வதெல்லாம் சில நாழிகையேயாம். ஆதலால், காஞ்சியில் விளங்கும் சிவபெருமானை எண்ணித் தீவினைக்கு அஞ்சி நல்வினையையும் நற்குணத்தையும் அடைக.

கண்ணிய னங்கை யிடத்தினன் கச்சியிற் காரிதழிக்
கண்ணிய னங்கைக் கனலினன் றீய கனிந்தியற்றக்
கண்ணிய னங்கை யறியாச் சிறியங் கழலினிநாங்
கண்ணிய னங்கைத் தறஞ்செய் திறைஞ்சிற் கரந்திலனே. (உக)

| பதம். | பொருள். |
|---|---|
| நாம் | நாம் |
| தீய | பாவங்களை |
| கனிந்து இயற்ற | மகிழ்ந்து செய்ய |
| கண்ணி | வலையை |
| அனம் | ஒத்திருக்கின்றோம்; |
| கை அறியா | கை அறியாத |
| சிறியம் | சிறுதன்மை யுடையோம்; |
| இனி | இனி |
| கண் இயல் | பெருமைபொருந்திய |
| நங்கையிடத்தினன் | மங்கைபாகனும் |
| கச்சியில் | கச்சியின்கண் |
| காரிதழிக் கண்ணியன் | கரிய கொன்றைமாலை சூடியும் |
| அங்கைக் கனலினன் | அங்கையில் மழுவுடையோ னும் ஆகிய சிவபெருமானது |
| கழல் | திருவடிகளை |
| கண்ணி | எண்ணி |
| அனம் | சோறும் |
| கைத்து | பொருளும் |
| அறம் செய்து | தருமஞ்செய்து |
| இறைஞ்சின் | வணங்கின் |
| கரந்திலன் | ஒளித்திரான். |

குறிப்பு:—அனம்—இடைக்குறை.

கருத்து:—நாம் பாவங்களையே மகிழ்ந்து செய்பவர்களாயும், சிறுதன்மையர்களாயு மிருப்பதால், இனியாவது மங்கைபாகனும், கொன்றைமாலை சூடினவனும், மழுவேந்தியவனும் கச்சிப் பதியில் விளங்கும் சிவபெருமான் திருவடிகளை எண்ணித் தானதருமஞ் செய்து அவனை வழிபடுவோமாக.

கரந்தை யலங்க னிகழ்செஞ் சடையான் கடலிலற்றைக்
கரந்தை யலங்க ளிலாததண் கச்சிக் கனியளிச்சா
கரந்தை யலங்க னிரந்தர னென்றே கரந்திறைஞ்சக்
கரந்தை யலங்க லிலனென்ன லென்கலைக் கையரனே. (௨௨)

| பதம். | பொருள். |
|---|---|
| கரந்தை அலங்கல் | கரந்தை மாலையால் |
| நிகழ் | விளங்குகின்ற |
| செஞ்சடையான் | செஞ்சடையுடையவன் |
| கடலில் | கடலின்கண் |
| அற்றை | அந்நாள் |
| கரம் | நஞ்சை |
| து | உண்ட |
| ஐ | கடவுள் |
| அலங்கள் | சஞ்சலங்கள் |
| இலாத | இல்லாத |
| தண்கச்சி | தண்ணிய கச்சியில் |
| கனி | கனிவுடைய |
| அளிச்சாகரம் | அன்பாங்கடல் |
| தையல் அங்கன் | மங்கைபாகன் |
| நிரந்தரன் | நிரந்தரன் |
| என்றே | என்று சொல்லியே |
| கரந்து இறைஞ்ச | வஞ்சித்துவணங்க |
| கரந்தை | (நீயும்) வஞ்சித்து நின்றாய். |
| அலங்கல் இலன் | இரக்கமில்லாதவன் |
| என்னல் | என்று சொல்லல் |
| என் | என்காரணம் ? |
| கலைக்கையரனே | மான்பிடித்த கையுடைய சிவ பெருமானே. |

குறிப்பு:—துத்து துப்பு முதலியன துவ்வென்னுந் தனிவினையிற் பிறந்த தொழிற்பெயர்.

கருத்து:—செஞ்சடையுடையான் முதலிய உன் பெயர்களை உண்மையாகச் சொல்லி வணங்காமல் வஞ்சித்துச் சொல்லி வணங்கினமையால் நீயும் வஞ்சித்து நின்றாய். நீ இரக்க மில்லாதவன் என்னல் என்னை ?

கையாற் றினனந்தை நாயகன் செந்நெற் கழனியலைக்
கையாற் றினனந்தைத் தண்கரை யேற்றெழிற் கச்சியிற்கங்
கையாற் றினனந்தை யாளனென் றேத்திக் கரையநற்ற
கையாற் றினனந்தை தாஞ்சடை யானங்ஙன் கண்டிலங்கே. (உ௯)

| பதம். | பொருள். |
|---|---|
| கையாறு | ஒழுக்கமுடைய |
| இன் அநந்தை | இனிய பார்வதிக்கு |
| நாயகன் | தலைவன் |
| செந்நெல் | செந்நெல்கொழிக்கும் |
| கழனி | வயல்கள் |
| அலைக்கையால் | அலையாகிய கையால் |
| தினன் | தினமும் |
| நந்தை | சங்குகளை |
| தண்கரை | தண்ணிய வரம்பில் |
| ஏற்று | ஏற்றுகின்ற |
| எழிற்கசசி | அழகியகசசியின்கண் |
| கங்கையாற்றினன் | கங்கையாற்றையுடையவன் |
| நம்தையாளன் | நமது திருவருட்செல்வன் |
| என்றேத்தி | என்று தொழுது |
| கரைய | மனமுருக |
| நல்தகை | நற்குணங்களை |
| ஆற்றினன் | செய்தான் |
| நந்து | வளர்கின்ற |
| ஐது ஆம் | அழகுடையதாகிய |
| சடையான் | சடையுடைய சிவபெருமான். (ஆதலால்) |
| அங்ஙன் | அவ்விடத்தை |
| கண்டு | பார்த்து |
| இலங்கு | விளங்குக. |

குறிப்பு:—நற்றகை யாற்றினன்=மிக்க தளர்ச்சியைத் தணித்தான் எனலுமாம். தயாளன்-தையாளன். போலி.

கருத்து:—வளப்பமிகுந்த கச்சிப்பதியிலுள்ள சிவபெருமான், 'கங்கையாற்றை யுடையவன்', 'நமது திருவருட் செல்வன்' என்று தொழுது மனமுருக, நற்குணங்களைச் செய்தான். ஆதலால் அவ்விடத்தைப்பார்த்து விளங்குக.

இலங்கை யனங்கஞ் சிதைத்தா னிறைஞ்சர னிண்டையலர்
இலங்கை யனங்கஞ் சனந்திகழ் கச்சியி லேற்றினிடை
இலங்கை யனங்க ணிதிய னிரத னெனச்செயிர்தான்
இலங்கை யனங்க னலரெயா னெஞ்சே யிலங்கடிந்தே. (உச)

| பதம். | பொருள். |
|---|---|
| இலங்கையன் | இலங்காபுரியாண்ட இராவணனை |
| அங்கஞ்சிதைத்தான் | உடலையழித்த இராமசந்திரன் |
| இறைஞ்சு அரன் | வணங்குகின்ற அரனே |
| இண்டை அலர் | தாமரைமலர்கின்ற |
| இலங்கு | திருக்குளங்களில் |
| ஐ அனம் | அழகிய அன்னப்பறவைகள் |
| கஞ்சனந்திகழ் | கண்ணாடிபோல்விளங்கும் |
| கசசியில் | கசசியின்கண் |
| ஏற்றினிடை | இடபத்தின்கண்ணே |
| இலங்கு | விளங்குகின்ற |
| ஐயன் | ஐயன் |
| நங்கள்நிதியன் | நமது செல்வன் |
| இரதன் | மாவடிக்கீழ்சசிவபெருமான் |
| என | என்றிறைஞ்ச |
| செயிர்தான் | குற்றம் |
| இல் | இல்லையாகும் |
| அம்கை | அழகியகையால் |
| அநங்கன் | மன்மதன் |
| அலரெயான் | மலரம்புகளை யெய்யான் |
| நெஞ்சே | மனமே |
| இலங்கடிந்து | வறுமைத்துன்பமொழித்து |

குறிப்பு:—தான்-செய்யுளின்பம் பயக்கநின்றது.

கருத்து:—கச்சிப் பதியில் இடபத்தின் மீது விளங்கும் எம்மிறைவனை, "இராவணனையழித்த ஸ்ரீ ராமபிரானால் வணங்கப் பெறும் அரனே! மாவடிக்கீழ்ச் சிவபெருமானே!" என்று இறைஞ்சுவோமேயானால் நம்முடைய குற்றங்களும் ஒழியும்; மன்மதனும் நம்மீது மலரம்புகளை எய்யான்.

இலங்கங் கனந்தரித் தேகளி காட்டி யியைந்தகச்சி
இலங்கங் கனந்தரி யானந்த நேய னெழிற்கைதலை
யிலங்கங் கனந்தரி சச்சிதா னந்த னெனினிடர்கள்
இலங்கங் கனந்தரி லின்றங் கனையா ரினந்தணந்தே. (உரு)

| பதம் | பொருள். |
|---|---|
| கங்கு | வரம்பின்பக்கமே |
| இலம் | வீடாக |
| அனம் | அன்னப்பறவைகள் |
| தரித்தே | தங்கியே |
| களிகாட்டி | மகிழ்வுகாட்டி |
| இயைந்த கச்சி | உறைந்திருக்கின்ற கச்சியில் |
| இலங்கு | விளங்குகின்ற |
| அங்கன் | திருமேனியுடையானே |
| அந்தரி | பார்வதிக்கு |
| ஆநந்த நேயன் | ஆநந்தநேயனே |
| எழில் | எழுச்சியுடைய |
| கை தலையில் | கையிலும் தலையிலும் |
| அங்கம் | என்பு மாலைகளை |
| கனந்தரி | கனமாகத் தரிக்கின்ற |
| சசசிதானந்தன் | சசசிதானந்தனே |
| எனின் | என்றுதுதிக்கின் |
| இடர்கள் இல் | துன்பங்களில்லையாகும் |
| அங்கம் | வேதாங்கங்களை |
| கல் | கற்க |
| நந்து அரில் | வளர்கின்றகுற்றம் |
| இன்று | இன்றி |
| அங்கனையார் | மகளிரது |
| இனந்தணந்து | கூட்டத்தினீங்கி |

குறிப்பு:—இன்றி யென்னும் வினையெச் சிகரம் உகரமாயிற்று.

கருத்து:—அன்னப்பறவைகள் மிகுந்த கச்சிப்பதியில் விளங்கும் பரமசிவனைப் பார்த்து, "பார்வதிக்கு ஆநந்த நேயனே! என்பாபரணனே! சச்சிதானந்தனே!" என்று துதிப்பின், நமக்குத் துன்பங்கள் இல்லையாகும்; ஆகையால் நாம மகளிர் கூட்டத்தினீங்கி வேதாங்கங்களைக் கற்போமாக.

தனநந் தனந்தன தாகச்செய் யாநின்ற தண்கச்சியத்
தனநந் தனந்தனன் றன்சிரங் கிள்ளிய சங்கரன்சே
தனனந் தநந்தன னேத்தரன் சீரியன் றாங்களிச்சா
தனனந் தநந்தன கந்தரத் தாயடி தங்கினனே. (உ௯)

| பதம். | பொருள். |
|---|---|
| தனம் | பொன்மயமாகிய |
| நந்தனம் | நந்தவனங்களை |
| தனதாக | தன்னுடையதாக |
| செய்யாநின்ற | செய்கின்ற |
| தண்கசசி | தண்ணியகசசியில் |
| அத்தன் | தந்தையும |
| அநந்தன் | அநந்தனும் |
| நந்து | வளர்சசிசெய்யும் |
| அனன்தன் | அன்னவூர்தியாகிய பிரமனது |
| சிரம்கிள்ளிய | தலையைக் கிள்ளிய |
| சங்கரன் | சங்கரனும் |
| சேதனன் | பேரறிவாளனும் |
| நந்தநந்தனன் | திருமால் |
| எத்து அரன் | ஏத்துகின்ற அரனும் |
| சீரியன் | சிறப்புடையோனும் |
| தாங்கு | காக்கின்ற |
| அளிசசாதனன் | அருட்சாதன முடையானுமாகிய சிவ பெருமானது |
| அடி | திருவடிகளில் |
| தங்கினன் | தங்கினேனாக |
| அந்த நந்து அன | அந்தசசங்கைப்போலும் |
| கந்தரத்தாய் | கழுத்துடையமாதே |

குறிப்பு:—கந்தரத்தாய்-மகடூஉ முன்னிலை.

கருத்து:—சங்கைப்போலும் கழுத்துடையமாதே! நந்தவனம் நிறைந்த கச்சிப்பதியில் வாழும் சிவபெருமானே எனக்குத்தந்தை; அவனே அநந்தன்; அவனே பிரமன் தலையைக்கிள்ளிய சங்கரன்; அவனே பேரறிவாளன்; அவனே திருமால் வணங்கும் அரன்; அவனே அளவற்ற சிறப்புடையோன்; அவனே அருட்சாதன முடையோன். அன்னவன் திருவடிகளில் நான் தங்கினேன்.

தரித்திரங் காத நடந்தே திரிகின்ற தண்கச்சியில்
தரித்திரங் காத தனியேனைச் சாலத் தயையளித்தா
தரித்திரங் காத வினியாணை நீயிர்தான் தந்தையரத்
தரித்திரங் காத வியாரில ரந்தரி தந்திரரே. (௨௭)

| பதம். | பொருள். |
|---|---|
| தரித்திரம் | வறுமையானது |
| காதம் | காததூரம் |
| நடந்தே | சென்றே |
| திரிகின்ற | கெடுகின்ற |
| தண்கசசியில் | தண்ணியகசசியின்கண் |
| தரித்து | தங்கி |
| இரங்காத | மனமுருகாத |
| தனியேனை | அடியேனை |
| சால | மிகுதியும் |
| தயைஅளித்து | திருவருள்வைத்து |
| ஆதரித்திர் | காப்பாற்றினீர். |
| இனி | இனி |
| அங்கு ஆதல் | வீட்டுலகத்திற் பேரின்பமடைதல் |
| ஆணை | சத்தியமாகும். |
| நீயிர்தான் தந்தையர் | நீரே என்தந்தையர்; |
| ,, அத்தர் | நீரே என்பரமாசாரியர்; |
| இத்திரம் | இந்நிலைமையை |
| காதலியாரிலர் | விரும்பாதாரிலர். |
| அந்தரி | உமாதேவிக்கு |
| தந்திரரே | நாதராகியசிவபெருமானே! |

குறிப்பு:—தான்-தேற்றத்தின்கண்வந்த இடைசசொல்.

கருத்து:—செல்வத்திற் சிறந்த கச்சிப்பதியில் தங்கிக் கொஞ்சமும் மனமுருகாத என்மீதும் தேவரீர் திருவருள் வைத்துக் காப்பாற்றினீர். ஆதலின், இனி நான் பேரின்பத்தைப்பெறுதல் நிச்சயம். நீரே எனக்குததந்தையும் பரமாசாரியருமாயினிர். சிவபெருமானே! இந்நிலைமையை விரும்பாதவரும் இருப்பரோ இவ்வுலகில்?

தந்திரங் காரண ஞானந் திரண்டார் தழைகின்றநித்
தந்திரங் காரணத் தண்டலை சேர்கச்சித் தானநனி
தந்திரங் காரணங் கெய்தின ரென்னச சகத்தினிடைத்
தந்திரங் காரண னீர்ந்தயை யெங்ஙனஞ் சந்தித்தலே. (உ௮)

| பதம். | பொருள். |
|---|---|
| தந்திரம் | பலநூல்கள் |
| காரணம் | காரணமாக |
| ஞானந்திரண்டார் | ஞானந்திரண்டுள்ளபெரியார் |
| தழைகின்ற | செழிக்கின்ற |
| நித்தம் | தினமும் |
| திரம் | நிலையாக |
| கார் | மேகங்கள் |
| அணை | பொருந்த |
| தண்டலை | சோலைகள் |
| சேர் | சேரும் |
| கசசித்தானம் | கசசித்தலத்தில் |
| நனிதந்து | மிகக்கொடுத்து |
| இரங்கார் | மனமிரங்காதவர் |
| அணங்கு எய்தினர் | துன்பமடைந்தனர் |
| என்ன | என்றுசொல்ல |
| சகத்தினிடைத் தந்திர் | உலகத்தில்வசப்பட்டீர்கள் |
| அங்கு ஆரணன் | அங்குமறைமுதலியாகிய சிவபெருமானது |
| ஈர்ந்தயை | தண்ணியதிருவருளை |
| சந்தித்தல் | கிட்டுதல் |
| எங்ஙனம் | எவ்வாறு? |

குறிப்பு:—ஈர்ந்தயை-இடைக்குறை.

கருத்து:—கச்சித்தலத்தில் தான தருமஞ்செய்து மனமிரங்காதவர் பெருந்துன்பத்துக் காளாயினரென்று சொல்லவும், அதற்குச் செவிகொடாது உலக விச்சைக்கே உட்பட்டீர். அந்தோ! அச்சிவ பெருமானின் தண்ணிய திருவருளை இனிநீர் எங்ஙனம் பெறுவீர்?

சந்தா னகரணி யன்னான் சடையனார் தந்தனயர்
சந்தா னகரணி யிற்சிறந் தேய்கச்சிச் சங்கரன்றண்
சந்தா னகரணி தந்தாழ் தனத்தியர் சங்கங்கிலே
சந்தா னகரணித் தாயிரே லென்றனன் றந்திரியே. (௨௯)

| பதம். | பொருள். |
|---|---|
| சந்தானகரணி | முறிந்தவுறுப்புகளை யிணைக்குமருந்தை |
| அன்னான் | ஒத்தவனும் |
| சடையனார்தம் | சடையனாருக்கு |
| தனயர் | புதல்வராகிய சுந்தரமூர்த்திக்கு |
| சந்தான் | தூதுசென்றவனும் |
| நகரணியில் | நகரத்துக்குரிய அணிகளினால் |
| சிறந்தேய் | மேம்பட்டுள்ள |
| கச்சிச்சங்கரன் | கச்சியின்கட் சுகரனுமாகியசிவபெருமான் |
| தண் சந்து ஆன | தண்ணியசந்தனம் பூசிய |
| கரணிதம் | மனம் புத்தி சித்தம் அகங்காரமென்பவை |
| தாழ் | பணிந்தரிற்கும் |
| தனத்தியர் | கொங்கையுடையமாதரது |
| சங்கம் | கூட்டம் |
| கிலேசந்தான் | துன்பமேதருவதாகும் |
| நகர் | அவரைவிட்டு நீங்குக |
| அணித்தாயிரேல் | அவரருகிலிருக்கற்க |
| என்றனன் | என்று சொல்லினன். |
| தந்திரியே | அவன் தந்திரமுள்ளவனேயாவன். |

குறிப்பு:—தான்-தேற்றப்பொருட்டு.

கருத்து:—சந்தானகரணியை ஒத்தவனும், சுந்தரர்க்குத் தூது சென்றவனுமாகிய கச்சிப்பதியில் விளங்கும் சிவபெருமான், "அன்பர்காள்! மகளிரது சந்தனம் பூசிய கொங்கையைக்கண்டக்கால், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் யாவும் அடங்கியொடுங்கும். ஆகலின், அம்மகளிர் கூட்டம் துன்பமே தருவதாகும். அவரை விட்டு நீங்குக." என்று கூறினன். என்னே அவன்றன் தந்திரம்!

திரிகை யகங்கை யடையெனச் சாற்றிச் சிலைநகிலத்
திரிகை யகங்கை யறலாயிற் றேயெழிற் சேதனக்க
திரிகை யகங்கைத் திரிந்தே யழிந்திடல் தேரினஃதெ
திரிகை யகங்கைச் சடைத்தலைக் கச்சியிற் சீரியனே. (௯௦)

| பதம். | பொருள். |
|---|---|
| திரிகைஅகம் | குயவன் சக்கரம்போன்றமனம் |
| கையடைஎன | அடைக்கலமென்று |
| சாற்றி | சொல்லி |
| சிலைநகிலம் | மலைபோலுங் கொங்கையுடைய |
| திரி | மாதரது |
| கைஅகம் | கைவசப்பட்டு |
| கையறலாயிற்றே | ஒழுக்கமில்லாமற் போயிற்றே |
| எழில் | எழுச்சியுடைய |
| சேதனக்கதிர் | ஞானசூரியனை |
| இகை | அருள்க |
| அகம் | தீவினையானது |
| கைத்து | வெறுத்து |
| இரிந்து | முரிந்து |
| அழிந்திடல் | அழிந்திடுக |
| தேரின் | ஆராயின் |
| அஃது | அத்தீவினையே |
| எதிரி | பகையாகும் |
| கைய | அலங்காரமுள்ள |
| கங்கை | கங்கையைத்தரித்த |
| சடைத்தலை | சடைநிறைந்ததலையுடைய |
| கச்சியிற் சீரியனே | கச்சியின்கட். சீரிய சிவபெருமானே. |

குறிப்பு:—கைய-குறிப்புப் பெயரெச்சம்.

கருத்து:—சுற்றிச் சுற்றிவரும் குயவன் சக்கரத்தையொத்த மனத்தை அடைக்கலமென்று சொல்லி, மலைபோலுங் கொங்கையுடைய மங்கையர் வசப்பட்டு ஒழுக்கங் குறைந்தவனாயினேன். என் செய்வேன்? கங்காதாரியாய் கச்சியில் விளங்குஞ் சிவபெருமானே! என்னுடைய தீவினையை அழித்து எனக்கு ஞானச்சுடர் நல்குவாயாக.

கச்சி இதழகல் அந்தாதி
முற்றிற்று.

## இந்நூலாசிரியரால்
## இனி அச்சிற் பதிப்பிக்கப்படும் புத்தகங்களாவன:-

* திருமாகறற் புராணம்.
* திருமாகறல் வைபவம்.
திருமாகறல் வெண்பா.
கறசைக் கலிப்பா.
இலக்கணக் குறிபபு.
சூரியதீபிகை.
ஐந்திணை விளக்கம்.
ஆத்திசூடி முதற், சூத்திரவிருத்தி
பாகை வெண்பா
முதற்பா.
சப்ததத்துவ சூடாமணி.

---

* இவைதவிர மற்றவை இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட